உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராண நவநீதம்.

யாழ்ப்பாணத்து மல்லாகம்

சைவப்பிரசாரணர்,

சி. செந்திநாதையர்

இயற்றியது.

இஃது

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

விய௵ கார்த்திகை௴.

இதன்விலை அணா-கஉ.

(Copyright Reserved.)

உபோற்காதம்.

"திகடசக்கரச்செம்முகமைந்துளான்" என்னுந் தலைக் காப்புமுதல், "பாராதியேனைப்பொருளாகி" என்னுங் கடைக்காப்பு இறுதியாகக் கச்சியப்பசிவாசாரியசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட அத்தியற்புத அதிமதுர திவ்விய வாக்காகிய கந்தபுராணத்தினின்று சாரமாகத் திரட்டிச் செய்யப்பட்டமையால், இந்நூலுக்குக் கந்தபுராணநவநீதம் என்று பெயர் கொடுக்கப்பட்டது.

எவர்களுக்கும் இயல்பாகவே இனிமைபயக்கும் பால் தேன் சர்க்கரை முதலியவை வாயிலாக வைத்தியன் ஆயுள் வேதப்பிரகாரம் நோயாளிக்கு மருந்து கொடுத்து நோய் நீக்குமாறுபோல, எவர்களுக்கும் இயல்பாகவே இன்பம்பயக்கும் வீரம் பயம் சிருங்காரம் இழிவு புகழ் வியப்பு கருணை நகை உருத்திரம் என்னுங் காவியநவரசங்கள் வாயிலாகக் கச்சியப்பசிவாசாரியர் பதிலக்கணமுதலியவைகளை நமது புல்லறிவுநீங்க உபதேசித்தருளினர்.

கந்தபுராணத்துண்மைப்பொருளை ஆராயாதவர்கள் விபரீதார்த்தங்கொண்டு சிவசுப்பிரமணியக்கடவுளை இகழ்ந்து அதிபாதகர்களாகிய சிவத்துரோகிகளாய் எரிவாய்நரகத்துக்கு இரையாகாவண்ணம் புழுத்த நாயினுங்கடையேனாகிய தமியேன் பாருக்குளே கலியுகத்திலே கண்கண்டபரமதெய்வமாகிய முருகக்கடவுளுடைய திருவடித்தாமரைகளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி, சைவசித்தாந்தசமயத்தின் உயர்வை யுணர்த்தற்குச் சமயப்பிரகரணத்தை முதற்கண்ணும்; இச்சமயத்திற்குரிய நூல்கள் இவைகள்தாம் என உணர்த்தற்கு வேதாகமப்பிரகரணத்தை இரண்டாவதாக

வும்; வேதாகமங்களிலே சொல்லப்பட்ட பொருள்கள் பதி பசு பாசமாமென உணர்த்தற்குப் பதிபசுபாசப்பிரகரணத்தை மூன்றுவதாகவும்; வேதாகமங்களிலே யமைந்த சரியையாதி நிலைகளிலேநின்று சிவபெருமானை வழிபடல்வேண்டுமென்பதை உணர்த்தற்குச் சரியாபாதாதிப்பிரகரணங்களை நான்கு ஐந்து ஆறு ஏழாவதாகவும்; சரியையாதி பாதங்களிலே நின்று உறுதிபெறுதற்கு அன்பு ஒருதலையாக வேண்டப்படுமென்பதை உணர்த்தற்குப் பக்திப்பிரகரணத்தை எட்டாவதாகவும் அமைத்துக் கந்தபுராணநவநீதமென்னும் இச்சிறுநூலை இயற்றினேன்.

குற்றமேதெரிவார்குறுமாமுனி
சொற்றபாவினுமோர்குறைசொல்வராற்
கற்றிலாவென்கவிவழுவாயினு
முற்றுநாடிவல்லோருய்த்துரைக்கவே.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கந்தபுராண நவநீதம்

விநாயகர் காப்பு.

திகடசக்கரச்செம்முகமைந்துளான்
சகடசக்கரத்தாமரைநாயக
னகடசக்கரவின்மணியாவுறை
விகடசக்கரன்மெய்ப்பதம்போற்றுவாம்.

உச்சியின்மகுடமின்னவொளிர்தரநுதலினோடை
வச்சிரமருப்பினொற்றைமணிகொள்கிம்புரிவயங்க
மெய்ச்செவிக்கவரிதூங்கவேழமாமுகங்கொண்டுற்ற
கச்சியின்விகடசக்ரகணபதிக்கன்புசெய்வாம்.

சுப்பிரமணியா காப்பு.

மூவிருமுகங்கள்போற்றிமுகம்பொழிகருணைபோற்றி
யேவருந்துதிக்கநின்றவீராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேண்மலரடிபோற்றியன்னோன்
சேவலுமயிலும்போற்றிதிருக்கைவேல்போற்றிபோற்றி.

நூற்பயன்.

இந்திராகிப்பார்மேலின்பமுற்றினிதுமேவிச்
சிந்தையினினைந்தமுற்றிச்சிவகதியதனிற்சேர்வ
[illegible]கமிலவுணர்தங்களடல்கெடமுனிந்தசெவ்வேற்
கந்தவேள்புராணந்தன்னைக்காதலித்தோதுவோரே.

வாழ்த்து.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன்
கோன்முறையரசுசெய்ககுறைவிலாதுயிர்கள்வாழ்க
நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

முதலாவது

சமயப்பிரகரணம்.

புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும், அகச்சமயமுமெனச் சமயம் நான்குவகைப்படும். அவற்றுள், புறப்புறச்சமயம் உலோகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதமென அறுவகைப்படும். புறச்சமயம் தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரமென அறுவகைப்படும். அகப்புறச்சமயம் சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைரவமென அறுவகைப்படும். அகச்சமயம் பாடாணவாதசைவம், சங்கிராந்தவாதசைவம், அவிகாரவாதசைவம், பரிணாமவாதசைவம், சத்தசைவம், பேதவாதசைவம் என அறுவகைப்படும். இநநால்வகைச் சமயங்களினுந் தலையாய்விளங்குவது, சைவசித்தாந்தமேயாம்.

புறச்சமயங்கள்.

நன்னலமாதரை நண்ணுமின்பமே
யுன்னருமுத்தியென்றுட்கொள்வார்சில
ரின்னனதுறைதொறுமெய்தியாவருந்
துன்னரும்பிறவியுட்டுன்பநீங்கலார். (க)

அறிந்தறிந்துயிர்தொறுமதுவதாகியே
பிறந்திறந்துணர்வெலாம்பெற்றுநோன்பொடு
துறந்துகொன்றிட்டனதுய்த்துக்கந்தமற்
றிறந்திடன்முத்தியாமென்கின்றார்சிலர். (உ)

பெருமைகொள்குலந்தொறும்பிறந்துசெய்திடும்
விரதமுஞ்சிலரும்வினைகண்மாற்றிட
வருகனும்பிறவுமாயங்கம்விட்டுயிர்
பரவுதல்வீடெனப்பகருவார்சிலர். (ங)

காலமுங்கருமமுங்கடந்ததோர்பொருண்
மூலமுண்டோவெனமொழிகின்றார்சிலர்
மேலுமுண்டோசிலவிளம்பவிஞ்சையின்
பாலுறுமுணர்ச்சியேபரமென்பார்சிலர். (ச)

ஆற்றுறுபுனல்படிந்தழுக்குநீக்கலார்
சேற்றிடைவீழ்ந்தெனமறைகள்செப்பிய
நீற்றெருகெண்டிகைநீக்கிவன்மையால்
வீற்றெருகுறிகொடுமேவுவார்சிலர். (௫)

தின்றனதுரிமையைநிகழ்த்திமேன்மையா
வென்றனையயன்றனையெண்ணுவார்சில
ரன்றியுநின்னுடனநேகர்தம்மையு
மொன்றெனவேநினைந்துரைக்கின்ருர்சிலர். (௬)

அகச்சமயம்; சைவசித்தாந்தம்.

அறுசமயத்திற்கடந்தசைவத்தினன்றிவீடிலதெனத்தெளிந்து, பிறரறியாதுதொன்மைபோலிருந்துபிஞ்சகன்மீதுகன்மலரா,லெறிதருதேரரன்பர்தங்கலிங்கமெழிலிகணைத்தலுஞ்சிரத்தை, முறைபுரிசிலைமேன்மோதிஞேர்முதலோர்முத்திபெற்றுடையதம்மூதூர். ()

புறப்புறச்சமயம்.

க. உலோகாயதன்—ஈசன், கன்மம், ஆன்மா என்பன இலவாம், மகளிரிடத்தின்பமொன்றுமே பொருளாமென்பன்.

உ. புத்தரிற் சௌத்திராந்திகன்—உருவம், ஞானம், வேதனை, குறிப்பு, வாசனை என்பன தொடர்ச்சியாய் அழிவது பந்தமென்றும், அவைமுற்றும் ஒழிதலே முத்தியென்றுஞ் சொல்வன்.

௩. யோகசாரன்—சௌத்திராந்திகனிற் சிறிதுவேறுபட்டு, அறிவு அருபமென்றும், பிரபஞ்சம் பொய்யென்றுஞ் சொல்வன்.

௪. மாத்மீகன்—அறிவும், அறியப்படுபொருளுஞ் சூனியமென்றும், அதனலே பிரபஞ்சந் தோன்றுமென்றுஞ் சொல்வன்.

௫. வைபாடிகன்—மஞ்சளும், சுண்ணம்புங் கூடியவிடத்து, சிவப்பொன்று தோன்றுமாறுபோல, இந்திரியங்கள் கூடியவிடத்துப் பிரபஞ்சந்தோன்றுமென்பன்.

சு. ஆருகதன்—ஞானவர்ணீயம் முதலிய எண்குண த்தையும்; பசித்தல் முதலிய பதினெண்குணத்தையும்; அரா சிகம் முதலிய ஆறுகுணத்தையும் விடுத்து, முன்னைக்கன் மம் புசித்துத் தொலைந்தவிடமே வீட்டின்பமென்பன்.

புறச்சமயம்.

க. தார்க்கிகன்—வித்தியாகற்பனை, தோஷம், பிரவி ருத்தி, சனனம், துக்கமென்பவைகளைத் தனித்தனி நீக்கிச் செல்ல, முடிவினின்ற துக்கம் ஒழியுமென்றும், இதுவே முத்தியென்றுஞ் சொல்வன்.

உ. மீமாஞ்சகன்—வேதம் அநாதியென்றும், ஈசனை வேண்டாது கன்மமே பலத்தைக்கொடுக்குமென்றுஞ் சொ ல்வன்.

ஙா. மாயாவாதி—சுத்தமாகிய பரப்பிரமம் மாயோபா தியினாலே வாதிக்கப்பட்டுச் சரீரத்தினுள்ளே சீவான்மாவாக நிற்குமென்றும், சீவான்மாவும் விவேகஞானமடைந்து, மா யாவத்தைகடந்து, பரமான்மாவோடு கடாகாயமும் மகாகா யமும் போல அபேதமாய்விடுமென்றுஞ் சொல்வன்.

ச. சாங்கியன்—புமானாகிய சுத்தபுருடன் அறியா மையுற்றபோது, பிரபஞ்சமெல்லாந் தானென விரிந்து நிற் பனென்றும், விவேகஞானம் எய்தியபோது, அவையெல் லாம் பிரகிருதிக்கேயன்றித் தனக்கில்லையாமென்றுஞ் சொ ல்வன்.

ரு. யோகி—நின்மலசத்துவ பரிணாமரூபமாகிய சித் தவிருத்திகளை உன்முகமாகத் திருப்பி, அவைகளை அவற் றின் முதற்காரணத்திலே ஒடுக்குதலாமென்பன்.

சு. பாஞ்சராத்திரி—நாராயணர் தன்னை வழிபட்டவ ர்களுடைய பந்தத்தைநீக்கி, அவர்களை விரசாநதியிலே மூழ் குவித்துச் சுத்தர்களாக்கி, வைகுண்டத்திலே சாரூபத் தைக் கொடுப்பர் என்பன்.

அகப்புறச்சமயம்.

க. சைவன்—சிவன் தாண்டவபூஷணமூர்த்தியாய் அருள்வர் என்பன்.

உ. பாசுபதன்—சிவன் விபூதியுஞ் சடையுந்தரித்த மூர்த்தியாய் அருள்வர் என்பன்.

ங. மகாவிரதன்—சிவன் என்பு மாலைதரித்தமூர்த்தியாய் அருள்வர் என்பன்.

ச. காளாமுகன்—சிவன் படிகமும் புத்திரதீபமணியுந் தரித்தமூர்த்தியாய் அருள்வர் என்பன்.

ரு. வாமன்—சிவன் அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியாய் அருள்வர் என்பன்.

சா. வைரவன்—சிவன் தமருகமுஞ் சிலம்புந் தரித்த மூர்த்தியாய் அருள்வர் என்பன்.

அகச்சமயம்.

க. பாடாணவாதசைவன்—ஆன்மா முத்தியிலும் சகசமலம் நீங்காது கல்லுப்போலக் கிடக்குமென்பன்.

உ. சங்கிராந்தவாதசைவன்—விகாரமின்றிநிற்கும் ஆன்மசந்நிதியிலே அசத்தாகிய கருவிகளே சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய் நின்று அறியுமென்பன்.

ங. அவிகாரவாதசைவன்—கடியவெய்யிலிலே நடந்தோரால் அடையப்படுகின்ற மரநீழல் போல, பதி விகாரமின்றிநிற்ப, ஆன்மாவானது தானே பக்குவமடைந்தபோது ஞானக்கண்பெற்றுப் பதியைச் சேருமென்பன்.

ச. பரிணாமவாதசைவன்—உயிர்கெட்டுக் கூடி அரனடியில் ஒன்றாய்ப் போமென்பன்.

ரு. சுத்தசைவன்—ஆன்மாவுஞ் சிவமுங் கூடியவிடத்து, ஆன்மா சிவானுபவத்துக்கு உரித்தாகாதென்பன்.

௬. பேதவாதசைவன்—உயிர் மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தபோதே மலம் நீங்கப்பெறுமென்றும் இதுவே முத்தியென்றுஞ் சொல்வன்.

ஏகான்மவாதம்—மாயாவாதமும், பாற்கரியவாதமும், கிரீடாப்பிரமவாதமும், சத்தப்பிரமவாதமுமென நான்குவகைப்படும். ஆசீவகன், பாட்டன், பிரபாகரன், துவிதவாதி, சாத்தேயன், காபாலிகன், சூரியவாதி, மிச்சிரவாதி, கருமவாதி, சிவசமவாதி முதலாய சமயிகள் சிறிதுசிறிது வேறுபாட்டோடு புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் நாற்கூற்றுச் சமயங்களுள்ளே அடங்கி விடுவர்.

உலோகாயதன்—பிருதுவி, அப்பு, தேயு, வாயு தத்துவங்களிலும்; ஆருகதன் குணதத்துவத்திலும்; பௌத்தன்—புத்திதத்துவத்திலும்; சாங்கியன்—பிரகிருதி தததுவத்திலும; மாயாவாதி—புருடதத்துவத்திலும்; காபாலிகன்—காலதத்துவத்திலும்; மகாவிரதன் வித்தியா தத்துவத்திலுமாகப் பொருந்துவர்.

உலோகாயதம்முதல் ஐக்கியவாதம் ஈறாயுள்ள புறப்புறச்சமயமும், புறச்சமயமும், அகப்புறச்சமயமும் என்னும் மூவகைச்சமயத் தெய்வங்கள் எல்லாம் பூதமுதல் அசுத்தமாயாதத்துவம் இறுதியாயுள்ள ஒவ்வோர்தத்துவங்களிலே நிலைபெறும். அகச்சமயத் தெய்வமாய்நின்ற அதிகார போக இலய சிவபேதங்கள் சுத்தவித்தைமுதலாய ஐந்து தத்துவங்களுள் ஒவ்வொன்றிலே நிலைபெறும். அவ்வத்தெய்வங்கள் நிலைபெறுந் தத்துவமே அவ்வச்சமயங்களுக்கு முத்திநிலை யாகும்.

மனோவிகற்பங்களையொழித்து, ஆன்மா முப்பத்தாறு தத்துவங்களுக்குமேலே தன்னுண்மை அறிந்து சீவன்முத்தனுய், அகம் புறம் எங்கும் வியாபித்துச் சிவதருமதருமியாய், சிவதருமமெனப்பட்ட முற்றுணர்வு; வரம்பிலின்பம், அநாதிபோதம், பேரருள், அளவிலாற்றல், தன்வயம், இயற்கையுணர்வு, தூயமேனி என்னும் எண்குணங்களுமுடையனு

ய்,சிவத்துவத்தைப்பெற்றுச் சிருட்டிப்படும் தன்மைமுதலி யனவின்றிச் சிவசமமாதலாகிய உண்மைமுத்தியை உணர்த்துவது சைவசித்தாந்த சமயமேயாம். காஞ்சிப்புராணம் "பேயன்னபுறச்சமயப் பிணக்குநூல்வழியனைத்தும் பிழை யெயன்றி, வாயன்மைதெளிந்துசைவசித்தாந்தவழிதேறியதீ தவாழ்விற், போயண்மியஞ்செழுத்துந்திருநீறுங்கண்டிகை யும்பொருளாக்கொண்ட, நாயன்மார்திருக்கூட்டம்பணிந்தி றைஞ்சும்பெரும்வாழ்வுநான்பெற்றேனால்." தாயுமானவர்:— "சைவசமயமேசமயஞ்சமயாதீதப்பழம்பொருளைக், கைவந் திடவேமன்றுள்வெளிகாட்டுமிந்தக்கருத்தைவிட்டுப்,பொய் வந்துழலுஞ் சமயநெறிபுகுதவேண்டா முத்திதருந், தெய்வ சபையைக்காண்பதற்குச்சேரவாருஞ்செகத்தீரே." "காகமு றவுகலந்துண்ணக்கண்டீரகண்டாகாரசிவ, போகமெனும் பேரின்பவெள்ளம்பொங்கித்ததும்பிப்பூரணமா, யேகவுரு வாய்க்கிடக்குதையோவின்புற்றிடநாமினியெடுத்த, தேகம் விழுமுன்புசிப்பதற்குச்சேரவாருஞ்செகத்தீரே."

இஃது கந்தபுராணத்திலே இரண்டு சகோதரஞானிகள் கதை சொல்லப்படுகின்றது. ஓர்ஞானி தமையன்; மற்றவன் தம்பி. தமையன் பிரமமொன்றொழிந்து மற்றெல்லாம் பொய்யென்றும், தம்பி உலகமொன்றொழிந்து மற்றெல்லாம் பொய்யென்றும், கோடலினால் அவ்விருவர்க்கும் எவர்களாலும் விரும்பற்பாலனவா கிய இரக்கம் வாய்மை கொடை முதலிய புண்ணியங்களிலே விரு ப்புமில்லை; கொலைசெய்தல் களவெடுத்தல் கள்ளுணல் மாமிசம்புசி த்தல் பொய்ச்சாட்சிசொல்லல் பிறன்மனைவிழைதல் வரைவின்மக ளிர் விழைதல் முதலிய பாவங்களிலே வெறுப்பு மில்லை. அவ்வி ருவர்க்கும் கீழும் மேலும் பொய்யாதலினால் நாடவேண்டியதோர் பொருளுமில்லை; ஆசாரமாயிருக்கவேண்டுமென்றேனும், தவஞ் செய்யவேண்டுமென்றேனும், விரதங்கள் அனுட்டிக்கவேண்டுமெ ன்றேனும், பிரமசரியம் முதலிய நிலைகளின் நிற்கவேண்டுமென்றே னும், சிவனுடைய உருவத்திருமேனியைத்தியானிக்க வேண்டுமெ ன்றேனும், சித்தமல மறுத்தல் வேண்டுமென்றேனும், மனசை விடையங்களின்வழியே செல்லாது தடுத்தல் வேண்டுமென்றே னும், கருத்து நிகழாமையினாலே தமையன் ஞானியும் தம்பிஞா னியும் ஒப்பாவார். தமையன்ஞானி மாயாவாதி; தம்பிஞானி

AAAAAAAAAAAAAAAAAAAAAAAAA

உலோகாயதன். மாயாவாதி பசுஞானி, ஆன்மாப்பிரமமெனநிற்றலால்; உலோகாயதன் பாசஞானி, ஆன்மா உலகமென நிற்றலால். பசுஞானி புறச்சமயி; பாசஞானி புறப்புறச்சமயி. பசுஞானம் அசுரனுக்கு அசுரகுருவாகிய சுக்கிரனால் உபதேசிக்கப்பட்டது; பாசஞானம் சுரனுக்குச்சுரகுருவாகிய பிரகஸ்பதியால் உபதேசிக்கப்பட்டது; பாசஞானம் சுரனுக்குச் சுரகுருவாகிய பிரகஸ்பதியால் உபதேசிக்கப்பட்டது. பசுஞானம் சுக்கிரனுபதேசப்படலத்தினாலே பெறப்படும்; பாசஞானம் இந்திரபுரிப்படலத்தினாலே பெறப்படும். இவ்விருஞானமும் இவ்விருதிறத்தார்க்கும் இவ்விருகுரவராலும் பக்குவநிலைக்கியையப் போதிக்கப்பட்டன. சிவமந்திரம் அசுரனுக்கு உபதேசிக்கப்பட்டபோது அவனுக்குப் "பொய்கொலை களவு காமம் புன்மைகளுரூமே போற்றிச் செய்குதிதவத்தை" என்றும், அவனுக்கே பின்னர் பசுஞானம் உபதேசிக்கப்பட்டபோது "கொலையொடு களவு காமங் குறித்திடு வஞ்சமெல்லா நிலையெனப்புரிதி" என்றும் சுக்கிரன் உரைத்தமையால் சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷைபெற்றுச் சிவபெருமானுடைய ஞானனந்தவடிவாகிய திருவடியை நாடிநிற்கும் மெய்யன்பர்களாகிய சைவர்களுக்கு மாயாவாதநெறியும் அந்நெறியைப் போதிக்கும் ஞானவாசிட்டம், வாசுதேவமனனம், பஞ்சதசப்பிரகரணம், தத்துவராயர் பாடல் முதலியனவும் வேண்டப்படாமைபெறப்படுகின்றது; இந்திரனுக்குப் பிரகஸ்பதி உபதேசித்த உலோகாயதமும் பொய்யாமென்பது "புன்றொழிலாகிய பொய்யும் வாய்மையா-மொன்றொருபெரும்பயனுதவுமாயிடின்" என்று இந்திரபுரிப்படலத்திற் கூறப்பட்டமையினாலே பெறப்படுகின்றது. படவே, இவ்விருசமயங்களும் கந்தபுராணத்தினாலே கண்டிக்கப்பட்டமை காண்க.

இரண்டாவது

வேதாகமப்பிரகரணம்.

பிரணவம்.

பிரணவமானது மூலமொழி எனவுந், தனிமொழி எனவும், ஓங்காரம் எனவும், குடிலை எனவும்படும். அது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், எல்லாமந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாயும், காசியில் இறப்பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளுந் தாரகப்பிரமமாயும் உள்ளது. சிவன் ஓங்காரமூலப் பொருளெனப்படுவர். பிரணவம் வலம்புரிச்சங்குவடிவினது.

மேலினியனையசெவ்வேள்விரிஞ்சனைச்சுருதிக்கெல்லா
மூலமதாகின்றமொழிப்பொருள்வினவியன்னான்
மாலுறச்சென்னிதாக்கிவன்சிறைப்படுத்தித்தானே
ஞாலமன்னுயிரையெல்லாநல்கியேநண்ணும்பன்னாள். (க)

என்றுநான்முகனிசைத்தலுமவற்றினுளிருக்கா
மொன்றுநீவிளம்புதியெனமுருகவேளுரைப்ப
நன்றெனுமறையெவற்றிற்குமாதியினவில்வா
னின்றதோர்தனிமொழியைமுன்னோதினனெறியால். (உ)

தாமரைத்தலையிருந்தவன்குடிலைமுன்சாற்றி
மாமறைத்தலையெடுத்தனன்பகர்தலும்வரம்பில்
காமர்பெற்றுடைக்குமரவேணிற்றிமுன்கழறு
மோமெனப்படுமொழிப்பொருளியம்புகென்றுரைத்தான். (௩)

ஈசன்மேவருபீடமாயேனையோர்தோற்றும்
வாசமாயெலாவெழுத்திற்குமறைகட்குமுதலாய்க்
காசிதன்னிடைமுடிபவர்க்கெம்பிரான்கழறு
மாசிறாரகப்பிரமமாமதன்பயனாய்ந்தான். (௪)

தூமறைக்கெலாமாதியுமந்தமுஞ்சொல்லு
மோமெனப்படுமோரெழுத்துண்மையையுணரான்
மாமலர்ப்பெருங்கடவுளுமயங்கினனென்றா
ஞமினிச்சிலைவறித்தனமென்பதாநகையே. (௫)

ஆலமேபுரைகிறத்ததாயமிழ்கினுஞ்சுவைத்தாய்
ஞாலமார்தரவொழுகியகாளிந்திநதிபோய்
மூலமெய்யெழுத்தன்னதோர்முதுவலம்புரியின்
கோலமாகிகோற்றிருத்தியாலுலகருள்குறிப்பால். (௬)

ஆதிதேவனையொருவியேபுடவியிலணுகி
யோதவேலையைமாறுகொள்காளிந்தியுழிப்போய்
வேதமூலநேர்வால்வளையுருக்கொடுவிளங்கி
யேதமில்லதோர்பதுமபீடத்தின்மேலிருந்தாள். (எ)

பிரணவம் சமஷ்டிப்பிரணவம் வியஷ்டிப்பிரணவம் என விருவகைப்படும். சமஷ்டிப்பிரணவம் 'ஓம்' காரம் என நிற்பது; வியஷ்டிப்பிரணவம் அகார உகார மகாரமென நிற்பது. சமஷ்டி தொகுத்துச் சொல்வது, தோட்டமென்பது போல; வியஷ்டி பகுத்துச்சொல்வது, வாழை கமுகு என்பனபோல.

அகார உகார மகாரமென்னும் மூன்றும் முறையே இறந்தகால நிகழ்கால எதிர்காலங்களையும்; சாத்துவிக இராசச தாமச குணங்களையும்; பிரம விஷ்ணு உருத்திரர்களையும்; சிருஷ்டி திதி சங்காரகிருத்தியங்களையும்; காருகபத்திய தக்ஷிண ஆகவனீயாக்கினிகளையும்; இருக்கு யசுர் சாம வேதங்களையும் உணர்த்துமென்க.

ஆதியிருக்குவேதத்தின், ஆதிமண்டலத்தின், ஆதியநுவாகத்தின், ஆதிமந்திரத்தின், ஆதிபதமாகிய "அக்கினி" யின் ஆதியிலும்; மீமாஞ்சை, நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் முதலாய வைதிக சாஸ்திரங்களின் ஆதிசூத்திரங்களின் ஆதிபதமாகிய "அத" வின் ஆதியினும்; ஆதிவியஷ்டிப் பிரணவமாகிய "அ" காரம் விளங்குகின்றது.

தேவாரம் முதல் பெரியபுராணம் இறுதியாயுள்ள பன்னிரண்டு திருமுறைகளின் முதலினும் இறுதியினும் முறையே போந்த "தோடுடைய செவியன்" "நின்றதெங்குநிலவியுலகெலாம்" என்பவைகளின் ஆதியினும் அந்தத்தினுமமைந்த ஓகார மகாரங்கள் புணர்ந்து, ஓமென முடிந்து, திரு

முறைகளின் பொருள் ஓங்காரப்பொருளாகிய சிவபெருமான் என்றுணர்த்தின.

பிரணவமானது வேதகோஷத்துக்கு முன்னும் பின்னும் உச்சரிக்கப்படுகின்றது.

வியஷ்டிப்பிரணவமாகிய நாத, விந்து, மகார, உகார, அகாரங்களைப் பற்றுக்கோடாககொண்டு, அதிசூக்குமை, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும வாக்குக்கள் தோற்றி ஒடுங்குமாமென ஆகமங்கள் செப்பும்.

பிரணவம் உத்கீதையெனவும், சுத்தமாயையெனவும் படும். சுத்தமாயையைத் தன்னியல்பால் இனிது உள்ளபடி காணப்பெறுவோர் அபரமுத்திப் பெரும்போகத்தைப் பெறுவர்; இதற்கு மேலாகிய பேரறிவு ஒருவனுக்கு விளங்குமாயின், அவன் அப்பொழுதே பரமுத்தியைத் தலைப்படுவன்.

துவாதசாந்தத்திலே சர்வேசுரரும், ஓங்காரவாச்சியருமாயுள்ள சிவபெருமான், நாபியினும இருதயத்தினும் புருவமத்தியினும் முறையேயுள்ள அகார உகார மகாரவாச்சியராகிய பிரம விஷ்ணு உருத்திரரை அதிட்டித்துநிற்பர் என்க.

அசுத்தமாயைக்குக் கீழே பிரம விஷ்ணுக்களுக்குத் தோற்றங் கேட்கப்படுதலானும், அசுத்தமாயையினுமுயர்ந்த சுத்தமாயைக்கு மேலே சிவபெருமானுக்கு வியாபகஞ் செப்பப்படுதலானும், பிரணவம் மற்றைத்தேவர்களுக்குப் பிறப்பிடமும், சிவபெருமானொருவருக்கே இருப்பிடமுமாயிற்று.

பிரணவம் அகாரமாய் வாய்திறத்தலினலாகி, உகாரமாய் இதழ்குவிதலினலே நின்று, மகாரமாய் ஒடுங்கி நின்றமையால், எல்லாவுலகங்களும், எல்லாச்சுருதிகளும் அப்பிரணவத்திலே தோன்றி நின்று ஒடுங்குமென்பது துணியப்படும்.

"அ" என்பது சம்ஸ்கிருத திராவிட பாஷைகளுக்கன்றி, உலகத்துள்ள மற்றெவ்வெவ் மிலேச்ச பாஷைகளுக்கும் முதலிலேயமைந்தது. ஓமென்பது ஆமென் எனத்திரிந்து பிறசமயிகளுடைய செப நிவேதனங்களினும் காணப்படுகின்றமையினாலே "சமயகோடிகளெலாந் தந்தெய்வமெந்தெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்ற" ஓங்காரப் பொருளாகிய பரமசிவக் கடவுளுடைய மிகவோங்கிய பிரபாவம் பிரகாசிக்கின்றது. புறச்சமயங்களுள்ளே காணப்படும் ஒவ்வோர் உண்மைத்தருமங்களைக்கொண்டு அவ்வச்சமயங்களெல்லாம் மெய்யென்பது, யானையின் காலையும், வாலையும், காதையும், கையையும் தனித்தனி தடவிய ஒவ்வோர் முழுக்குருடரும் அந்தயானையை முறையே உரலென்றும, துடைப்பமென்றும், முறமென்றும், உலக்கையென்றுஞ் சாதிக்கத்துணிந்த குளறுபடைபோலாம்; சைவசித்தாந்தி ஒருவனே அவ்வியானையினுறுப்புக்கள முழுதையும அறிந்து, அக்குளறுபடைகளுக்குச் சமாதானஞ் செய்யவல்ல கண்ணுடையானொருவன் போலாம். சிவதருமோத்தரம்:—"ஓமென்னும் பதமதனில் வேதமாதியுற்பவிக்கு மாலவித்தி னுதிக்குமாபோல், ஓமென்னும் பதமதனை யுரைத்தார்தாமே யோதினர்கள் வேதாதி யுரைகளெல்லா, மோமென்னும் பதப்பொருளை யுணர்ந்தார் தாமே யுணர்ந்தாரும் வேதாதி யொருமைகூர, வோமென்னும பதமொழித்தஞ் செழுதது மாதர்க்கொழுங்குடைய சூத்திரர்க்கு முரைக்கலாமே."

வேதாகமோற்பத்தி.

சிவபெருமானிலிருந்தே வேத சிவாகமங்கள் பிறந்தன.

உன்னிடைப்பிறந்தவேதமுன்பெருநிலைமைதன்னை
யின்னதென்றுணர்ந்ததில்லையாமுனையறிவதெங்ஙன
னன்னையும்பயந்தோன்றானுமாயினையதனான்மைந்தர்
பண்ணியபுகழ்ச்சியாவும்பரிவுடன்கேட்டிபோலாம். (அ)

ஏற்றமதாகியமறைக்கும்யாழுணஞ்
சாற்றியவாகமந்தனக்குமாங்கது
வீற்றறவருவதுமன்றுமேன்மையா
லாற்றவுநமதியலறையுநீரதே. (கூ)

ஆனதன்ளியற்கைகளனைத்துங்கண்ணுதல்
வானவனுகமமறையின்வாய்மையான்
மேனிகழ்தொகைவகைவிரியதாகவே
தானருள்புரிந்தனன்றலைவிகேட்கவே. (௧0)

வேதமேமுதலாவுள்ளவியன்கலையனைத்துந்தோன்று
ளோதிஞனவனேயெங்கட்குரைத்திடவுணர்ந்தாமன்றே
யீதுநீயவற்றிற்காண்டியாருமொன்ருகக்கொண்டாய்
பேதையோபெரிதுமென்னப்பிதாமகனிலையசொற்ருன். (௧௧)

"ஆப்தர் உள்ளது கூறுவோர். சாமானியமனுடரினும் விசேடமனுடர் மேலாகிய ஆப்தர்; அவரினும் இருடிகள் மேலாகிய ஆப்தர்; அவரினுந் தேவர்கள் மேலாகிய ஆப்தர்; அவரினும் பிரமா மேலாகிய ஆப்தர்; அவரினும் விஷ்ணு மேலாகிய ஆப்தர்; அவரினும் உருத்திரர் மேலாகிய ஆப்தர்; அவரினும் மகேசுரர் மேலாகிய ஆப்தர்; அவரினுஞ் சதாசிவர் மேலாகிய ஆப்தர்; அவரினும் மேலாகிய ஆப்தர் இன்மையால் அவரே அதிபரமாப்தர் எனப்படுவர்." இந்த அதிபரமாப்தராய், பஞ்சமந்திர சரீரியாயுள்ள சதாசிவநாயனாலே பிரதம மகாசிருட்டி ஆரம்பத்திலே ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்யப்பட்ட சுருதியும், அதிபாரமார்த்திக வாக்கியமாகிய சுவதந்திரப்பிரமாணமாகும். முற்றறிவு முற்றுத் தொழிலுடைய சிவபெருமான் சிறிதும் பிரயத்தனமில்லாமலும், ஆயாசமில்லாமலுஞ் சுருதியை அருளிச்செய்தார் என்பது தோன்ற, பிரகதாரணியோபநிடதம் இருக்காதிகளைப் பிரமத்தினது சுவாசம் என்று கூறிற்று. இந்தச்சுருதி சாமானியசுருதி விசேஷசுருதி என இருதிறப்படும். சாமானியசுருதி வேதம்; விசேஷசுருதி ஆகமம்.

பரப்பிரமத்தினின்றுந் தோன்றி இருக்கு யசுர் சாமம் அதர்வம் பிரகாசிக்கின்றன என்று யசுர்வேதத்திலே முப்ப

த்தோராம் அத்தியாயத்திலே ஏழாம் மந்திரஞ் செப்புகின்றது. உண்மைப்பொருள்களைக் கேட்டற்குக் கருவியாதலினாலே சுருதியெனவும், உண்மைப்பொருள்களை முற்றும் உணர்தற்கும், வருவித்தற்குங் கருவி யாதலினாலே, ஆகமம் எனவும், நியதமாக உணர்தற்குக் கருவியாதலினாலே நிகமம் எனவும், ஆதிகுருவினின்றுந் தொடங்கிப் பாரம்பரியமாகப் பயிலப்படுதலினாலும், கற்கப்படுதலினாலும், ஆம்நாயமெனவும், சுயம்புவாகிய பதியினின்று தோன்றினமையால் சுயம்பு எனவும், வேதஞ் சொல்லப்படும்; வேதம் என்னுஞ் சொல் அறிதற்குக் கருவியெனப் பொருள்படும். இவ்வேதத்துக்கு அங்கங்கள் சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என ஆறும். அவற்றுள், "சிட்சையாவது வேதத்தின் உச்சாரண லக்ஷணத்தை உணர்த்துவதாம். வியாகரணமாவது வேதத்தின் பதலக்ஷணத்தை விவரிப்பதாம். நிருத்தமாவது வேதத்தின் பதங்களுக்கு விவரணங்கூறுவதாம். சோதிடமாவது லக்கினம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் வைதிககருமங்களுக்குக் காலம் அறிவிப்பதாம். கற்பமாவது ஆசுவலாயனீயம், போதாயனீயம், ஆபஸ்தம்பம் முதலிய சூத்திரரூபத்திருந்து, வைதிககருமங்களைப் பிரயோகிக்கும் முறைமையைக் கற்பிப்பதாம். சந்தோவிசிதியாவது வேதத்தின் உக்தைமுதலிய சந்தோபேதங்களுக்கு அக்ஷரசங்கியை கற்பிப்பதாம்." சிவபெருமானையே உண்மைப்பொருளாகக் கொண்ட வேதத்துக்குப் பாதங்கள் சந்தோவிசிதியாம்; கைகள் கற்பமாம்; கண்கள் சோதிடமாம்; காதுகள் நிருத்தமாம்; நாசி சிட்சையாம்; முகம் வியாகரணமாம்.

இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்பவை சிவனது மற்றைமுகங்களிற் பிறந்தன, காமிகம் முதலிய சிவஞானம் ஊர்த்துவச்சுரோதோற்பவங்களாகி மேன்முகத்திற் பிறந்தன என்று காமிகாகமஞ் செப்புகின்றது. ஆ. என்பது பாசமெனவும், க. என்பது பசுவெனவும், ம. என்பது பதியெனவும் பொருள்படும்: படவே, ஆகமம் திரிபதார்த்தங்களை

உணர்த்துமென்றவாறுயிற்று. ஆ. என்பது சிவஞானமும், க. என்பது மோட்சமும், ம. என்பது மலநாசமுமாகும்: ஆகவே, ஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து,மோட்சத்தைக்கொடுக்குமென் றவாறுயிற்று எனக் கொள்ளுதலுமாகும். ஆகமமானது— காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிர ணம், வாதுளம் என இருபத்தெட்டாம். இவ்வாகமங்கள் மாந்திரமெனவும், தந்திரமெனவும், சித்தாந்தமெனவும் பெ யர்பெறும். "இவ்விருபத்தெட்டுச் சிவாகமங்களுக்கும் ஒவ் வொன்றுக்குக் கோடிகிரந்தமாக இருபத்தெட்டுக்கோடி கிர ந்தங்களாம். இவை ஞானபாதம்,யோகபாதம்,கிரியாபாதம், சரியாபாதம் எனத் தனித்தனி நான்குபாதங்கள் உடையன வாயிருக்கும். இவற்றுள் ஞானபாதம் பதி பசு பாசம் என் னும் திரிபதார்த்தங்களின் ஸ்வரூபத்தையும், யோகபாதம் பிராணாயாமமுதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத் தையும், கிரியாபாதம் மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந் தனம், பூசை, செபம், ஓமம் என்பனவற்றையும், சமய விசேஷ நிருவாண ஆசாரியாபிஷேகங்களையும், சரியாபாதம் சமயாசாரங்களையும் உபதேசிக்கும்." சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகசம் கணைக்கால்களும், சிந்தி யம் திருவடிவிரல்களும், காரணம் கெண்டைக்கால்களும், அசிதம் முழந்தாள்களும், தீப்தம் தொடைகளும், சூக்குமம் தெய்யத்தானமும், சகச்சிரம் கடித்தானமும், அஞ்சுமான் முதுகும், சுப்பிரபேதம் கொப்பூழும், விசயம் உதரமும், நிச் சுவாசம் நாசியும், சுவாயம்புவம் முலைகளும், ஆக்கினேயம் கண்களும், வீரம் கழுத்தும், ரௌரவம் செவிகளும், மகு டம் திருமுடியும், விமலம் கைகளும், சந்திரஞானம் மார்பும், முகவிம்பம் திருமுகமும், புரோற்கீதம் திருநாக்கும், இலலி

தம் கபோலங்களும், சித்தம் திருநெற்றியும், சந்தானம் குண்டலமும், சருவோத்தம் உபவீதமும், பாரமேஸ்வரம் ஆரமும், கிரணம் இரத்தினாபரணங்களும், வாதுளம் திருப்பரிவட்டமும், காலோத்தரம் திருமேற்பூசசும், மற்றை உபாகமங்களெல்லாம் பரிமளத்திரவியங்களும் புஷ்பங்களும், சைவசித்தாந்தம் நைவேத்தியமுமாம்.

ஆகமங்கள் வேதங்களிலே பேசப்படாமை, வேதங்கள் சூத்திரம்போன்றும், ஆகமம் பாஷ்யம் போன்றும் விளங்குகின்றமையாலேயாம்; இது மூலத்திலே வியாக்கியானங்களைக்குறித்து யாண்டும் பேசப்படாத உண்மையினாலும் புலப்படும்.

வேதங்கள் வன்சொற்களினாலே புணர்க்கப்பட்டமையும், ஆகமங்கள் மென்சொற்களினாலே புணர்க்கப்பட்டமையும், வேதங்கள் கன்மானுசாரமாகப் பலர்க்கும் பலபொருள் கொள்ளக்கிடக்குஞ் சூத்திரமாதலினாலும், ஆகமம் சத்தினிபாதமுடையார்க்கு அதனைத் தெளித்துணர்த்தும் பாஷ்யமாக ஒருபொருள் கொள்ளக்கிடத்தலினாலுமென்க.

வேதாகமங்களுக்குத் தோற்றங்கள் பலவாகச் செப்பப்படுதல் சிருட்டிபேதத்தாலென்க.

வேதாந்தம்.

ஆதிகற்பத்திலே துவாபரயுகத்திலே ஆன்மாக்கள் செய்த தீவினையினாலே வேதங்களெல்லாம் அடிதலை தடுமாறினமையால், தேவர் முனிவர் மனிதராயினோர் மதிமயங்கி மெய்யுணர்வு இறந்து வேதநெறியை விடுத்துப் பல புறச்சமய நெறிகளைக் கற்பித்தொழுகுவாராயினார்; அதனாலே சிவாஞ்ஞையைவகித்து வியாசமுனிவர் அவ்வேதங்களை இருக்குமுதலிய நான்காக வகுத்தருளினார். இந்நான்கு வேதங்களின் அந்தம் உபநிடதம் எனப்படும்.

மூக்தொருகாலத்தின்மூவுலகந்தன்னில்
வந்திடுமுயிர்செய்தவல்வினையதனாலே
யந்தமின்மறையெல்லாமடிதலைதடுமாறிச்
சிந்திடமுனிவோருந்தேவருமருளுற்றார். (கஉ)

ஆனதோர்பொழுதின்கணமாருமுனிவோரு
மாநிலமிசைவைகுமாக்களுமிறையுள்ள
ஞானமதிலராகிநவின்மறைநெறிமாற்றித்
தீநெறிபலவாற்றிப்பனுவல்கள்சிலசெய்தார். (கங)

போந்தவணிருந்தபின்புகரிலாமறை
யாய்ந்திடின்வந்திடுமவற்றைநால்வகை
வாய்ந்திடநல்கியேமரபினோர்க்கெலா
மீய்ந்தனையவரகத்திருளைநீத்தியால். (கச)

மோனகமுற்றியமுனிவர்மேலவன்
றானுணர்மறையெனுந்தரங்கவேலையி
லானதோர்பொருளினையறிஞர்பெற்றிடத்
தூநெறிகொண்டநாற்றுறைசெய்தானரோ. (கரு)

மேற்றிகழுபநிடவேதவாய்மையாற்
போற்றலும்வந்ததென்புகறியாலெனச்
சாற்றினனுயிர்தொறுந்தங்கித்தொல்வினை
தேற்றுபுவினைமுறைசெலுத்துந்தொன்மையோன். (கசு)

இருக்குவேதம் இருபத்தொருசாகைகளையும், யசுர்வேதம் நூற்றொன்பது சாகைகளையும், சாமவேதம் ஆயிரஞ் சாகைகளையும், அதர்வவேதம் ஐம்பது சாகைகளையுமுடையனவாம். அவற்றுள், அற்பச்சுருதி வாக்கியம் கர்மாநுஷ்டானக்கிரமங்களைச் சொல்லும், பிரபலச்சுருதிவாக்கியம் அத்தியான்மக ஞானத்தைச் சொல்லும். இது ஆயிரத்து நூற்றெண்பது உபநிஷத்தாயிருக்கும. இவைகளுள்ளே அதிசாரமாயும் இரகசியமாயுமுள்ள உபநிடதங்கள் நூற்றெட்டு.

இருக்குவேதத்துக்கு உள்ள உபநிடதங்கள் ஐதரேயம், கௌஷீதகி, நாதவிந்து, ஆத்மப்பிரபோதம், நிருவாணம், முத்கலை, அக்ஷமாலிகை, திரிபுரை, சௌபாக்கியம், வக்விருச்சானை என்னும் பத்துமாம்.

யசுர்வேதத்துக்கு உள்ள உபநிடதங்கள் கடவல்லி, தைத்திரீயம், பிரமம, கைவல்லியம், சுவேதாச்சுவதரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்கினிருத்திரம், க்ஷுரிகை, சர்வசாரம், சுகரகசியம், தேசோவிந்து, தியானவிந்து, பிரமவித்தியை, யோகதத்துவம், தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரகம், யோகசிகை, ஏகாக்ஷரம், அட்சியம், அவதூதம், கரம், உருத்திரவிருதயம், யோககுண்டலினி, பஞ்சப்பிரமம், பிராணாக்கினிகோத்திரம், வராகம், கலிசந்தரணம், சரசுவதி, ஈசாவாசியம, பிருகதாரணியம், சாபாலம, அமசம், பரமகமசம, சுபாலம், மந்திரிகை, நிராலமபம, திரிசிகி, மண்டலம், அத்துவயதாரகம, பைங்கலம், பிட்சு, துரியாதீதம, அத்தியாத்துமம், தாரசாரம், யாஞ்ஞவலகியம, சாட்டியாயணி, முத்திகம என்னும ஐம்பத்தொன்றுமாம.

சாமவேதத்துக்கு உள்ள உபநிடதங்கள் கேனம், சாந்தோக்கியம, ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி, வச்சிரசூசிகம், யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியக்தம, குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்கசாபாலம், தரிசனம், சாபாலம என்னும் பதினாறுமாம்.

அதர்வவேதத்துக்கு உள்ள உபநிடதங்கள் பிரச்சினம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகச்சாபாலம், நிருசிம்மதாபனி, நாரதபரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத்வீயமகாநாராயணம், இராமரகசியம், இராமதாபனி, சாண்டில்லியம், பரமகம்சபரிவிராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம், பாசுபதம், பரப்பிரமம, திரிபுராதபினி, தேவி, பாவனை, பஸ்மஜாபாலம், கணபதி, மகாவாக்கியம், கோபாலதபனம், கிருஷ்ணம், அயக்கிரீவம, தத்தாத்திரேயம், காருடம என்னும் முப்பத்தொன்றுமாம்.

இவற்றுள்ளே அதர்வசிரோபநிடதம், அதர்வசிகோபநிடதம், கைவல்யோபநிடதம், சுவேதாச்சுவதரோபநிடதம்,

காலாக்கினிருத்திரோபநிடதம் என்னும் ஐந்தும் பஞ்சருத்திரமெனப்படும்.

வேதத்திலே பூருவபக்கமாகச் சொல்லப்பட்டுப் பின்னர்க் கண்டிக்கப்பட்ட சில பக்கங்களையே சிலர் சித்தாந்த பக்கமாமெனக் கொண்டு, சித்தாந்தவாக்கியங்களுக்குப் பெரியோர் உரைக்கும உண்மைப்பொருளைவிடுத்து, தாம்கொண்ட விபரீதபக்கங்களுக்கிசையப் பொருள் கற்பித்து, அங்ஙனம் தாம் கற்பித்த மீமாஞ்சை மாயாவாதம் பாஞ்சராத்திரம், முதலிய சமயங்களைத் தனித்தனியே வைதிக சமயங்களாமென முடித்து, அவ்வைதிக சமயங்களை விரித்துணர்த்தி ஒவ்வோர் நூல்கள் செய்தார்கள். வேதத்தின் ஞானகாண்டம் ஆகமத்தின் ஞானகாண்டம் என்னும் இரண்டும் திரிபதார்த்த இலக்கணங்களையே கூறுவனவாயினும் வேதத்தின் ஞானகாண்டத்துண்மைப்பொருள் நிருவாணதீட்சை செய்யப்பெற்றுச் சித்தாந்தத்தை ஓதியுணர்ந்தோர்க்கே விளங்குமென்க. இவ்வுண்மை சனகராதி நால்வரும் வேதோபநிடதங்களை நெடுநாள்வரையும் ஓதியும் ஞானம் நிலைபெறாதவராயினர் என்றும், பின்பு ஆகமாந்தம் என்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம் நிலைபெற்றனர் என்றும் காந்தத்திலே சங்கரசங்கிதையிற் கூறியவாற்றாற் றெளியப்படும்; படவே, சித்தாந்தம் வேதாந்தத்தின் தெளிவாயும் சாரமாயுமுள்ளது என்பது பெறப்பட்டது. பண்டாரமும்மணிக்கோவை:—"குடிலையென்னுந் தடவயலுப்ப-ணருள்வித்திட்டுக் கருணைநீர்பாய்ச்சி, வேதமென்னும் பாதவம்வளர்த்தனை - பாதவமதனிற் படுபயன்பலவே-யவற்று—ளிலைகொண்டுவந்தனர்பலரே - யிலையொரீத் - தளிர்கொண்டுவந்தனர் பலரே - தளிரொரீஇ-யரும்பொடுமலர்பிஞ் சருங்காயென்றிவை-விரும்பினர்கொண்டு கொண்டுவந்தனர்பலரே - யவ்வாறுறுப்பு மிவ்வாறுபயப்ப-வோரும்வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த-வாராவின்பவருங்கனிபிழிந்து - சாரங்கொண்ட சைவசித்தாந்தத்-தேனமுதருந்தினர் சிலரே-யானவர் - நன்னிலைபெறுதற் கன்னியனுயினு மன்னவர்கமலப்பொன்னடி

விளக்கியத் - தீம்புளலமுதமார்ந்தனனதனுல் - வேம்பெனக் கொண்டனன் விண்ணவரமுதே."

வேதாந்தசூத்திரம்.

உபநிடதங்களை உற்றுநோக்கி வியாசமுனிவர் இயற்றிய சூத்திரரூபமாகிய பிரமமீமாஞ்சை வேதாந்தமெனப்படும்.

எத்திசைசுருதிகளிசைக்குமாண்பொருண்
மாத்திரைப்படாவெனுமாசில்காட்சியர்
பார்த்துணர்பான்மையாற்பலவகைப்படச்
சூத்திரமானவுஞ்சொற்றுவைகினுன். (கஎ)

இது உத்தரமீமாஞ்சை எனவும், சாரீரகசூத்திரமெனவும், வேதாந்தசூத்திரம் எனவும்படும். இந்தவேதாந்தசூத்திரம் நான்கு அத்தியாயங்களையும், பதினாறுபாதங்களையும், நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும், ஐஞ்ஞூற்றைம்பத்தைந்து சூத்திரங்களையும் உடையது. வேதாந்தசூத்திரத்தின் முதலாம் அத்தியாயத்திலே பிரமமாகிய சிவத்தினியல்பும், இரண்டாம் அத்தியாயத்திலே சாங்கிய முதலிய புறச்சமய விரோதபரிகாரமும், மூன்றும் அத்தியாயத்திலே வித்தியாசாதன நிர்ணயமும், நான்காம் அத்தியாயத்திலே ஞானசாதனபலமாகிய வீடுபேறும் பேசப்படும்.

முதலாம் அத்தியாயத்தின், முதலாம்பாதத்தின், முதலாம் சூத்திரம் பிரமேயவிஷயத்தையும், இரணடாம் சூத்திரம் பிரமாதாவிஷயத்தையும், மூன்றும் சூத்திரம் பிரமாணவிஷயத்தையும் சொல்லும். பிரமாதா பிரமாணம் பிரமேயம் என்பன முறையே, ஞாதிரு ஞான ஞேயங்களை உணர்த்தும். (ஞாதிரு-ஆன்மா; ஞானம்-சிவஞானம்; ஞேயம்-சிவம்) இதனுலே திருவள்ளுவர் குறளும், வேதோபநிடதமும், தேவார திருவாசகமும், திருக்கோவையாரும், திருமந்திரமும் போல இவ்வேதாந்தசூத்திரமும் பதி பசு பாசங்களை அறிவு

றுத்துஞ் சாத்திரமாம் என்க. ஔவையார்:—"தேவர்குறளுந் திருநான்மறைமுடிவு, மூவர்தமிழு முனிமொழியுங், கோவை—திருவாசகமுந் திருமூலர் சொல்லு, மொருவாசகமென்றுணர்."

வேதாந்தசூத்திரத்து மெய்ப்பொருள் வேத சிவாகமமிரண்டையும் நன்குணர்ந்த நீலகண்டசிவாசாரியர் உரைத்த பாஷ்யத்தால் இனிதுவிளங்கும்; மற்றைச் சங்கராசாரியர், இராமாநுசாசாரியர், மத்துவாசாரியர் உரைத்த பாஷ்யங்களும், பிரகரணங்களும் சிவாகமத்துக்கு மறுதலைப்பட்ட மாயாவாத வைணவ மாத்துவ சமயநூற்பொருளுடையனவாம்.

மி ரு தி.

கருப்பாதானம், சீமந்தம், நாமகரணம், உபநிட்டாணம், அன்னப்பிராசனம், சௌளகருமம், உபநயனம், சந்தியாவந்தனம், அக்கினிகாரியம், போசனவிதி முதலிய வைதிக கருமங்களை அறிவிப்பதாம்.

அடைதலுமதனைநோக்கியறிதருமுனிவனுண்டை
விடையவனடியார்யார்க்கும்வேண்டியவேண்டியாங்கே
கொடுதுபல்வளனுமீந்துநிறைதருதிங்கடோறுங்
கடனியன்மரபுமாற்றிக்காசியின்மேவினானே. (கஅ)

தந்தையுமதனைக்கேளாத்தடம்புனற்கங்கைமூழ்கி
யந்தணர்முதலோர்க்கெல்லாமாடகம்பலவுநல்கி
மூந்துறுகடன்களாற்றமுளரிமேன்முனிவன்மேவி
மைந்தனுக்குரியநாமமார்க்கண்டனென்றுசெய்தான். (ககூ)

மறுப்படாத்திங்கள்போலவளர்தலுமதியந்தோறு
முறுப்படையுபநிட்டானமோதனம்பிறவுமுற்ற
நெறிப்படுமோரியாண்டினெடுஞ்சிகைவினையுமாற்றிச்
சிறப்புடையிரண்டாமாண்டிற்செவிநெறிபுரிதலுற்றான். (உ0)

ஏதமிலைந்தின்முந்நூலிலக்கணவிதியுஞ்செய்தே
யோதிடுங்கலைகளெல்லாமுள்ளுறவுணர்த்துங்காலை

வேதமும்பிறவுங்கொண்டவியன்பொருடெரிந்துமேலா
மாதியேசிவனென்றெண்ணியவனடியரனென்றுற்றான். (உக)

அந்தியின்மறைமொழியயர்த்துவைகினன்
சந்தியில்வினைகளுந்தழலுமோம்பல
னெந்தையைவழிபடுமியல்புநீங்கினன்
முந்தையினுணர்ச்சியுமுடிந்துளேனெனும். (உ௨)

பெருநீரடங்குசிறுகையினூடுபெறவுய்த்ததோயமதனை
யிருபான்மையுண்டியதுசூழும்வண்ணமிசையோடுசுற்றியதுதா
னொருகாலுகர்ந்துபலகாலினுக்குமுதவிப்பினுள்ளபடியு
மருகாதுசெய்துமிகவேவிரும்பியயில்வான்றவங்கள்பயில்வான். (௬)

கருப்பாதானம் முதலாயின இம்மையிலே சரீரத்தைச் சுத்திசெய்யுமென்றும்,மறுமையிலே புண்ணியலோகத்தைக் கொடுக்குமென்றும் மனுஸ்மிருதி இரண்டாம் அத்தியாயத்து இருபத்தாறும் சுலோகஞ் செப்புகின்றது. இவை ஞானார்த்தமாக ஞானதீக்ஷையிலே கொள்ளப்படும். "அழிவிடைமூலாதாரத்தரனருட்சத்திமேவு, மெழிறிகழ்யோகத்தன்னாரிடத்தினிற்புதல்வனுவி, வழுவறவாங்கியோனிமன்னுவித்திடவமைத்த, லழகம ரிருதுசங்க மாமென வறையுநாலே." "பிரிவுறு மலத்தினின்றே பிரித்துருத்திரனாற்காவி, யரியசேர்ப்புதல்வனுதலழகியகருப்பாதானங், திருவருள்சுதந்தராதி செறிதருகுணங்க ளெல்லா, மருவுதருனேபும்சவனமெனமதிப்பர்மேலோர்." "அருவமாமாயையாவியறிவுறுவிவேகந்தானே, திருவளர்தவத்தின்மிக்கோய் சீமந்தோன்னயனமெல்லாந், தருசிவமுதலதான சதாசதப்பொருளையாங்கே, மருவியுட்கோடலூனேமதித்திடிற்சனனமாமே." "திரிமலமகன்று தன்னுட் சிவத்துவந்தோன்றலூனே, பெரியதோர்நாமமென்றேபேசுவரறிவின்மிக்கோர், தெரிவுறுசிவத்துவத்தைத்தேருதறன்னைத்தானே, மருவுறுமுபநிட்கிராமணமெனமதிப்பர்மன்னே." "பொருவறுபரமானந்தம்புசித்திடலதனைத்தன்னுட், பிரிவுறுதுறையுமன்னப்பிராசனமென்பர்மேலோர், துரிசறுசிவமேமேலாய்த்தோன்றுதலெவர்க்கும்யாதொன், றரியதோர்சௌளமாமென்றறைவர்தத்து

வமுணர்ந்தோர்.'' அலகிலாப்பாசசாலமகற்றுமெய்ஞ்ஞான நூலோ, டுலவுதலொன்றினாலுமுபயநந்தாமென்பர், நில விடாதிந்தியத்தினீடறிவினைமறைத்தல்,பலர்புகழ்விரதாதே சப்பான்மையாம்பகருங்காலே.''

மனுஸ்மிருதி பன்னிரண்டு அத்தியாயங்களையுடையது. முதலாம் அத்தியாயத்திலே மனு, வேதம், பிரளயம், பிரகிருதி, யுகதருமம், வருணதருமம் முதலாயினவும்; இரண்டாம் அத்தியாயத்திலே தருமம், புண்ணியக்ஷேத்திரம், சாதகருமம், போசனநியமம், வேதாத்தியயனம், நித்தியகருமம் முதலாயினவும்; மூன்றும் அத்தியாயத்திலே கிரகஸ்தாச்சிரமதருமம், பஞ்சமகாயஞ்ஞம், சிராத்தபோசனம், பிண்டம் முதலாயினவும்; நான்காம் அத்தியாயத்திலே பிராமணர் முதலாயினோர் சீவனோபாயம், சிராவணவிதி, இயமநியமம் முதலாயினவும்; ஐந்தாம் அத்தியாயத்திலே ஆசௌசம், பஞ்சலோகசுத்தி, சௌசவிதி, மாதரொழுக்கம் முதலாயின வும்; ஆறும் அத்தியாயத்திலே வானப்பிரஸ்த சந்நியாச ஆச்சிரமங்களும்; ஏழாம் அத்தியாயத்திலே இராசதருமம், யுத்ததருமம், உலகபரிபாலனம் முதலாயினவும்; எட்டாம் ஒன்பதாம் அத்தியாயங்களிலே கடன்கோடன் முதலிய பதினெண்வகை விவகாரங்களும்; பத்தாம் அத்தியாயத்திலே சங்கரசாதி, பிராமணர் முதலிய வருணத்தார் தொழில்கள் முதலாயினவும்; பதினோராம் அத்தியாயத்திலே பஞ்சமகாபாதகங்கள் முதலாயினவும்; பன்னிரண்டாம அத்தியாயத்திலே பாவ புண்ணிய பலன்களும், அத்தியான்ம தியான யோகமும் கூறப்பட்டன. ஸ்மிருதிகள் மனுஸ்மிருதி, பிரகஸ்பதிஸ்மிருதி, தக்ஷஸ்மிருதி, யமஸ்மிருதி, கௌதமஸ்மிருதி, அங்கிரஸ்மிருதி, யாஞ்ஞவல்கியஸ்மிருதி, பிரசேதஸ்மிருதி,சாதாதபஸ்மிருதி, பராசரஸ்மிருதி, சம்வர்த்தஸ்மிருதி, உதனஸ்மிருதி, சங்கஸ்மிருதி, லிகிதஸ்மிருதி, அத்திரிஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி, ஆபத்தம்பஸ்மிருதி, ஹாரீதஸ்மிருதி எனப் பதினெட்டாம்.

புராணம்.

வேதநூலை ஓதியுணர்ந்தும் மெய்ப்பொருட்டுணிவு பிறவாதவர்க்கும், வேதத்துக்கு அருகரல்லாதவர்க்கும் பயன்படும்பொருட்டுப் பதினெண்புராணங்களைச் சிவபெருமான் முன்னரே நந்திக்கு உபதேசித்தார்; அவர் அவைகளைச் சனற்குமாரமுனிவருக்கு உபதேசித்தார்; சனற்குமாரமுனிவர் வியாசமுனிவருக்கு உபதேசித்தார். வியாசமுனிவர் சூதமுனிவருக்கு உபதேசித்தார். புராணம் பதினெட்டு, அவையாவன:—சைவபுராணம், பவிஷியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம், காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவதபுராணம், பிரமபுராணம், பதுமபுராணம், ஆக்கினேயபுராணம், பிரமகைவர்த்தபுராணம், என்பனவாம். அவற்றுள், சைவபுராணமுதல் பிரமாண்டபுராணம் இறுதியாகியபத்துஞ் சிவபுராணங்கள். காருடபுராணமுதல் பாகவதபுராணம் இறுதியாகிய நான்கும் விட்டுணுபுராணங்கள். பிரமபுராணம் பதுமபுராணம் என்னும் இரண்டும் பிரமபுராணங்கள். ஆக்கினேயம் அக்கினிபுராணம். பிரமகைவர்த்தம் சூரியபுராணம்.

அன்னதோர்மறையினையறிந்துமையமா
வுன்னியநிலையினருள்ளந்தேறவு
மன்னவரல்லவர்மரபிற்றேரவு
மின்னமோர்மறையுளதிதுவுங்கேண்மதி. (உச)

என்பெயரதற்கெனிலினிதுதேர்ந்துளோர்
துன்பமதகற்றிடுந்தொல்புராணமா
மொன்பதிற்றிருவகையுண்டவற்றினை
யன்புடைநந்திமுன்னறியக்கூறினேம். (உரு)

நாதனாருள்பெறுநந்திதந்திடக்
கோதிலாதுணர்சனற்குமரன்கூறிட
வாதராயணமுனிவகுப்பவோர்ந்துணர்
சூதனோதியதுமூவாறுதொல்கதை. (உசா)

எதிரில்சைவமேபவிடியமார்க்கண்டமிலிங்க
மதிகொள்காந்தநல்வராகமேவாமனமற்சம்
புதியகூர்மமேபிரமாண்டமிவைசிவபுராணம்
பதுமமேலவன்புராணமாம்பிரமமேபதுமம். (உஎ)

கருதுகாருடநாரதம்விண்டுபாகவத
மரிகதைப்பெயராக்கினேயம்மழற்கதையா
மிரவிதன்கதைபிரமகைவர்த்தமாமிவைதாந்
தெரியுமொன்பதிற்றிருவகைப்புராணமாந்திறனே. (உஅ)

சிவபுராணம் பத்தும் சாத்துவிகங்களாம்; விஷ்ணு புராணம் நான்கும் தாமசங்களாம்; பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். அக்கினிபுராணமும், சூரியபுராணமுந் திரிகுணயுத்தமாம்.

பிரமவிஷ்ணுக்களுடைய பிறப்பு இறப்புக்கள், உலக சிருட்டிகள், பிரபஞ்சத்தினது விரிவுகள், சிவலிங்கத்தினின்று யாவும் உற்பத்தியாதல், சிவலிங்கவழிபாடு, புண்ணிய காலம், புண்ணியக்ஷேத்திரம், புண்ணியார்த்தம், பிரமவிஷ்ணுக்கள் சிவலிங்க வயத்தராயினமை, சிவலிங்கத்துக்குப் புஷ்பமுதலிய உபகரணங்கள் கொண்டு பூசித்தல், சிவபெருமான் பொருட்டுக் கவனிக்கற்பாலனவாகிய விதிகள், யோகாப்பியாசம், காசிமான்மியம், சிவதீர்த்தமான்மியம், சிவபெருமானோடு இரண்டற்றுவிளங்கும் அத்துவிதமடைதலால் எய்தும் பூரணத்துவம், திரிபுராசுரர், தக்கன்யாகம், வைநாயக சுப்பிரமணியர் தோற்றம் முதலாயினவற்றை உணர்த்துவது, இருபத்துநாலாயிரங் கிரந்தமுடைய **சைவபுராணம்.**

பிரமாவானவர் சூரியனுடையமான்மியத்தை மனுவுக்குரைத்த பின்னர், அவர் அம்மனுவுக்கு அகோரகற்பத்திலே உலகமுளதாமுறையையும், சிருட்டிபேத முதலியவைகளையும் உரைத்ததாக உணர்த்துவது, முப்பத்தோராயிரங் கிரந்தமுடைய **பவிஷியபுராணம்.**

வியாசருடைய சீடராகிய சைமினிபகவான் முற்பிறப்பிலே பிராமணகுலத்தனவாயும், முற்பிறப்பிலெய்திய ஞா

னவிசிட்டத்தினாலே வேதங்களிலே மிகுந்த சாமர்த்தியம டைந்தனவாயும் உள்ள இரண்டுபக்ஷிகளை நோக்கி, விஷ்ணுமூர்த்தி மானுடசரீரம் எடுத்தமைக்குக் காரணம் யாது என்றும்; தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் பாண்டவரைவர்க்கும் பொதுவாகத் திரௌபதியம்மையார் என்னுமொருவரே மனைவியாக எய்துதற்குக் காரணம் யாது என்றும்; பலராமர் மதுமயக்கத்தினாலே தாம் செய்துகொண்ட பிரமகத்திபாவ நிவாரணத்தின்பொருட்டு இவர் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளவேண்டியது எற்றுக்கு என்றும்; திரௌபதியாருடைய புதல்வர் ஐவருக்கும், காத்தற்றலைவராயிருந்த கிருஷ்ணார்ச்சுனரிருவருக்கும், அகாலமரணம் எய்துதற்குக்காரணம் யாது என்றும்; வினவிய நான்கு விசிட்டவினாக்களின் உத்தர விவரணங்களை உணர்த்துவது, முப்பத்தீராயிரம் கிரந்தமுடைய மார்க்கண்டேயபுராணம்.

அக்கினிகற்பத்திறுதியிலே ஜீவர்களடையும் சீலம், ஐசுவரியம், இன்பம், மோக்ஷம் என்பவைகளையும் அதி இரகசிய ஞானமயமாகிய சிவலிங்கங்களையும் விரித்துணர்த்துவது, பதினோராயிரங் கிரந்தமுடைய இலிங்கபுராணம்.

தற்புருஷகற்பத்திற் சம்பவங்களையும், அறுமுகக்கடவுளுடைய மான்மியத்தையும் விரித்துணர்த்துவது, இலட்சம கிரந்தமுடைய காந்தபுராணம்.

விஷ்ணுவின் வாயிற்காவலாளராகிய ஜய விஜயர் என்னும் இருவரும் ஓர்போது வைகுண்டலோகப் பிரவேசஞ் செய்ய வந்த முனிவரொருவரைத் தடுத்தமையினாலே சாபமேற்று, பூமியிலே காசிபர் திதி என்பவர்களுக்கு புதல்வராகப்பிறந்து, இரணியகசிப்பு இரணியாட்சன் எனப் பெயர் பெற்றமையையும், இவ்விருவரிலே, இரணியகசிப்பு மூவுலகங்களையும் செயித்தமையையும், இரணியாட்சன் நேரே சுவர்க்கத்துக்குப்போய்த் தேவர்களைவென்றமையையும், தேவர்கள் வராகவுருவமுற்றிருந்த விஷ்ணுமூர்த்தியை வேண்ட

அவர் அவ்விரணியாட்சனைக் கொன்றமையையும், திதி என்பவனுக்கும் விட்டுணுவுக்கும் நடந்த யுத்தத்திலே திதி தோற்றமையையும், விட்டுணு வராகரூபத்தைப் படிப்படியே நீக்கிக்கொண்டமையையும் உணர்த்துவது, இருபத்துநாலாயிரம் கிரந்தமுடைய **வராகபுராணம்.**

தக்கன்யாகம், இமயாசலத்திலே கேதாரேஸ்வரபுரத்திலேயுள்ள சிவலிங்கப்பெருமானினதும், வதரிகாச்சிரமத்தினதும் மான்மியத்தை விளக்குதற்கெழுந்த காமதகனம், சரோமாகாத்மியம், ஸ்தாணுதீர்த்த கோதாவரிதீர்த்தமான்மியம், உமாமகேஸ்வரர் விவாகம், முருகக்கடவுள் திருவவதாரம், மனுவந்தர சிருட்டி, சுவாரோசிஷ மனுவந்தரத்திலே இருந்த தைத்தியராசனாகிய பலிச்சக்கிரவர்த்தி பரிபாலனம், அப்பலியரசனை யடக்கக் கிளர்ந்த வாமனமூர்த்தி திருவவதாரம் என்னும் இவைகளையுணர்த்துவது, பதினாலாயிரம் கிரந்தமுடைய **வாமனபுராணம்.**

விஷ்ணுவினது மீனவதாரமான்மியமும், அவ்விஷ்ணு சலப்பிரளயகாலத்திலே மனுவையும், பிறவற்றையும் ஓர் பேழையினுள்ளே வைத்து இரக்ஷித்தமையும், பிரமசிருட்டியும், திரிபுரத்தசுரர் சங்காரமும், தாரகாசுரனுக்கும் தேவர்களுக்கும் இடையினிகழ்ந்த யுத்தமும், பார்ப்பதியம்மையார் திருக்கல்யாணமும், முருகக்கடவுள் திருவவதாரமும், விட்டுணுவவதாரமுமாகிய காதைகளை யுணர்த்துவது பதினாலாயிரம் கிரந்தமுடைம **மற்சபுராணம்.**

ஆமைவடிவங்கொண்ட சனார்த்தனர், சக்கிரன் சமீபத்திலே இருந்த இருஷிகளுக்கும், அவந்திதேசத் தரசராகிய இந்திரத்தியும்னருக்கும், ஜீவர்கள் அத்தியாவசியகமடையவேண்டிய அறம், செல்வம், இன்பம், மோக்ஷம் என்பனவற்றை மொழிந்ததாக வுணர்த்துவது ஆறுயிரம் கிரந்தமுடைய **கூர்மபுராணம்.**

பிரமாவானவர் பிரம வண்டத்தின் மகிமையையும், இனிவரும் கற்பங்கடோறுநிகழும் காதைகளையும், சொல்

லியதாக உணர்த்துவது பன்னீராயிரம் கிரந்தமுடைய **பிரமாண்டபுராணம்.**

உலகசிருட்டிச் சுருக்கவிளக்கம், விரதவிவரணம், சமயாசரணம், சோதிடம், புண்ணியக்ஷேத்திரம், சாமுத்திரிகாலக்ஷணம், விலையுயர்ந்த ரத்தினம், ஔஷதம் முதலியவற்றைஉணர்த்துவது, ஆறாயிரம் கிரந்தமுடைய **காருடபுராணம்.**

விஷ்ணுவின் பொருட்டுத் துதிக்கப்பட்ட தோத்திரங்களையும், அவரை ஆராதனை செய்தற்குரிய புண்ணியகாலங்களையும், துருவர் பிரகிலாதர் காதைகளையும், உருக்குமாங்கடர் புதல்வியாகிய மோகினி என்பவளது காதைகளையும் உணர்த்துவது இருபத்தையாயிரம் கிரந்தமுடைய **நாரதீயபுராணம்.**

உலகசிருட்டியையும், பிரமாவுடைய புதல்வர்களாகிய மரீசி அத்திரி ஆங்கிரஸ் புலத்தியர் புலகர் கிரது வசிட்டர் தட்சர் பிருகு என்னு மிவர்களாலே ஜீவர்கள் உலகத்திலே படைக்கப்பட்டுப் பெருகினமையும், கற்பகாலத்திறுதியிலே நிகழும் சங்காரத்தையும், பிரதிசர்க்கத்தையும், மனுவந்தத்துள்ள அரசர் பரிபாலனங்களையும், உணர்த்தும் அம்சம்; பலவகைப்பட்ட உலகங்களையும், மேலுலகங்களையும், நரகங்களையும், கிரகமண்டலங்களையும், சப்தகண்டங்களையும், அவற்றைச் சூழ்ந்த சப்தசாகரங்களையும் விளக்கும் அம்சம்; வியாசபகவான் வேதபுராண இதிகாசங்களை ஒழுங்குபெற அமைத்த வகைகளையும், சாதி ஒழுக்கங்கண் முதலியவற்றையுணர்த்தும் அம்சம்; அரசர்களுடைய பரிபாலனங்களையும், அவர்கள் இராச்சியங்களையும் விரித்துணர்த்தும் அம்சம்; கிருஷ்ணருடைய சரித்திரத்தை முழுமையும் உணர்த்தும் அம்சம்; திரேதாயுகமுதல் கலியுகம் வரையினும் மனிதர் பூடிப்படியே தீச்செயல்களிலே தலைப்பட்டு அவற்றாலெய்தும் சலப்பிரளய அக்கினிப்பிரளயங்களினாலே அழிந்து கற்பகாலத்திறுதியிலெய்தும் உலக ஒழிவையும் உணர்த்

தும் அம்சம்; என ஆறு அம்சங்களையுடையதும் ஆறாயிரம் கிரந்தமுடைய வைணவபுராணம்.

அத்தினபுரத்தரசரும், அருச்சுனருடைய பேரருமாகிய பரீச்சித்து என்பவர் ஓர் சாபத்தினாலே, தாம் ஏழுதினங்களுக்குள்ளே சர்ப்பந் தீண்டப்பெற்று, இறந்துவிடுவோமென்று அத்தினபுரத்தைவிடுத்துக் கங்காதீரத்தை அடைந்து, முனிவர்கூட்டத்தோடு அங்கெழுந்தருளி இருந்த வியாசமுனிவர் புதல்வராகிய சுகமுனிவரைநோக்கி, முனிவர்பெருமானே! அடியேன் மரணயாதனையை ஒழிக்கும் வகை யாது? என்று வினவியவினாவுக்கு விடுக்கப்பட்ட விடைகளைப் பன்னிரண்டு ஸ்கந்தங்கள வாயிலாக உணர்த்துவது பதினெண்ணாயிரம் கிரந்தமுடைய பாகவதபுராணம்.

உலகசிருட்டியையும், மநுவந்தரங்களையும், கிருஷ்ணர் வரைக்குமிருந்த சூரியசந்திரகுலத்து அரசர்களையும், சூரியன்பொருட்டும், சிவபெருமான்பொருட்டும் சகநாதர்பொருட்டும் உள்ள திருக்கோயில்களையும், திருநந்தனவனங்களையும், சகநாதமான்மியத்தையும் உணர்த்துவது பதினாயிரம் கிரந்தமுடைய பிரமபுராணம்.

உலகசிருட்டி செய்யும்பொருட்டுப் பிரமாவானவர், ஓர்பதுமத்திலே தோற்றிய கதைகளை உணர்த்தும் சிருட்டிகாண்டம்; எல்லோருஞ் சென்று தரிசனஞ் செய்வதற்கும், ஸ்நானஞ்செய்வதற்கும் உரிய ஆலயங்களையும், தீர்த்தங்களையும் மனைவியாகவும், தாய்தந்தையராகவும், குருவாகவும் உவமித்துக்கூறும் பூமிகாண்டம்; பூமியை மத்தியாகக் கொண்டு அதற்கு மேலுள்ள அண்டங்களை விரித்தறிவிக்கின்ற சுவர்க்ககாண்டம்; நாகருலகக்களையும், பிறவற்றையுமுணர்த்தும் பாதலகாண்டம்; திலீப மகாராசாவுக்கும், வசிட்டமுனிவருக்கும் இடையில் நிகழ்ந்த வாதவிஷயங்களாகிய மாகமாசத்துத் தீர்த்தமாடற்புண்ணியங்களையும், இலக்குமி நாராயணர்பொருட்டுச் செபிக்கற்பாலனவாகிய மந்திர முதலியனவற்றையுமுணர்த்தும் உத்தரகாண்டம்; என்னும்

ஐந்துகாண்டங்களால் புனையப்பட்டது, ஐம்பத்தையாயி ரம் கிரந்தமுடைய பதுமபுராணம்.

விஷ்ணுவின் அவதாரங்களையும், சிவபெருமானைநோக் கிச் செய்யும் ஞானபூசையையும், பிரபஞ்சவிவரணங்களை யும், அரசர் கடன்களையும் உணர்த்துவது எண்ணாயிரங் கிர ந்தமுடைய ஆக்கினேயபுராணம்.

கிருஷ்ணர் மகிமையையும் பிரமவராகர் கதையையும் உணர்த்துவது, பன்னீராயிரம் கிரந்தமுடைய பிரமகை வர்த்தபுராணம்.

☞ கற்பபேதங்களினாலே புராணங்களிலே சிலகதைகள் ஒன்றோடொன்று மாறுபட்டிருக்கும்.

சிவபுராணம்.

சிவபுராணங்கள் சிறிதும் குற்றமுறாது மேன்மையன வாம். வேதங்களே அவைகளுக்குச் சாட்சியமாகும்; சிவபு ராணங்களை ஒழித்து, ஒழிந்தபுராணங்கள் குற்றத்தை நீக் கிக் குணத்தைவிரித்து, இல்லாதனவற்றையும் முகமனாக வெடுத்துரைக்கும்; ஆதலினால், பிறபுராணங்களைப் படிப்ப தனாலே, மயக்கம் நீங்காது; சிவபுராணங்களைப் படிப்பதி னாலேதான் தெளிவு பிறக்கும்.

பிறையணிசடைமுடிப்பிரான்றன்காதைக
ளிறையுமோர்மறுவிலயாவுமேன்மையே
மறைபலசான்றுளவாய்மையேயவை
யறிஞர்களுடியேயவற்றைக்காண்கவே. (உகூ)

சொல்லியபுராணமாந்தொகையுளீசனை
யல்லவர்காதைகளனையர்செய்கையு
ணல்லனவிரித்திடுவைகண்மாற்றிடு
மில்லதுமுகமனாலெடுத்துக்கூறுமே. (௩0)

புவியினரேனையர்புராணந்தேரினுஞ்

மா

வவர்மயலரசனையடைந்திடாரெனி
லெவரெவராக்கமுமினிதுபோலுமால். (௩௧)

சிவபுராணம் சிவபெருமானை உத்கர்ஷமாகவும்; விஷ்ணுபுராணம் அவரை அபகர்ஷமாகவும்; விஷ்ணுபுராணம் விஷ்ணுவை உத்கர்ஷமாகவும்; சைவபுராணம் அவரை அபகர்ஷமாகவுஞ் சொல்வதற்குச் சமாதானம், என்னையெனிற் கூறுதும்:—சைவபுராணங்களெல்லாம் செப்புகின்ற விஷ்ணு அபகர்ஷம் விஷ்ணுவையே சாருமென்றும், சைவபுராணங்கள் செப்புகின்ற சிவோத்கர்ஷம் சிவபெருமானையே சாருமென்றும், வைணவபுராணங்கள் செப்புகின்ற விஷ்ணு உத்கர்ஷம் அவருக்கு அந்தரியாமியாயுள்ள சிவபெருமானையே சாருமென்றும், வைணவபுராணங்கள் செப்புகின்ற சிவ அபகர்ஷம் உருத்திரரைச்சாருமென்றும் பராசரபுராணம் கூறுமாற்றால் அறிக. அறியவே, சிவபுராணங்கள் பத்தும் உருத்திரமூர்த்தியை அதிட்டித்து நிற்கும் துரியமூர்த்தியாகிய சிவபிரான் பரத்துவத்தை விளக்குமாறுபோல, விஷ்ணுபுராணமும் உருத்திரமூர்த்தியின் இயற்றுதற்கர்த்தாவாகிய விஷ்ணுவை அதிட்டித்து நிற்கும் சிவபிரான் பரத்துவத்தையே கூறும் என்பதும், ஏனையபுராணங்களும் அவ்வாறு சிவபரத்துவத்தையே விளக்கும் என்பதும், அதனால், விஷ்ணுபுராணாதிகள் அவ்வவ்வதிஷ்டேய தேவர்களை உபசாரம்பற்றிப் பரமாகக்கூறும் என்பதும், தெளிவாகச் சித்தித்தவாறாயிற்று.

கந்தபுராணம்.

சிவபுராணங்கள் பத்தினுள்ளே சுப்பிரமணியசுவாமியுடைய மான்மியத்தை உணர்த்தும் புராணம் காந்தபுராணமெனப்படும்.

தோற்றமீறின்றித்தோற்றியசூர்ப்பகைக்
கேற்றகாதைக்கெவன்பெயரென்றிடி
லாற்றுமைம்புலத்தாறுசென்மேலையோர்
போற்றுகந்தபுராணமதென்பதே. (௩௨)

சகல வேதாந்த சித்தாந்தங்களின் சாரத்தை உள்ளடக்கினதாய், ஐம்பதுகண்டங்களாற் புனையப்பட்டதாய், ஓரிலக்கம் கிரந்தமுடையதாய் இருக்கும் கந்தபுராணமானது, சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என ஆறுசங்கிதையுடையது. அவற்றுள், சனற்குமாரசங்கிதை, ஐம்பத்தய்யாயிரம் கிரந்தமும், சூதசங்கிதை ஆறாயிரங்கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரம் கிரந்தமும், விட்டுணுசங்கிதை ஐயாயிரங்கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரம் கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங்கிரந்தமுமுடையன. முப்பதினாயிரங் கிரந்தமுடைய சங்கரசங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள், முற்பட்டது சிவரகசியகண்டம். அது பதின்மூவாயிரங் கிரந்தமுடையதாய், சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம், என ஏழுகாண்டங்களையுடையதாயிருக்கும். அவற்றுள், முதலாறுகாண்டத்தையும் **கச்சியப்பசிவாசாரியசுவாமிகள்** கந்தபுராணம் எனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச்செய்தார்.

மூன்றாவது

பதிபசுபாசப்பிரகரணம்.

க. அநாதியாயுள்ள பதார்த்தங்கள் பதி பசு பாசம் என்னும் மூன்றுமாம். பதி ஒன்று; பசுக்கள் பல; பாசம் மூன்று. இயல்பாகவே பாசத்தினின்று நீங்கினவர் பதி; இயல்பாகவே பாசத்தினாலே கட்டுண்டவர் பசுக்கள்; இயல பாகவே ஆன்மாக்களைப்பந்தித்தது பாசம். (இயல்பாகவே பாசத்தின் நீங்கினவர் = அநாதிமலமுத்தர்; இயல்பாகவே பாசத்தினாற் கட்டுண்டவர் = அநாதிமலபெத்தர்.)

சான்றவராய்ந்திடத்தக்கவாம்பொருண்
மூன்றுளமறையெலாமொழியநின்றன
வான்றதோர்தொல்பதியாருயிர்த்தொகை
வான்றிசழ்தளையெனவகுப்பரன்னவே. (க)

தியரன்பாசந்தன்னிற்பட்டுழல்பசுநாமென்றே
விதியொடுமறைகள்கூறுமெய்மையைத்தெளியவேண்டி
னிதுவெனவுரைப்பன்யாங்களிவ்வரசியற்றவீச
னதிர்கழலருச்சித்தேத்துமாலயம்பலவுங்காண்டி. (உ)

பதிபசுபாசம் என்னும் மூன்றுபொருள்களின் இலக்கணத்தை விளக்குவன ஆகமங்களே. இது "பலகலை யாகமவேதம் யாவையினுங் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்." என்னும் சிவப்பிரகாசச் செய்யுளானும்; "அநாதியே யமலன் சச்சிதானந்தன் பதி யான்மாக்க - ளநாதியே பெத்தர் பந்தமகவிருளநாதிமூன்று - மநாதியே பசுபாசத்திற்பக்குவத்துலனை - வநாதியே யமலனாலே யவர்தமை யவைகணீங்கும்." என்னும் சிவதருமோத்தரச் செய்யுளானும் அறிக.

உ. சிவபெருமானே பரமபதி; பிறரெல்லாம் பசுக்கள்; இதற்கு வேதங்களே சாட்சியமாகும். (பசுக்களுக்குப்பதி = பசுபதி.)

ஆதலாலெங்களீசனேபரம்பொருளல்லா
வேதிலாரெலாமுயிர்த்தொகையாகுமாலிதனைக்

காதலானுணர்ந்தேனன்றுவாய்மையேகாண்டி
வேதநீமமுதலாரியகலையெலாம்விளம்பும். (௩)

விதிசிரங்கள்வியன்முடிவேய்ந்திடும்
பதிசிவன்றன்பதத்துணையுட்கொடு
மதிசிறந்திடவாலிதின்வைகிய
ததீசியென்னுந்தவமுனிசாற்றுவான். (௪)

விதிமுதலுரைக்கநின்றவியனுயிர்த்தொகைகட்கெல்லாம்
பதியெனவருளுந்தொன்மைப்பசுபதிதானுமன்றோர்க்
கதிகனென்றெவருந்தேறவாங்கவர்துஞ்சவெந்த
பொதிதருபலியுமென்பும்புனைபவன்றானுமென்னும் (௫)

சிவபெருமானைப் "பசுபதி" யென்று யசுர்வேதமத்தியிற்போந்த ஸ்ரீருத்திரமும், நிருசிம்மதாபனியோபநிடதமும் பிறவும் செப்புமாற்றாலறிக.

௩. காண்பான் காட்சி,காட்சிப்பொருள் என்னும் மூன்றையும் காட்டுபவர் சிவபெருமானே. (காண்பான்= ஞாதிரு; காட்சி = ஞானம்; காட்சிப்பொருள்=ஞேயம்.)

காண்பவன்முதலியதிறமுங்காட்டுவான்
மாண்புடையோனுமாய்வலிகொள்வான்றொடர்
பூண்பதின்றாய்நயம்புணர்க்கும்புங்கவன்
சேண்பொலிதிருடச்செயலையேத்துவாம். (௬)

கருவிமெய்ப்புலன்காட்டுவான்காண்பவன்காட்சிப்
பொருளெனப்படுநான்மையுமைவகைப்பொறியு
மிருதிறத்தியல்வினைகளுங்காலமுமிடனு
மரபின்முற்றுறுபயனுமாய்நின்றனன்வள்ளல். (௭)

விடயங்களின் வழியே செல்லாவண்ணம் மனத்தை நிறுத்திச் சிவத்தைத் தியானிக்கப்புகுந்தவழி ஞாதிருவாகிய தானும், ஞானமாகிய தியானமும் தோன்றாது, ஞேயமாகிய சிவமொன்றே விளங்கப்பெறுவது யோகமேயாக, யோகபாதத்துக்குத் தலையாய்விளங்குவது ஞானபாதமாமாதலின், "நன்மார்க்க ஞானத்தை நாடி ஞானஞேயமொடு ஞாதிருவு நாடாவண்ணம் பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றிஞானப் பெருமையுடையோர் சிவனைப் பெறுவர்காணே." என்னும்

திருவாக்குக் கிணங்கக் காண்பவன்முதலிய திருமுங்காட்டு வான் என்று கூறப்பட்டது.

ச. முந்தியனவெல்லாம் பிந்த முந்துபவராயும், பிந்து வனவெல்லாம் முந்தப் பிந்துபவராயும், வேதோபநிடதங்க ளுக் கமையாதவராயும் உள்ளவர் சிவபெருமானே.

முன்னதின் முன்னென மொழிதுமேயெனிற்
பின்னதின் பின்னுமாப் பேசநிற்றியா
லன்னவையேயெனி லொழிந்ததல்லையோ
வென்னெனநின்னையா மேத்துகின்றதே. (அ)

வேதக்காட்சிக்கு முபநிடத்துச்சியில்விரித்த
போதக்காட்சிக்குங் காணலன்புதியரிற்புதியன்
மூதக்கார்க்குமூதக்கவன்முடிவிற்குமுடிவா
யாதிக்காதியாயுயிர்க்குயிராய்நின்றவமலன். (௯)

சிவபெருமான் காலத்தினாலே வரையறுக்கப்படாதவ ரென்பது "முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொ ருளே பின்னைப் புதுமைக்கும் பெயர்த்துமப்பெற்றியனே." என்னுந் திருவாசகத்தானும், "பெருங்கடன்மூடிப் பிரளய ங்கொண்டு பிரமனும்போ, யிருங்கடன்மூடியிறக்கு மிறந் தான்களேபரமுங், கருங்கடல்வண்ணன் களேபரமுங்கொ ண்டு கங்காளராய், வருங்கடன்மீளநின்றெம்மிறை நல்வீ ணைவாசிக்குமே." என்னுந் தேவாரத்தானுமறிக. சுத்தமா யையிற் பிறந்த சூக்குமை முதலிய வாக்குக்களைப் பற்றுக் கோடாகக்கொண்டு வேத சாத்திர மிருதி புராண கலைஞா னங்கள் பிறக்கின்றமையானும், சுத்தமாயாதீதர் சிவபெரு மானேயாமாதலினாலும், அவர் வேதக்காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த போதக்காட்சிக்கும் காணலன் எனப் பட்டார்.

ரு. நிலம், நீர், தீ, வளி, வெளி, ஞாயிறு, திங்கள், உயிர் என்பனவாய் நிற்பவர் சிவபெருமானே. (நிலம் முதலிய எட்டும் சிவனுக்கு அட்டமூர்த்தமாம்.)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. SWAMINATHA IYER LIBRARY

விட்டவிட்டோர்படைக்கெலாம்வேறுவேறென்று
தொட்டிலானதனாலதுமாற்றுதறுணியான்
கிட்டுமெல்லையிலவையெலாங்கவர்ந்தனன்கேடி
லட்டமூர்த்திசேயென்பதுகாட்டினனம்மா. (௬௦)

ஊனாகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானாகியானபொருளாய்மதியாகிவெய்யோ
னானாகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானான்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம். (௬௧)

காலாய்வெளியாய்ப்புனலாய்க்கனலோடுபாராய்
மேலாகியுள்ளபொருளாயெவற்றிற்கும்வித்தாய்
நாலாயவேதப்பொருளாகிநண்ணுற்றநாதன்
மாலாயவனுக்கிஃதொன்றுவகுத்துரைப்பான். (௬௨)

சிவபெருமானுக்கு நிலமுதலாயின அட்டமூர்த்தமா மென்பது "இருநிலனாய்த் தீயாகிநீருமாகி யியமானனாயெறி யுங்காற்றுமாகி, யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாசமா யட்டமூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணுமா ணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநிலையாயின் றாகி நாளையாகி நிமிர்புன்சடையடிக ணின்றவாறே." என் னுந் தேவாரத்தானும்; அவர் நிலமுதலாய அட்டமூர்த்தம ல்லராய் உளரென்பது, "விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேதவிதியல்லர் விண்ணுநிலனுந், திரிதரு வாயுவல்லர் செறி தீயுமல்லர் தெளிநீருமல்லர் தெரியி, லரிதரு கண்ணியாளை யொருபாகமாக வருள்காரணத்தில் வருவ, ரெரியரவாரமா ர்ப ரிமையாருமல்ல ரிமைப்பாரு மல்லரிவரே." என்னுந் தேவாரத்தானும் அறிக.

௬. சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி என்னும் மூன்றினின்றும் பிறந்தன தத்துவங்கள் முப்பத்தாறுமாம். பிருதிவிமுதற் குடிலையீறாயுள்ள இம்முப்பத்தாறு தத்துவங் களிலே அளவிறந்த அண்டங்களும், அளவிறந்தபுவனங்க ளும், அளவிறந்த உயிர்களும் அமையும். தத்துவசமூகமா யும் தத்துவாதீதமாயும் நிற்பவர் சிவபெருமானே.

முந்தியமாயைகண்மூலமாகவே
யந்தமிறத்துவமாறொடாறுமுன்
வந்திடவளித்ததுமரபிணைந்தொழில்
சிந்தைகொள்கருணையானடாத்துஞ்செய்கையும். (௧௩)

அற்றமில்வகையாயிரத்தெட்டெனுமண்டம்
பெற்றனம்மெனவியந்தனைதத்துவபேத
முற்றுணர்ந்திலேதரணியோவளப்பிலவுளகாண்
மற்றையண்டங்கள்கேட்டியேன்மருளுதிமன்னோ. (௧௪)

குடிலையீறதாவாரியேமுதலதாக்குழுமி
யுடையவண்டங்களலகிலவென்பரொன்றொன்றி
னடைதலுற்றிடுபுவனத்தின்பெருமையாரறிந்தார்
முடிவுறாததோர்பொருளிணைமுடிவுகூறவற்றோ. (௧௫)

தூயபார்முதலாகவேகுடிலையின்றுணையு
மேயவண்டமுமுயிர்களும்வியன்பொருள்பலவு
மாயுகின்றனனல்லனுமாயினனவன்றன்
மாயையாவரேகடந்தனர்மறைகளுமயங்கும். (௧௬)

முப்பத்தாறு தத்துவங்களாவன:—சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை; காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை; மனம், சித்தம், புத்தி, அகங்காரம்; செவி, தோல், கண், நாக்கு, மூக்கு; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்; சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம்; ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்பனவாம். சிவம் முதலிய முன்னைந்தும் சிவதத்துவமெனப்படும்; இது சுத்தமும், பிரேரகாண்டமுமாம். காலம் முதலிய நடுவேழும் வித்தியாதத்துவமெனப்படும்; இது சுத்தாசுத்தமும், போக சயித்திருகாண்டமுமாம். மனம் முதலிய பின்னிருபத்துநான்கும் ஆன்மதத்துவமெனப்படும்; இது அசுத்தமும் போக்கியகாண்டமுமாம். மனம் முதலிய நான்கும் அந்தக்கரணம் எனவும், செவிமுதலிய ஐந்தும் ஞானேந்திரியமெனவும், வாக்குமுதலிய ஐந்தும் கன்மேந்திரியமெனவும், சத்தம் முதலிய ஐந்தும் தன்மாத்திரையெனவும், ஆகாயமுதலிய ஐந்தும் பூதமெனவும் படும். சித்தியார்:—"ஐந்து சுத்தத்தின்கீழே மூசுத்தாசுத்த மசுத்தந், தந்

திடம்புமன்றீமூன் றூன்றாய்த்தத்துவஞ் சிவற்கு,வந்திடும் பிரேரகாண்டீ மருவுபோக சயித்திரத்தோ, டந்தமிலனுக்க ளுக்குப் போக்கியகாண்டமாமே.''

விஷ்ணுவினுடைய அகந்தைச்சூதை நீக்குமாறு தமது அருட்சத்தியோடு சிவபெருமான் ஆடியசூது தத்துவச்சூதாமென்க. இது, பிரகிருதியைக் கரும்பாம்புவடிவாகக்கொண்டும், சுத்தமாயையைச் செம்பாம்புவடிவாகக் கொண்டும் தத்துவங்களைக் கருவிகளாகப்பரப்பி மேலோர் தற்காலத்தில் அயரும் அநுட்டானங்களிலே காணப்படும்.

எ. மனம் வாக்குக் கதிதராய்,ஊர் பெயர் குணம் குறி செயல் வரவு போக்கு ஒப்பு இலாதோராய், உருவு அருவு ருவு அருவு கடந்தோராய் உள்ளவர் சிவபெருமானே.

நோக்கினுநுழைகிலைநுவலுகின்றதோர்
வாக்கினுமமைகிலைமதிப்பவொண்கிலை
நீக்கருநிலைமையினிற்றியெந்தைநீ
யாக்கியமாயமீதறிகிலேமரோ. (௧எ)

ஆதியந்தமிலாதவெம்மண்ணலுக்
கோதுபேருமுருவுமோர்செய்கையும்
யாதுமில்லையிவ்வாற்றினையெண்ணிலா
வேதம்யாவும்விளம்புந்துணிபினால். (௧அ)

ஊரிலான்குணங்குறியிலான்செயலிலானுரைக்கும்
பேரிலானொருமுன்னிலான்பின்னிலான்பிறிதோர்
சாரிலான்வரல்போக்கிலான்மேலிலான்றனக்கு
நேரிலானுயிர்க்கடவுளாயென்னுளேநின்றான். (௧௯)

திருவந்ததொல்லைப்புவனத்தொடுதேவர்போற்றிப்
பெருவந்தனைசெய்தறிதற்கரும்பெற்றியெய்தி
யருவந்தனையுமுருவத்தையுமன்றிநின்ற
வொருவன்றனதுபதந்தன்னையுளத்துள்வைப்பாம். (௨0)

இருமையுமொருமையுமிரண்டுமொன்றிய
வொருமையுமன்றெனவுலகம்யாவையும்
பெருமையினியற்றியபெருமநின்செய
லருமறையானவுமறிதற்பாலவோ. (௨௧)

ஆதியுநடுவுமீறுமருவமுமுருவுமொப்பு
மேதுவும்வரவும்போக்குமின்பமுந்துன்புமின்றி
வேதமுங்கடந்துநின்றவிமலவேரார்குமரன்றன்னை
நீதரல்வேண்டுநின்பாணின்னையேநிகர்க்கவென்றார். (௨௨)

இவ்வுண்மை "உருவுமருவுங் கலப்புமாயன்றிக் குறி யுமுறையுமுணர்ந்தறிவரிதாய்க் குணமெல்லையிலவா,யானந் தக்குறியா யற்புதமா யநாமயமாய் நிராமயமா யசலமாயின் பாய்த், தெரிவரிதா யனுபவமாய் முத்தசித்தா யணுவாய்ச் செல்கதியாய்ப் பல்லுருவாய்த் தீமைநன்மையின்றா,யுரையி றந்து கரையிறந்த வொளியாகி வெளியாயோங்குவது தற்சி வமென்றுங் குரைக்குநூலே." என்னுந் தத்துவப்பிரகாசச் செய்யுளானறிக.

அ. உருவு, குணம், செயல் இறந்துநின்ற சிவபெ ருமான் உயிர்களைப்பந்தித்த பாசத்தை ஒழிக்கும்பொருட் டுத் தம்மோடொற்றுமையுடைய சத்தியைக்கொண்டு படை த்தலாதி ஐந்தொழில் நடாத்துவர். அவர் அருளோ சத்தி; அவர் அருளோ பெண்வடிவுற்றது; அவர் அருளோ உமை; அவர் உருவோ சத்தி; அவர் உருவோ அருள்; அவர் உரு வோ ஞானம். சிவன் அருளின்றி உயிர் இயங்காது; சிவன் அருளோடே உயிர் இயங்கும். எனவே,சிவமுஞ் சத்தியுமாய் உலகை ஈன்றவர் சிவபெருமானே. இவ்வுண்மைகள் சுத்த வாதுளம் முதலிய ஆகமங்களை உணர்ந்தவர்களே சிறிது அறியவல்லவராவர்.

உருவொடுகுணஞ்செயலொன்றுமின்றியே
நிருமலமாய்ச்சிவனிறைந்துநின்றதும்
பரவியவுயிர்த்தொகைப்பந்தநீக்குவா
னொருதனிச்சத்தியாலுன்னலுற்றதும். (௨௩)

புல்லியபுரம்பொடித்ததுவுங்காமனை
யொல்லெனவெரித்ததுமுனக்குச்சீர்த்தியோ
வெல்லையில்விதிமுதலெனைத்துமீண்டுநின்
னல்லருளாணையேநடாத்துமென்கையால். (௨௪)

தேனமர்கமலத்தண்ணல்செய்தொழின்முற்றுமாற்று
லானதன்னருளையாங்கோராயிழையாகநல்கி

மேனிகழ்க்கருணைதன்றன் மேவுவதுணராயேனை
வானவர்பேர்லெங்கோனைமதித்தனைமதியிலாதாய். (௨௫)

தந்துழியீசன்றன்னைத்தனயருமயனுமாலும்
வந்தனைசெய்துபோற்றமாயவன்வதனநோக்கி
நந்தமதருளதாகுநங்கையோடினிதுசேர்ந்தா
முந்தையின்வேதாச்செய்கைமுற்றிடும்போதியென்றான். ( )

காமருவடிவாயெங்குங்காண்பதுசத்தியங்கண்
மாமயமாகிநின்றாண்மன்னியசிவனுமீது
தூமறைமுதலாவுள்ளதொல்லைநூல்புகலுமன்னோர்
தாமொருபுதல்வன்றன்னைத்தந்தவாசாற்றுகின்றாம். (௨௭)

உருவிலைநமக்கெனவொன்றுநம்வயி
னருளுருவவையெலாமென்னவன்னதோர்
பொருளெனவுன்னியேபுவனமீன்றவள்
பெருமகிழ்வெய்திப்பெற்றிகூறினாள். (௨௮)

ஞானந்தானுருவாகியநாயகனியல்பை
யானுநீயுமாயிசைத்துமென்றாலஃதெளிதோ
மோனந்தீர்கலாமுனிவருந்தேற்றிலர்முழுதுந்
தானுங்காண்கிலனின்னமுந்தன்பெருந்தலைமை. (௨௯)

ஆட்டுவித்திடுபவனதுசெயாவழிக்
கூட்டுடைப்பாவைகள்குலைந்துவீழ்ந்தென
நாட்டியபரனருணடாத்தலின்மையா
லீட்டுபல்லுயிர்த்தொகையனைத்துமாய்ந்தவே. (௩0)

அன்பினர்க்கெளிவந்துள்ளவாதியம்பரமன்மாது
தன்புடையாகச்சீயத்தவிசின்வீற்றிருத்தலோடுந்
துன்பகன்றிருபாலாகித்துவன்றியவுயிர்களெல்லா
மின்பொடுபோகமாற்றியினிதமர்வுற்றவன்றே. (௩௧)

அந்தவெல்லையிற்சத்தியுஞ்சிவமுமாயனைத்தும்
வந்திடும்பரிசளித்தவரிருவரும்வரலுஞ்
சிந்தையின்மகிழ்வெய்தியேயம்மைசேவடியின்
முந்தியோடியேவணங்கினன்முழுதொருங்குணர்ந்தோன். (௩௨)

தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்
கத்துபுன்சொலைவினவினரவன்செயல்காணார்
சுத்தவாதுளமுதலியதந்திரத்தொகுதி
யுய்த்துணர்ந்திடுநீரரேயொருசிறிதுணர்வார். (௩௩)

சிவபெருமானுடைய வடிவம் சத்தியென்பதும், அச்சத்தி ஞானவடிவமென்பதும், "காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால்." என்பதனாலும், "சத்திதன்வடிவேதென்னிற் றடையிலா ஞானமாகும்." என்பதனாலுமறிக. ஐந்தொழிற்கும் வித்தாயுள்ளது சத்தியாம் என்றது "விமலமா யைந்தொழிற்கும் வித்தாய் ஞாலத்தாங்கைக்கெட மணிமன்றுளாடல்காணு மன்னையருட்பாதமலர் சென்னிவைப்பாம்" என்பதனாலறிக. சத்தியின்றிச் சிவமில்லையெனல், குணமின்றிக் குணியில்லையாமாறுபோல, இயற்கைக்குணமாகிய அருளெனப்படுகின்ற சத்தியின்றிச் சிவமில்லையாம் என்னும் வாய்மையைத் தன்னுட்கொண்ட "அருளது சத்தியாகு மரன்றனக் கருளையின்றித், தெருள்சிவ மில்லையந்தச் சிவமின்றிச் சத்தியில்லை, மருளினை யருளால்வாட்டி மன்னுயிர்க்களிப்பன் கண்கட், கிருளினை யொளியாலோட்டு மிரவியைப்போல வீசன்." என்னும் திருச்செய்யுளானறிக. சிவபெருமானுடைய சிரம், முகம், இருதயம், என்னும் அங்கங்களும், மார்பு, கண்டம், பாகு முதலிய பிரத்தியங்கங்களும், மான் மழு முதலிய சாங்கங்களும், வாகனம், குடை, கொடி முதலிய உபாங்கங்களும் சிவசத்திரூபமாமென்று ஸ்ரீவாதுளாகமம் செப்புகின்றது.

௬. பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்துத் துடைத்துப் பின்னர்ப்படைப்பவரும் சிவபெருமானே; அருள்சுரந்து உயிர்களை ஆளும் ஆதிநாயகரும், ஆதியந்தரகிதரும் அவரே; அருவும் உருவுமாகின்ற அநாதிமலமுத்தரும் பரஞ்சோதி சுவரூபரும் அவரே; அநாதியாய் ஞானானந்த வடிவாயுள்ளவரும் அவரே; மகாதேவரும், நித்தியரும், சருவாந்தரியாமியும் அவரே; மூவுலகத்தையும் ஈன்று அருளும் பிதாவாகிய திரியம்பகரும், சருவசீவசாட்சியும் அவரே; தாணுவும், பராபரனும் அவரே; தம்மை ஒப்பார் மிக்கார் இலாதவரும் அவரே; ஆன்ம நாயகரும், ஏகரும், குணாதீதரும் அவரே; பிரம விஷ்ணுக்கள் காண்டற்கரியரும் அவரே; ஆண், பெண், அலி அல்லாதவரும் அவரே; வேண்டிய வேண்டியாங்கிய

வரும் அவரே; இங்ஙனம், வேதக்கிளைகளெல்லாம் முழங்குகின்றன.

கேளினிமைந்தவேதக்கிளையெலாமியம்புகின்ற
சூளுரைசிவனேயெல்லாந்தோற்றுவித்தளித்துமாற்றி
மீளவுந்தருகின்றானும்வியனுயிர்க்கருளைநல்கி
யாளுநாயகனுமாதியந்தமிலோனுமென்னும். (௩௪)

அத்தனும்பகவன்றானுமருவமுமுருவுமாகுஞ்
சுத்தனுமுணர்தற்கொண்ணாச்சோதியுமியாண்டுமேவுஞ்
சித்தனுமநாதிதானுந்தேவர்கடேவுமென்று
நித்தனுமுயிர்க்குணீங்காநிருத்தனுமவனேயென்னும். (௩௫)

மூன்றெனுமுலகந்தன்னின்முளைத்திடுபொருளையெல்லா
மீன்றருள்புரியுந்தாதையெனுந்திரயம்பகனும்யார்க்குஞ்
சான்றெனநிற்கின்றோனுந்தானும்பரனுந்தன்னைப்
போன்றவருயர்ந்தோரில்லாப்புங்கவன்றானுமென்னும். (௩௬)

அண்ணலுமேகன்றானுமளப்பருங்குணத்தினானுங்
கண்ணனுமயனுந்தம்மாற்காணியகில்லான்றானும்
பெண்ணொடாணலியதென்னும்பெற்றியிலோனும்யாரு
மெண்ணியவெண்ணியாங்கேயீபவன்றானுமென்னும். (௩௭)

அதர்வசிரசு, அதர்வசிகை, சுவேதாச்சுவதரம், கைவல்லியம், காலாக்கினிருத்திரம் முதலிய உபநிடதங்களிலே இவ்வுண்மைகள், ஆங்காங்குக் காணப்படுகின்றன.

௪0. சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டுச் செய்யுந்தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலென்னும் ஐந்துமாம்.

ஒருதலையைந்தொழிலுலப்புறுவகை
புரிதருபகவநம்புன்மைநீக்குவான்
கருணையொடின்னினைகடிதிற்செய்பணி
யருளுதியென்றனராற்றுநோன்பினோர். (௩௮)

அளித்திடல்காத்திடலடுதன்மெய்யுணர்
வொளித்திடல்பேருளுதவலேயெனக்
கிளத்திடுசெயல்புரிகின்றநீலமார்
களத்தினன்பதியதுகழறும்வேதமே. (௩௯)

படைத்தலாவது தநு கரண புவன போகங்களை முதற்காரணத்தினின்றுந் தோற்றுவித்தலாம்; காத்தலாவது தோற்றுவிக்கப்பட்ட தநுமுதலியவைகளை நிறுத்துதலாம்; அழித்தலாவது தனுமுதலியவைகளை முதற்காரணத்திலொடுக்குதலாம்; மறைத்தலாவது ஆன்மாக்களை இருவினைப் பயன்களாகிய போக்கியப்பொருள்களி லமிழ்த்துதலாம்; அருளலாவது ஆன்மாக்களுக்குப் பாசத்தைநீக்கிச் சிவத்துவத்தைவிளக்குதலாம். இவ்வைந்தும் அருட்டொழிலா மென்பது "அழிப்பிளைப்பாற்றலாக்க மவ்வவர் கன்மமெல்லாங், கழித்திடனுகரச்செய்தல் காப்பது கன்மவொப்பிற், றெழித்திடன்மலங்களெல்லா மறைப்பருள்செய்திதானும், பழிப்பொழிபந்தம்வீடு பார்த்திடினருளேயெல்லாம்." என்னுஞ் செய்யுளாலறியப்படும்.

கக. சிவபெருமானுடைய அருட்சத்தி என்னப்படும் இன்பசத்தி உமையென்றும், அழித்தற்சத்தி ஐயையென்றும், சீற்றச்சத்தி காளியென்றும், ஆண்சத்தி அரியென்றும் கூறப்படும். (உமை=உமாதேவியார்; ஐயை=கொற்றவை, துர்க்கை; காளி=பழையோள், காடுகிழாள், காடுகாள்; அரி=விஷ்ணு.)

நால்வகைப்படநண்ணியசத்தியுண்
மாலுமாதலின்மற்றதுகாட்டுவா
ஞாலகண்டத்தனச்சுதனச்சுறுங்
கோலமெய்திக்குறுகினனவ்விடை. (௪௦)

இறுதிசெய்திடலேசீற்றமின்பமேயாண்மையென்று
வுறைதருசத்திநான்காமரன்றனக்கையைகாளி
முறைதருகவுரியின்னோர்மும்மையும்பெற்றோரேனைப்
பெறலருஞ்சத்தியாணிப்பெற்றியுமறைகள்பேசும். (௪௧)

"படைப்பாதித் தொழிலும் பத்தர்க்கருளும் பாவனையுநாலு, மிடப்பாகமாதராளோ டியைந்துயிர்க்கின்ப மென்றும்." எனவும், "கொற்றவை சிறுவ" எனவும், "பழையோள் குழவி" எனவும், "அரியலாற் றேவியில்லை யையனையாறனார்க்கே." "வருக்கைத்தடம்பொழின் மாமாதையையர்க்

குமாசொன்றில்லா, முருக்கொத்தமேனி யழகியநாதர்க்கு மூச்சாவத், திருக்கைக்கமலவாணர்க் கரிதிருத்தேவியன்றே, லரிக்குப்பொருளுரையீர் கெடுவீர்நும்மறிவின்மையே.''எனவும் போந்த திருவாக்குக்களினாலே உமைமுதலாயினோர் சத்தியாமாறு தெளிக.

இரேதசானது ஊர்த்துவவீரியம் அதோவீரியம் என இருதிறப்படும். ஊர்த்துவவீரியமுடையார் சிவன்; அதோவீரியமுடையார் பசுக்கள். சிவனுக்கு ஊர்த்துவ வீரியசத்தி உண்மை, சுப்பிரமணியர் முதலாயினோர் உன்முகத்தோற்றத்தாலும்,''மீதுசேர்தரும் வீரியனல்லையோ'' என்று மகாசாத்தப்படலத்திலே கூறிய விஷ்ணுவாய்ப்பிறந்த வாக்கினாலும் அறியப்படும். சுருதிகளிலே சிவனுடைய வீரியத்தினாலே மகாமேரு பொன்மயமாயிற்று என்று சொல்லப்படுகின்றது. சிவன், தமது நால்வகைச்சத்திகளுள் ஒன்றாகிய மாயாசத்திவாயிலாகத் தோற்றுவித்த உக்கிரரூபராகிய சாத்தாவினாலும், அதிதூய்தாகிய கண்டகிநதி தீர்த்தத்தினாலும்,இந்நதியிலே இப்போதும் சனிக்கின்ற பொற்கீடங்களாகிய வச்சிரதந்திகள்சாளக்கிராமங்கள் வாயிலாகக் காணப்படுகின்றமையானும் மேலேசொல்லிய சுருதி உண்மை வலியுறுத்தப்படும்.

கஉ. சிவபெருமான் உயிர்களின் பொருட்டுப் பிரமாவை யதிட்டித்துப் படைத்தலும், விஷ்ணுவை அதிட்டித்துக்காத்தலும், உருத்திரரை அதிட்டித்து அழித்தலும் செய்வர்.பின்னர்முன்போல(மலநீக்கம் பெறுமையினாலே)உயிர்களைத் தநுகரணங்களைக்கொடுத்துத் தாம் பிதா மாதாவாகிப் படைத்தலும் செய்வர். பிரம விஷ்ணுக்களைக் காப்பார்; பின்னர் அவர்களையும் ஒடுக்குவார். சங்கார கிருத்தியம் ஆதிமத்தியாந்தகீனராகிய தம்மாலன்றி அழிதன்மாலையராகிய தேவர்களாலே இயலாமையினாலே, அதனை அவர் தம்வயிற்கொண்டார். படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றும் சாத்துவிகம், இராசசம், தாமசம் என்னும் முக்குணத்தின் பாலனவாம். அதனாலே, படைத்தலாதி முத்தொழில்புரியும் பிரமாதி மூவரும் முக்குணவயத்தராவர். ஆகவே, தாமசகுணம் சங்காரகாலத்துக் கிருத்தியமொன்று நோக்கிச் சிவபெருமானுக்குச் செப்பப்படும்; படினும், ஞானனந்த வடிவின

ராகிய அப்பதிக்கு யாண்டுமுள்ளதோர் இயற்கைக்குணமாகாது; அவரோ குணாதீதர். பிறந்திறந்துழலும் உயிர்களை உலைவுறாது தடுத்து ஒடுக்குதலினாலே, சங்கார கிருத்தியமுந் தீயதாகாது. பிரம விஷ்ணுக்களென்னு மிருவர்க்குமோ காலத்துக்கியைந்த குணங்களினாலே சாத்துவிக இராசச தாமசங்கள் முறைமுறையே பொருந்தும்.

நிலவுகின்றதன்னருளுருக்கொண்டிடுநிமலன்
றலைமைபெற்றிடுபுங்கவர்தம்மைமுன்றந்தே
யுலகம்யாவையுமளித்தருள்செய்திடவுதவி
யுலகிலாவுயிர்யாவையுமயன்கணின்றளிப்பான். (சஉ)

மாயவன்கணின்றவையெலாம்போற்றிமற்றவைக்குத்
தூயதுப்புரவருத்தியேமேல்வினைதொலைச்சி
யாயவற்றிலோர்பற்பலவீடுறவருளி
மேயவாருயிருலகெலாம்பின்னரேவீட்டும். (ச௩)

நாரணனென்னுந்தேவுநான்முகத்தவனுமுக்கட்
பூரணன்றானுமாகிப்புவிபடைத்தளித்துமாற்றி
யாரணமுடிவுந்தேறுவநாதியாயுயிர்கட்கெல்லாங்
காரணனாயமேலோன்கழலிணைகருத்துள்வைப்பாம். (சச)

செங்கண்மாறன்னையென்னைத்திண்டிறன்மொய்ம்பினல்கி
யங்கண்மாஞாலங்காப்புமளிப்பதுமுதவியாமு
முங்கள்பாலிருத்துமென்றெம்முயிருணின்றியற்றுநின்றா
னெங்களான்முடியுஞ்செய்கையாவதுமில்லைகண்டாய். (சரு)

அன்னவேலையிலவையெலாமழித்தபின்னளிப்போ
ரென்னநின்றவர்தம்மையுமொடுக்குறுமிதற்பின்
முன்னருள்ளதோரேகமாயுறையுமெம்மூர்த்தி
பின்னுமிம்முறைபுரிந்திடுமென்றுமிப்பெற்றி. (சசு)

அந்தமாதியின்றாகியேயுயிரெலாமளிக்குந்
தந்தையாகியதனக்கன்றிமுழுதடுந்தகைமை
மைந்தராகியவமரரான்முடிவுறாமையினா
லெந்தைதன்வயிற்கொண்டனனீறுசெய்யியற்கை. (சஎ)

ஈசனேகாப்பனல்லால்யாரையும்பிறராற்றம்மா
லாசறப்போற்றலாகாததுணிவாகுமீண்டுப்

பேசியதிறனுமன்னோன்பேராருண்மறுதியென்ன
நேசமோடியைந்திட்டன்னைநினைந்தநோன்பியற்றுகென்றான். ()

எங்குளபொருளுங்கோளுமீதலுந்தானேயாகுஞ்
சங்கரனுலகமெல்லாந்தந்திடுங்கன்னிதன்னை
மங்கலமுறையாற்கொண்டான்மலைமகன்கொடுப்பவென்று
லங்கவனருளினீர்மையாரறிந்துரைக்கற்பாலார். (சகூ)

ஊன்புகுமெவரையுந்தன்றொண்குணத்தொடக்கித்தானே
வான்புகலாகிநின்றுமற்றவர்குணங்களூடு
தான்புகவில்லாதோனுந்தன்னியலினையதென்றே
யான்புகலரியதேவுமீசனுமவனேயென்னும். (ருo)

துன்றுதொல்லுயிர்தொலைவுசெய்திடு
மன்றுதாமதத்தடுவெதன்றியே
நன்றுநன்றதுஞானநாயகற்
கென்றுமுள்ளதோரியற்கையாகுமோ. (ருக)

நிர்க்குணத்தனேநிமலனன்னவன்
சிற்குணத்தனாய்த்திகழுவானொரு
சொற்குணத்தனோதொலைக்குநாளடு
முற்குணத்தினைமுன்னுமாறலால். (ருஉ)

நற்குணமுடையநல்லோருநாடொணாச்
சிற்குணனாகுமச்சிவன்பராபரன்
சொற்குணமூவகைத்தொடர்புமில்லதோர்
நிர்க்குணனவன்செயனிகழ்த்தற்பாலதோ. (ருங)

தீயதன்றடுஞ்செயலுநல்லரு
ளாயிலாவிகளழிந்துந்தோன்றியு
மோய்விலாதுழன்றுலைவுறாமலே
மாய்வுசெய்திறைவருத்தமாற்றலால். (ருச)

மேனிபொற்கென்றலின்விமலவான்பொரு
ளானெனுமருட்கையினவையிலீசனைத்
தானுணர்தெளிவினிற்றவத்திற்பூசையி
லானதுகுணனெலாமயன்றனக்குமே. (ருரு)

நேமியாற்குருவெலாநீலமாயதுந்
தோமறுகடலிடைத்துயில்கொள்பான்மையு
மேமுறுமகந்தையும்பிறவுமெய்துமேற்
றாமதராசதந்தானுமுற்றவே. (ருசு)

அறிவொருங்குற்றழியவனயன்கண்ணுத
லிறைவனைவழிபடீஇயேத்தியின்னரு
ளெறிவருதன்மையுநீடுபோதமும்
பெறுதலிற்சாத்திகமுறையும்பெற்றுளான். (ரு௭)

சிவபெருமான் படைப்பாதிதொழிலை இடையறுதியற்றுதலினாலே அவர் பாரமெய்தி விகாரமெய்தார். இவ்வுண்மை சூரியசந்நிதியிலே கமலமொன்று அலர்ந்தும், மற்றொன்றுமுகைத்தும், வேறொன்று உலர்ந்தும் நிற்றலினாலே அறிக. சங்காரகருத்தாவாகிய சிவபெருமானாலே அழிவெய்தியவுலகம் பின்னர் அவரினின்று தோன்றுவது மலபரிபாகம் வரும்பொருட்டேயாம். முன்னர்த் தோன்றியவாறு நிற்கவொட்டாது மீட்டும் மீட்டும் அழிப்பது உயிரின் இளைப்பு ஒழித்தற்பொருட்டேயாம். சித்தியார்:—"உயிரவையொடுங்கிப்பின்னு முதிப்பதென்னரன்பாலென்னிற், செயிருறுமலத்தினாகுஞ் சிதைந்ததேதென்னிற்சிந்தத், தயர்வொழிகாரியங்க ளழியுங்காரணங்கிடக்கும், பயிறருகாரியம்பின் பண்டுபோற்பண்ணுமீசன்." அவர் சங்காரத்தொழில் செய்யுமிடத்து, பிரமவிஷ்ணுக்கள் அழியாது நிலையுதலுடையராயின், அது சங்காரத்தொழிலாகாதாமாதலின்,அவர்களையும் ஒழித்துவிட்டு, அவர் ஒருவரே எஞ்சிநிற்பாரென்க. சித்தியார்.—"இறுதியாங்காலந்தன்னி லொருவனேயிருவருந்தன், மறுதியினின்றொன்னி னிறுதிதானுண்டாகாதா, மறுதியிலரனேயெல்லா மழித்தலாலவனாலின்னும், பெறுதுநாமாக்கநோக்கம் பேரதிகரணத்தாலே." சிவபெருமானுக்கு உட்குணம் சாத்துவிகமும், வெளிக்குணம் தாமசமும்; விஷ்ணுவுக்கு உட்குணம் தாமசமும்,வெளிக்குணம் சாத்துவிகமும்;பிரமாவுக்கு உட்குணமும் வெளிக்குணமும் இராசசமுமாமெனச் சூதசங்கிதை, சிவதருமோத்தரம் முதலாயின செப்புகின்றன. சிவபெருமானுடைய சங்காரம் ஆன்மாக்களை இளைப்பாற்றுங் குணமாய்முடிதலின், அது உள்ளபடி சாத்துவிக குணமாகி, வெளிநோக்கத்துக்குத் தாமசம் போன்றும்;விஷ்ணுவுடைய திதி சுகம் பிறப்பியாது துக்ககாரணமாயிருத்த

யினுமே, அது உள்ளபடி தாமசகுணமாகி, வெளிநோக்கத் துக்குச் சாத்துவிகம் போன்றும்; விளங்குகின்றன.

கரு. எவ்வெவ்வடிவமாய், எவ்வெவ்வண்ணமாய், எவ் வெப்பெயர்கொண்டு எவ்வெத்தெய்வத்தை எவ்வெவர்வழி படினும், அவ்வவ்வடிவமாய், அவ்வவ்வண்ணமாய், அவ்வப் பெயர்கொண்டு அவ்வத்தெய்வத்தைத் தமதுசத்தியால் அதி ட்டித்துநின்று அவ்வவர் வழிபாடுகண்டு அதனையங்கீகரித்து அநுக்கிரகிக்கும் சிவபெருமானே எள்ளும் எண்ணெ யும் போன்றும், சேகண்டியும் ஒலியும்போன்றும், மலரும் மணமும் போன்றும், அரதனமும் ஒளியும் போன்றும் பிர பஞ்சமெங்கும் ஏகமாய் நீக்கமற வியாபிப்பர்.

யாதொருபொருளையாவரிறைஞ்சினுமதுபோய்முக்க
ணாதியையடையுமம்மாவங்கதுபோலத்தொல்லை
வேதமதுரைக்கநின்றவியன்புகழனைத்துமேலா
நாதனையணுகுமெல்லாநதிகளுங்கடல்சென்றென்ன (ருஅ)

எவ்வெவர்தம்மையேனும்யாவரேயெனினும்போற்றி
னவ்வவரிடமாக்கொண்டேயவர்க்கருட்குருவாய்போற்றி
மெய்வருதெளிவிலுன்னைவெளிப்படவுணர்ந்துள்ளோர்க்குத்
தெய்வதபோகமுத்திசிறப்பொடுதருவாய்போற்றி. (ருகூ)

எள்ளுறுமெண்ணெயென்னவெறிமணியரவமென்னக்
கள்ளுறுபோதுகான்றகடியெனச்சலாகைதன்னிற்
றள்ளுறவரியசோதிதானெனவுலகமெங்கு
முள்ளொடுபுறமுமாகியொருமையாற்பரவுமன்றே. (சுO)

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்னும் நால்வகை யோனிகளுள் ஒருயோனிவாய்ப்பட்டுப் பிறப்ப வையாவை அவையெல்லாம் பசுக்கள்; அப்படிப் பிறத்தலி ல்லாததியாது, அதுபதிப்பொருள் என்னும் இதுவொன்றே எனில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும் வண்ணம் கிறபது. சிவஞானசித்தியார்:—"யாதொருதெய் வங்கொண்டீ ரத்தெய்வமாகியாங்கே, மாதொருபாகனார்தாம் வருவர்மற்றத்தெய்வங்கள், வேதனைப்படுமிறக்கும் பிறக்கு

மேல் வினையுஞ்செய்யு, மாதலானிவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே." அருணகிரியந்தாதி:—"எல்லார்பிறப்புமி றப்புமியற் பாவலர்தஞ், சொல்லாற்றெளிந்தே நஞ்சோ ணேச, ரில்லிற் - பிறந்தகதையுங்கேளேம் பேருலகில்வாழ்ந் துண், டிறந்தகதையுங் கேட்டிலேம்." இதனால், வேதபுரா ண இதிகாச முதலிய நூல்களிலே அநாதி முத்த சித்துரு வாகிய பரமபதி சிவபெருமானே என்பது தெள்ளிதிற் றுணி யப்படும். பசுக்கள் பிராமணர் பிதா மாதா முதலாயினோரை இம்மையிலே வழிபட்டோர்க்கு, அஃதறிந்து மறுமையிலே பலன்கொடுப்பார் வேறென்பது எல்லார்க்குமொப்ப முடி ந்தபட்சமாகும். அப்படியாமாயின், தம்மைவழிபட்டவர்களு க்கு அவ்வத்தேவரே எதிர்தோன்றிநின்று பலன்கொடுத்தா ரென்றும் ஆண்டாண்டுக் கேட்கப்படுதலின், அவ்வத்தேவ ரும் அதற்குவல்லுநர் போலுமாலோவெனின், அன்று: அர சன் ஆணையே மந்திரி முதலாயினோர்மாட்டு நின்று பிறர் க்கு அளிக்குமாறுபோல, சிவபெருமானே தன்னாணையைத் தன்னைவல்வழிநிற்கும் அவ்வக்கடவுளர்மாட்டு வைத்துப் பலன்கொடுப்பானாதலினென்க. அங்ஙனமின்றி, தாமே வினை த்துடக்கிற்பட்டுப் பரதந்திரராய் நிற்கும் அக்கடவுளர் பிற ர்க்குப் பயன்கொடுத்தல் ஓர்போதும் பொருந்தாதாம் என்க. சமயகோடிகளுக்கெல்லாம் அவ்வச்சமயகடவுளரைத் தமது சத்தியால் அதிட்டித்து நின்று அருளுபவர் சிவபெருமானே யாமாயின், ஒருவன் எந்தச்சமயத்தில் இருந்தாலுமென்னை! அவன் இந்தச் சைவசமயத்திருந்துகொண்டுதானே, மற்றெ வ்வெச்சமய கடவுளரை வழிபட்டாலு மென்னை! அவனு க்கு யாண்டும் அருள் உண்மையாமோவெனில், அது ஓர் போதும் கூடாது; எங்ஙனமெனின், அகண்டபூமண்டலாதி பதியாகிய அரசனது ஆஞ்ஞையானது, இராஜபதமுதற் சே வகபதமீறுதியாயுள்ள எவ்வெக் கீழ்க்கீழ் அதிகாரிகள் மாட் டும் செல்லுமாயினும், அவ்வவ்வதிகாரிகள் தம்மை அடுத் தோர்க்குத் தத்தம் சக்திக்கேற்ப அளிக்கும் பயனானது; அப் பூமண்டலாதிபதி தன்னை அடுத்தோருக்கு அளிக்கும் பய

னுக்குத் தினைத்துணையேனும் ஈடாகாது அழிதன்மாலையது போலாம்.

சிவபெருமான் யாண்டும் வியாபிப்பரென்பது "இந்த னத்தினெரிபாலி னெய்பழத்தி னிரதமெள்ளின்க ணெண் ணெயும்போலெங்குமுளரிறைவன், வந்தனைசெய்தெவ்விடத் தும் வழிபடவேயருளும்" என்பதனாலும், சிவபெருமான் அடியார்களுக்கு எவ்வெவ்வடிவமுற்று அருளினும், அவ்வவ் வடிவம் அவ்வவ்வண்ணம் இறந்து நிற்பாரென்பது "மைப் படிந்தகண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான் வார்சடையா னென்னினல்லா,னொப்புடையனல்லனொருவ னல்லனோரு
மல னல்லனொருவமனில்லி,யப்படியுமந்நிறமு மவ்வண்ணமு மவ னருளேகண்ணாகக் காணினல்லா, லிப்படியனிந்நிறத்த னிவ் வண்ணத்தனிவ னிறைவனென்றெழுதிக் காட்டொணாதே." என்னுந் தேவாரத்தானும் அறிக.

திருமங்கலியத்தைத் தரித்துக்கொண்டு தமது நாயகனு க்குத் துரோகஞ் செய்து இல்லொழுக்கிறந்த மகளிர்போல, வேதியர்குலத்திற் பிறந்து, சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷந்தரித்து, சிவபெருமானை வழிபடாது மற்றைத் தேவர்களை வழிபடுவோர் சிவத்துரோகியராமென்பது "வே தியர்குலத்திற் பிறந்தவர்தமக்கு விசேடமாமிக்கலியுகத்தில், வேதநீதெய்வமெனப் புராணங்கள்விளம்பவு மன்பினாலுன் றன், பாததாமரையை வழிபடாதேனைப் பண்ணவர்தமைவ ழிபடுவோர், பாதகமறையோர் மூடர்களவர்க்குப் பயூன்றரா பரதெய்வங்களுமே" என்னும் சிவதத்துவவிவேகச் செய்யு ளாலே வெளிப்படும்.

௧௪. பிறப்பிறப்பிலராய் உருவு செயல் பெயரிலதாய் (அகண்டாகாரநித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாயுள்ள) பதியாகிய சிவபெருமான் ஐந்தொழில் நடாத்தி, உயிர்க ளுடைய பாசத்தைவீட்டி, வீடுபேற்றை அருளவேண்டு மென முகிழ்த்த பெருங்கருணையினாலன்றோ, அருவம்,

அருவுருவம், உருவம் என்னும் மூத்திறத் திருமேனிகொண்டருளினர்.

உருவுஞ்செய்கையுமோங்கியபேருமுன்
னருளினற்கொண்டனைத்தையுமுன்புபோற்
றெரியநல்கித்திசைமுகனாதியாஞ்
சுரர்கள்யாரையுந்தொன்முறையீந்துபின். (சுக)

அருளினீர்மையாலைந்தொழில்புரிபவனநாதி
பரமனின்மலனேதுவுக்கேதுவாம்பகவ
னொருவர்பாலினும்பிறந்திடானருவதாயுருவா
யிருமையாயுறைபூரணனியாவர்க்குமீசன். (சுஉ)

தன்னைநேரிலாப்பரம்பொருடனியுருக்கொண்ட
தென்னகாரணமென்றியேலைந்தொழிலியற்றி
முன்னையாருயிர்ப்பாசங்கண்முழுவதுமகற்றிப்
பின்னைவீடுபேறருளுவானினைந்தபேரருளே. (சுங)

ஒன்றாயிருதிறமாயோரைந்தாயையைந்தா
யன்றாதியின்மீட்டுமைந்தாயளப்பிலவாய்
நின்றாய்சிவனேயிந்நீர்மையெலாந்தீங்ககற்றி
நன்றாவிகட்குநலம்புரிதற்கேயன்றே. (சுச)

பரிப்ப
இருபதின்மேலுமைந்தீசன்கேவல
வுருவமதாகியேயுறைந்தபெற்றியும்
விரவியகுடிலையின்வினைவுசெய்துபின்
னருள்புரிமூர்த்திகளாயபேதமும். (சுரு)

சிவபெருமான் மூத்திறத் திருமேனிகொண்டமை "உருமேனிதரித்துக்கொண்ட தென்றலுமுருவிறந்த,வருமேனியதுவுங்கண்டோ மருவுருவானபோது, திருமேனியுபயம்பெற்றோஞ் செப்பியமூன்றுநந்தங்,கருமேனிகழிக்கவந்தகருணையின்வடிவுகாணே." என்னுந் திருவாக்கானும்; அருவத்திருமேனி சிவம், சத்தி, நாதம், விந்து என நான்காமென்பதூஉம் அருவுருவத்திருமேனி சதாசிவன் என ஒன்றாமென்பதூஉம், உருவத்திருமேனி பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன் எனநான்காமென்பதூஉம் "சிவஞ்சத்திநாதம்விந்து சதாசிவன் றிகழுமீச, னுவந்தருளுருத்திரன்றன் மாலயனொன்றினொன்றாய்ப்,பவந்தருமருவநாலிங் குருவநாலுபயமொன்றாய்,நவந்த

ருபேதமாக் நாதனோடிப்பனென்பர்." என்னுந் திருவாக்கானும் உணர்க. அருவத்திருமேனி நிஷ்களமென்றும், அருவுருவத்திருமேனி நிஷ்களசகளம், உபயம் என்றும், உருவத்திருமேனி சகளம் என்றுஞ் சொல்லப்படும். சதாசிவத்தினின்றுதித்த இருபத்தைந்து கேவலவடிவங்கள்:—சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர்; என்பனவாம்.

௩௫. அநாதிமலமுத்தராகிய சிவபெருமான் தம்மை உத்தேசித்து வழிபடும் அடியார்களுக்கு ஞானவடிவமாகிய இஷபாரோகணராய், உமாசமேதராய், பவளமேனியராய், செஞ்சடிலராய், முக்கண்ணராய், நீலகண்டராய், நான்குபுயம் நான்குகரமுடையராய், சர்ப்பாபரணராய் வெளிப்பட்டருளுவர்.

பூதி
மத்

வாலிதாமதிச்சடிலமும்பவளமால்வரையே
போலுமேனியுமுக்கணுநாற்பெரும்புயமு
நீலமாமணிக்கண்டமுங்கொண்டுநின்றனனன்
மூலகாரணமில்லதோர்பராபரமுதல்வன். (௬௬)

மைக்களமுமான்மழுவும்வரதமுடனபயமுறு
மெய்க்கரமுநாற்புயமும்விளங்குபணிக்கொடும்பூணுஞ்
செக்கருறுமதிச்சடையுஞ்சேயிழையோர்பாகமுமாய்
முக்கணிறையாங்காணமுன்னின்றேயருள்புரிந்தான். (௬௭)

நாரிபாகமுமிமையாமுக்கண்ணுந்திருப்புயங்கணான்குமாகி, மூரிமால்விடைமேல்கொண்டெம்பெருமான்மேவுதலுமுன்னிநோக்கிப், பாரின்மீமிசைவீழ்ந்துபணிந்தெழுந்துபலமுறையும்பரவிப்போற்றிச், சூரனாராதபெருமகிழ்சிறந்துதுணைவரொடுந்தொழுதுநின்றான்

சொன்மறைத்தொகையாகமமுதலியதுதிப்பப்
பொன்மைபெற்றதன்கோநகர்நீங்கியேபொற்றாள்
வன்மைபெற்றகுண்டோதரன்மொய்ம்பிடைவைத்துச்
சின்மயத்தனிமால்விடையேறினன்சிவனே. (௬௮)

இவ்வுண்மை "ஆகத்தோர்பாம்பசைத்துவெள்ளேறேறி யணிகங்கைசெஞ்சடைமேலார்க்கச்சூடிப், பாகத்தோர் பெண்ணுடையாராணுமாவர் பசுவேறியுழிதருமெம்பரமயோகி, காமந்தாலெங்கணையான்றன்னைவீழக் கனலாவெரிவிழித்த கண்மூன்றினு, ரோமந்தானுன்மறைகளோதலோவா வொளிதிகழுமொற்றியூ ருறைகின்றாரே." என்னுந் தேவாரந் தாலறிக.

கசு. உருத்திரன் என்னும் நாமமானது சிவபெருமானுக்கே உரியது; அங்ஙனமாயினும், அது அவரினின்று பிறந்தோர்க்கும், அவரைக் கணிப்போர்க்கும், அவர் உருவடைந்தோர்க்கும், தீக்கடவுளுக்கும் செல்லும். பிறவியாகிய துன்பசாகரத்தில் அமிழ்ந்தி வருந்தி அழுவோரை அருட்கரை யேற்றுபவர் சிவபெருமானேயாதலின் அவருக்கு அப்பெயரெய்திற்று.

உருத்திரமூர்த்தியென்போனுயர்பரம்பொருளாயுள்ளே
நிருத்தமதியற்றுகின்றநித்தனுமவன்றன்பொற்றாள்
கருத்திடைநினைந்தோரன்னுன்காயமுந்திருப்பேர்தானும்
பரிப்பராலனையரெல்லைபகர்ந்திடினுலப்பின்றாமால். (எ0)

உருத்திரனென்னுநாமமொப்பிலாவரற்குமன்னுன்
றரத்தகுசிறார்களானோர் தங்கட்குமனையன்பாதங்
கருத்திடையுன்னிப்போற்றுங்கணங்கட்குமவன்றன்மேனி
பரித்திடுவோர்க்குஞ்செந்தீப்பண்ணவன்றனக்குமாமால். (எக)

இன்னலங்கடலுட்பட்டோர்யாரையுமெடுக்குநீரா
லுன்னரும்பரமமூர்த்தியுருத்திரனெனும்பேர்பெற்றா
னன்னவன்றரவந்தோர்க்குமடியடைந்தோர்க்குமன்னுன்
றன்னுருவெய்தினோர்க்குஞ்சார்ந்ததாலவன்றனிப்பேர். (எஉ)

சதுர்வேததாற்பரிய சங்கிரகம்.—"உருத்திரபதம் அக்கினியை உணர்த்தற்குப் பிரமாணமென்னையெனிற் கூறுதும். முன்னோர்காலத்திற் றேவர்கட்கும் அசுரர்கட்கும் போர்நிகழ்ந்தது. அப்போழ்து, தேவர்கள் தம்முடைய தனத்தைப் பாதுகாக்க அக்கினிமாட்டுவைத்தனர். வைக்கப்பட்ட தனத்தை அக்கினி அபகரித்துக்கொண்டனன். அது

பற்றி அவர் அவனை வலிசெய்யலுற்றுழி, அவன் ரோதனஞ் செய்தனன். அதனுன், அக்கினிக்கு உருத்திரப்பெயர் வழக்குண்டாயிற்றென்றறிக. அஃதேல், மருத்துக்களுக்குஞ் சிவகணங்கட்கும் உருத்திரப்பெயர் வழங்குமாறென்னையெனின்:—உருத்திரனினின்றுந் தோன்றினமையின் அவர்க்கும் அப்பெயர் வழக்குண்டாயிற்றெனக. சிவபிரானுக்கோவெனின், உயிர்களுக்குச் ஸம்சாரரோகத்தை யொழித்தற்காரணத்தால் அப்பெயர் உடைமையாயிற்றெனக."

௧எ. தேவர்களுக்குச் செலுத்தப்படும் அவியை ஏற்போரும், அக்கினிக்குத் தலைவரும், யாகரக்ஷகரும், யாகாதிபதியும் உருத்திராகிய சிவபெருமானே என வேதத்துக் கருமகாண்டம் செப்புகின்றது.

புங்கவரெவர்க்குநல்கும்பலிபுகழவிகொள்வானு
மங்கியின்முதலும்வேள்விக்கதிபனுமளிக்கின்றானுஞ்
சங்கரன்றனேவேதஞ்சாற்றுமான்மகத்துக்காதி
யிங்கொருதேவுண்டென்னினெழுகெனவுரைத்திமாதோ. (எ௩)

சதுர்வேததாற்பரியசங்கிரகம்:—"யாகங்களிற் செய்யப்படும் சோமவிளியும் பசு நியோசனமும் சிவபெருமான் பொருட்டுச் செயற்பால என்றும், பால் தயிர் முதலிய அவிசும் அவருடையனவென்றும் வேதங்கூறும். எல்லாக்கிரியைகளும் சிவபெருமானதாணையாற் செயற்பாலவெனச் சாமவேதமுடையாரும், அக்கினியிற் செய்யப்படும் சோமாகுதியும் சிவபெருமானுக்கே உரியதெனை யசுர்வேதமுடையாருங்கூறுவர். யாகங்களில் எஞ்சிநின்ற பொருள்களும் யாகாதிபதியாகிய சிவபெருமானுடைய என்று யசுர் வேதங்கூறும். கவ்வியத்தானுஞ் சோம அவிசானுஞ் பக்குவ சருவானுஞ் செய்யப்படும் இருபத்தொரு யாகங்களுக்குஞ் சிவபெருமானே அரசர் என வேதங்கூறும். துவம் அக்கினேயென்னும் மந்திரமும், உருத்திரனையுடைத்து அக்கினியென்னும் அதித்தமந்திரமும் உடைப்பொருளாகிய சிவபெருமானுக்கே அரசைச் சாற்றுகின்றன."

கஅ. மகாதேவரென்றும், ஈசரென்றும், மும்மூர்த்திதலைவரென்றும், ஏகரென்றும், முடிவிகந்தவரென்றும், சருவாந்தரியாமியென்றும், ஆதியென்றும், பிராமணனென்றும் சிவபெருமானைத் துதித்தமைபோல வேதத்து ஞானகாண்டம் மற்றோர்தேவரைப் புகழ்ந்திலது.

தேவதேவன்மாதேவன்சிறப்புடையீசனெங்கோன்
மூவரின்முதல்வனேகன்முடிவிற்குமுடிவாய்நின்றோ
னுவியுளாவியானோனந்தணனாதியென்றே
யேவரைவிசைந்தவம்மாவெல்லையின்மறைகளெல்லாம். (எசு)

அந்தணர்க்காதியீசனேனையோர்க்கரியவேதா
விந்திரனென்றும்வேதமியம்பியமறையோர்தங்கண்
முந்தையின்முதலைநீத்துமுறையகன்றொழுகல்பெற்ற
தந்தையைவிலக்கிவேறுதேடுவான்றன்மையன்றே. (எரு)

சிவபெருமானுக்கு இத்திருநாமமுண்மை, "பெரிதுமானத்தாலுயர்ந்தவள் பிறரைப்பேசிடாவரன்சிவன்முதலா,மூரியகின்றுமக்குருமணிக் கோவையாலுடன்முழுதலங்கரித்தாள், கரியவற்கரியாய்நின்றொடொப்பவரே கருதினுமிலையெனத்துணிந்துள், திருவடிக்கேதன்கருத்தெலாமமைத்தாள் சிருபசிடதமாமிவளே." என்னும் சிவதத்துவவிவேகச் செய்யுளாலறிக. சிவபெருமானைத் தேவர்களுக்கெல்லாம் பிராமணரென்றும், விஷ்ணுவை க்ஷத்திரியரென்றும், பிரமாவை வைசியரென்றும் சாந்தோக்கியோபசிடதமும்,"திருமார்பன் முதலானதேவருக்கெல்லா மறையோன் சிவனேயாமென், றொருவாய்மைமறைகரைந்தவுண்மையெனத் தெளிந்துலக முய்யமுத்தி, மருவாருங்குழலுமைபத்தினிவளர்ப்ப விடக்கரத்துவயங்கவேந்திப், பெருவாழ்வு தரவரசம் பலத்தாடும் பேரொளியைப்பேணிவாழ்வாம்" என மேலைச்சிதம்பரபுராணமும் செப்புமாற்றாலறிக.

கக. சிவபெருமானே முப்பத்தாறுதத்துவங்களின் வரம்பைக்கடந்தவர்; பிரமவிஷ்ணுக்களோ இருபத்தைந்து தத்துவ வரம்புள் அடங்கினவர். பிரமவிஷ்ணு தேவர்களை அயன் அச்சுதன் அமரர் என்பது முகமனே; அவர்

களைச் சிருஷ்டிகர்த்தா திதிகர்த்தா சங்காரகர்த்தா என்பதும் முகமனே. அக்கினிமுதலிய பூதங்களோடு இந்திரன் விஷ்ணுமுதலிய பசுக்களைப் பிரமமென வேதம்புகழ்ந்தமை சிவ பெருமானுக்காதலே உண்மை;பிறருக்காதல் முகமனே. அவ் வேதமானது சிவனைத் துதித்தமைபோல மற்றொருவரையும் புகழ்ந்ததில்லை;பிறரைப் புகழ்ந்தனவும் முகமனுமென்றுஉல கறிய முன்னும் பின்னும் விலக்கியது. பிரமவிஷ்ணுக்களைச் சிவனுக்குத் திருவடித்தொண்டு செய்து, திருவெலாம் பெற் றுப்பிழைக்குஞ் சிவனடியார்களெனக் கொண்டு வணங்கு வோரே உய்குவர்; அங்ஙனஞ் செய்யாது அவர்களை அவரு க்கு மிக்காரென்றாவது ஒப்பாரென்றாவது கொண்டு வழிப டுவோர் சிவத்துரோகியரேயாம்.

உறைதருமமரர்யாருமுழையராய்ச்சூழநாப்பண்
மறைபயில்பெரியோருற்றுவழிபடவிருந்தாய்போற்றி
யீறுவகையைந்துமாறுமாகியவரைப்பின்மேலா
மிறைவனேபோற்றிபோற்றியென்பிழைபொறுத்தியென்றான். ()

ஞாலமுள்ளதோர்பரம்பொருளுமெனப்புகலு
மாலும்வேதனுமாயையாம்வரம்பினுட்பட்டார்
மூலமாகியதத்துவமுழுவதுங்கடந்து
மேலுயர்ந்திடுதனிமுதலவனன்றிவேறார். (௭௭)

அச்சுதன்னயனமரராகியபெயரவர்க்கு
நிச்சயம்படுமுகமனேயானபோனினது
வச்சிரத்தனியாக்கையுமழிவிலாவரமு
முச்சகந்தொழப்பல்லுகமிருத்தலாய்முடியும் (௭௮)

மெய்ச்சுடர்கெழுமியவியன்பொற்கோபுர
முச்சியிற்றொடுத்திடுமுழங்குகேதன
மச்சுதனுஞ்சிவனளவைதீர்முகத்
தச்சிதொறிருந்தாவொலித்தல்போலுமால். (௭௯)

மானுடத்தரைத்தேவென்பர்வானகத்தவரை
யேனைமுத்தொழிலவரென்பரிருவர்தங்களையு
நானிலத்தினிற்பரம்பொருளிவரெனநவில்வா
ரானசொற்றிறமுகமனேசரதமற்றன்றால். (௮௦)

அவனிதுபுகறலோடுமெருண்மகனிசைப்பான்மேலாஞ்
சிவனருள்வேதம்பூதத்திறந்தையுமுயிர்களோடு
மெவரையும்பிரமமென்றேயிசைப்பதென்னெனதுநெஞ்சங்
கவலுறுகின்றதெந்தைகழறுதிகடிதினென்றான். (அக)

என்னலுங்கமலத்தண்ணலியாவருந்தெரிதறேற்று
வுன்னரும்பெற்றியீதென்றுணர்தரக்கேட்டியன்றான்
சொன்னதோர்மறைகடம்மிற்றுணிபுகேளிறுதியில்லா
முன்னவற்காதலுண்மையொழிந்தனமுகமனுமால். (அஉ)

காரெழில்புரையுமேனிக்கண்ணனையென்னைப்பின்னை
யாரையும்புகழும்வேதமரன்றனைத்துதித்ததேபோ
லோருரைவிளம்பிற்றுண்டோவுரைத்ததுமுகமனென்றே
பேருலகறியமுன்னும்பின்னரும்விலக்கிற்றன்றே. (அங)

மாலயன்முதலோர்யாரும்வரம்பிலித்திருவெய்த
மேலைநாளளித்தோன்றானும்விமலனுமினையர்க்கெல்லா
மூலமுந்தனக்குவேறோர்முதலிலாதவனுமெங்க
ளாலமர்கடவுளன்றியமரரில்யாவரம்மா. (அச)

கானுறுபுலித்தோலாடைக்கண்ணுதற்கடவுட்கன்ப
ரானவரென்றுமன்னாற்கடித்தொழில்புரிந்துவாழும்
வானவரென்றுமெம்மைவழுத்தினர்க்கருள்வோமல்லா
வேனையர்தம்மைத்தெய்வென்றெண்ணியேயிருத்தும்யாமே, (அரு)

நம்மையும்பரமென்றுன்னிநாதனிற்சிறப்புச்செய்யும்
வெம்மைகொணெஞ்சர்தீராவிழுமவெங்கிரயம்வீழ்வர்
தம்மையஃதெடுத்தல்செய்யாசமமெனப்புகல்கிற்போர்க
ளெம்மையுந்துயரமென்னுமிருங்கடற்படுப்பரன்றே. (அசு)

சிவபெருமான் சுத்தமாயையிற் கிருத்தியமைந்துந் தா மேசெய்வார். அசுத்தமாயையிற் கிருத்தியமைந்தும் அநந் தேசுரரை அதிட்டித்து நின்றுசெய்வார் பிரகிருதியின் கீழு ள்ள கிருத்தியமைந்தும் அநந்தேசுரர்வாயிலாக ஸ்ரீகண்ட உருத்திரரை அதிட்டித்துநின்று செய்வார். ஸ்ரீகண்ட உரு த்திரர் பிரமாவையதிட்டித்து நின்று படைத்தலும், விஷ்ணு வை அதிட்டித்து நின்று காத்தலும்,கால உருத்திரரை அதி ட்டித்துநின்று அழித்தலுஞ் செய்வார்: செய்யவே, பிரகிரு திமுதற் பிருதிவியீறாயுள்ள ஆன்மதத்துவம் இருபத்துநா

ன்கும் ஸ்ரீகண்ட உருத்திரராலும், வித்தியாதத்துவங்கள ஏழும் அநந்தேசுரராலும், சிவதத்துவம் ஐந்தும் சிவனாலும் ஒடுங்குமென்பது பெறப்படும். படவே, விஷ்ணு முதலாயி னோர் பிரகிருதிவரையுள்ளார் என்பதும், சிவபெருமான் சுத் தமாயாதீதரென்பதும் தெளியப்படும். சித்தியார்:—"தத்து வமெண் மூன்றுஞ் சென்றான்மதத்துவத்தொடுங்கும், வித் தையினொடுங்குமாறுஞ் சிவத்தினிறொடுங்குமூன்று, நித்தத த்துவமிம்மூன்று மென்பர்களிரண்டு நின்ற, சுத்தமாஞ்சிவத் தொடுங்குந தோற்றமுமிதுபோலாகும்."

அச்சுதன், அமரர் என்பன அழியாதவரென்றும், அய ன் பிறவாதவரென்றும் பொருள்படும். படவே, அழியாத வர் பிறவாதவரென்றும், பிறவாதவர் அழியாதவரென்றும் செப்பப்படுதலின், அச்சுதன் அயன் முதலாயினோர் பதியா வர்போலுமாலோ எனின்; அது "நூறுகோடி பிரமர்களொ ந்தினு, ராறுகோடிநாராயண ரங்ஙனே, யேறுகங்கை மண லெண்ணிலிந்திர, ரீறிலாதவ னீசனொருவனே." என்னுந் தேவாரத்தால் மறுக்கப்படும்.

வேதங்கள் பிறரைத்துதித்தனயாவும் சிவபெருமானை யே சார்வனவாம். இது "அறப்பெருங்கடலேயளவிலாவண க்க மறைந்திடுமெண்ணிலாமனுக்கள், பிறர்க்குரித்தாகச்சிற ந்ததோர்பெருமை பேசிடும்வெளிப்படையுனக்கே, கறைப் பெருமிடற்றாய்சூத்திரர்முதலோர் காலினும்விழுந்திடுமூர்க் கர், குறித்துனைவணங்கக் கூசுவரந்தோ கொள்ளுவரோதெ ரிந்தவரே." என்னும் சிவதத்துவவிவேகச் செய்யுளாலறிக.

பிரமவிஷ்ணுக்கள் உயிர்பிழைத்துத் திருவைப்பெற்று ரென்பது "அண்டர்கடல்கடைந்த வந்நாளுண்டானவிடம், கண்டமட்டிற் கண்ணுதலோன்கண்டத்திற், கொண்டில னே—லங்கமலேவாணியெனு மாயிழையார்தங்கழுத்தின், மங் கலநாணேதுரையின் மற்று." என்னும் வெண்பாவானறிக.

சிவனுக்கு ஒருவரை மிக்காரென்றாவது, ஒப்பாரென் றாவது கொள்வது சிவத்துரோகமாகும்.

உக. உண்மைமுத்தியானது அநாதிமலமுத்தராகிய சிவபெருமான் ஒருவராலே சித்திக்கும். சிவஞானமில்லாது வீடுபேறு அடைதுமெனல், ஒருவன் ஆகாயத்தினின்றுந்தோலை உரித்து உடுத்தலை நிகர்க்கும். எல்லாப்பேற்றையுங்கெடுக்க வல்லனவாகிய எத்துணைத்தீமைகளும் சிவஞானத்தாற் பெறப்படும் பெரும்பேற்றைக் கெடுக்கவல்லன அன்று. சிவனை விடுத்து முத்திபெற்றுவரு மெல்லை; சிவனருளின்றி வாழ்பவரும் இல்லை; சிவனருள்பெற்றுப் பெறுததுமில்லை; சிவனின்றிப் பரமபதியு மில்லை; இது ஆணையே.

அன்றியுமொன்றுகேண்மோவம்புயனுதியாகி
நின்றவர்தம்மையெல்லாநீக்கியச்சிவனென்றுள்ள
வொன்றொருமுதல்வன்றனையுய்த்திடுமுத்திவேண்டி
னென்றுமஃதியம்பிற்றென்னின்யாவரேதேவராவார். (அஎ)

பரசிவனுணர்ச்சியின்றிப்பல்லுயிர்த்தொகையுமென்றும்
விரவியதுயர்க்கிறெய்திவீடுபேறடைதுமென்ற
லுருவமில்விசும்பிற்றோலையுரித்துடுப்பதற்கொப்பென்றே
பெருமறையியம்பிற்றென்னிற்பின்னுமோர்சான்றுமுண்டோ. ()

துயக்குறுபவத்திடைதொடர்ச்சியறுதூயோர்
நயப்பொடுவெறுப்பகலினுளுமடமாணுர்
முயக்குறினுமாதவமுயன்றிடினுமன்னோர்
வியத்தருமனத்துணர்வுவேறுபடுமோதான். (அகூ)

அவனருள்பெறுதுமுத்தியடைந்தனரில்லையல்லா
லவனருளின்றிவாழுமமரரும்யாருமில்லை
யவனருளெய்தினெய்தாவரும்பொருளில்லையாணை
யவனலதிறைவனில்லையவனைநீயடைதியென்றான். (கூ0)

சிலர் சிவபெருமானையும், சிலர் விட்டுணுவையும், சிலர் ஏனைத்தேவர்களையு முபாசிப்பர். அவ்வுபாசனைகள் உலகத்திற் பயன்றருவனவன்றி வீடுபேற்றினைத்தாராவாம். ஒருவன் ஆகாயத்தை ஆடையாக்கிக் கொள்ளுமாயின் சிவபிரானை உபாசியாது துக்கத்தினீங்கி வீட்டினைத்தலைப்படும் என்னுஞ் சுவேதாச்சுவதரச் சுருதி கூறுதலின், வீடுபேற்றின் பொருட்டுச் சிவபெருமானையே உபாசிக்க. உடைந்த மரக்கலம்

பிறிதொரு மரக்கலத்தைக் கரையடைவிக்கமாட்டாது; அது போலப் பிறந்திறந் துழலுந்தேவர், அவ்வாறுழலும் எம்மனோர்க்குச் சரணாகமாட்டார். முயலிற் கோடும், ஆகாயத்திற் பூவும், கானலினீரும், மலடிமாட்டு மகப்பேறு முளவாயின், ஏனைத்தேவரை உபாசித்தலான் வீடுபேறுந் தலைப்படுமென்க. சிவஞானப்பேற்றைக் கெடுக்கவல்லன யாவுமில்லை என்பது ''நாடுகளிற்புக்குழன்றுங்காடுகளிற்சரித்து நாகமுழைபுக்கிருந்துந்தாகமுதறவிர்ந்து, நீடுபலகாலங்களித்தாரயிருந்துநின்மல ஞானத்தை யில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பினேடுதருமலர்க்குழலார் முலைத்தலைக்கேயிடைக்கே யெறிவிழியின் படுகடைக்கேகிடந்துமிறைஞானங், கூடுமவர்கூடரியவீடுங்கூடிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்.'' என்னுந் திருவாக்கால் அறிக.

௨க. தம்மை மறந்தவர்களுக்குப் பேரருள்புரியும் நித்தரும், தமது சத்துருக்களையும் நினைத்து அருள் செய்யும் அநாதிமல முத்தருஞ் சருவகிருபாலுவாகிய சிவபெருமானே.

பொறுத்தியெம்பிழையையென்றேபோற்றிசெய்முனிவர்தங்க
டிறத்தினைநோக்கிநந்தஞ்செந்நெறியொழுகித்தீய
மறத்தினையகற்றிமேலைமாதவம்புரிதிரென்று
நிறுத்தினனடையாதார்க்குநீடருள்புரியுநித்தன். (௬௧)

இனைத்தருள்புரிதலுமெண்ணலாரையு
நினைத்தருள்புரிதருநிமலன்றொடொழாச்
சினத்தொடுமகத்தைமுன்சிதைத்துளோரையு
மனத்தகுமன்பினுல்வணங்கிப்போற்றவே. (௬௨)

''அடையாதார்க்கு நீடருள்புரியுநித்தன்'' ''எண்ணலாரையுநினைத்தருள் புரிதருநிமலன்'' என்னும் வாக்கியங்களால, சமயங்களனைத்தினுஞ் சமயாதீதமாகிய சைவசித்தாந்தத்தின் இரக்கமிருதியுண்மை நன்குவிளக்கப்படுகின்

௨௨. வைநாயக வைரவ வீரபத்திர சுப்பிரமணிய மூர்த்தங்கள் ஒவ்வோர்போது துஷ்ட நிக்கிரக, சிஷ்டபரிபாலனத்தின் பொருட்டுச் சிவபெருமான் கொண்டருளிய மூர்த்தங்களாம். விநாயகர் முதலிய நால்வரும் சிவகுமாரர் எனப்படுவர். இவர்கள் சிவனினின்றும் வேறாகாதவரென்க.

விநாயகர்.

பாங்கரில்வருவதோர்பரமனாணையா
லாங்கதனடுவணிலாதியாகியே
யோங்கியதனியெழுத்தொன்றிரண்டதாய்த்
தூங்குகைம்மலைகளிற்றோன்றிற்றென்பவே. (௯௩)

மூலமாமெழுத்திவைமுயங்கிமால்கரிக்
கோலமாய்ப்புணர்வதென்கூறுகென்றனு
மேலவார்கருங்குழலிறைவிகேளென
வாலமார்களத்தினனருள்செய்கின்றனன். (௯௪)

முன்புநீகாண்டலின்மூலமாயுடையதோர்
மன்பெருந்தொல்பொறிமருவியீருருவுறீஇ
யன்பினாலானைபோற்புணருமாலாகையா
னின்பெருந்தகவினைநினைகிலாய்நீயுமே. (௯௫)

காட்சியாலிதுசெயுங்காரணம்பெற்றநின்
மாட்சிதான்யாமலான்மற்றியாருணர்குவா
ராட்சியாயுற்றதொல்லருமறைக்காயினுஞ்
சேட்செலாநிற்குநின்றிருவருட்செய்கையே. (௯௬)

என்னவேமுகமனாலெம்பிரானம்பிகை
தன்னொடுமொழியவத்தந்தியும்பிடியுமாய்த்
துன்னியேபுணர்வுறுந்தூயசெய்தொழில்விடா
முன்னமேபோன்றதான்முடிவிலாக்குடிலையே. (௯௭)

அக்கணத்தாயிடையைங்கரத்தவனருண்
முக்கணால்வாயினான்மும்மதத்தாறுபாய்
மைக்கருங்களிறெனுமாமுகத்தவன்மதிச்
செக்கர்வார்சடையனோர்சிறுவன்வந்தருளினான். (௯௮)

ஒருமையாலுணருவோருணர்வினுக்குணர்வதாம்
பெருமையானெங்கணும்பிரிவரும்பெற்றியா

னருமையானேவருமடிதொழுந்தன்மையா
னிருமையாமீசனேயென்னநின்றருளுவான். (௯௯)

மோனமேகுறியதாமுதலெழுத்தருளிய
ஞானமாமதலைபானண்ணவேபூதவெஞ்
சேனையாயினவருள்செய்துசிற்பரையொடு
மானைமாமுகனொடுமமலன்மீண்டருளினான். (௧௦௦)

வைரவர்.

எகினமதுயர்த்தவண்ணலிரும்பவந்தொலைப்பவேனைப்
பகவர்தமகந்தைமாற்றப்பண்ணவர்மதர்ப்புச்சிந்த
மிகுபெருங்கருணைதன்னால்வேதநாயகனுள்ளத்து
மகிழ்வொடுபுரிந்தானென்பவைரவக்கடவுடன்னை. (௧௦௧)

நீலூறுசுடரின்மெய்யுஞெகிழிகளரற்றுந்தாளு
மாலமதுயிர்க்குஞ்செங்கேழரவவெற்றரையுஞ்சென்னி
மாலைகளனந்தகோடிவயின்வயின்பெயருமார்புஞ்
சூலமும்பரசுநாணுந்துடியுமேந்தியபொற்றோளும். (௧௦௨)

முக்கணுந்திங்களேபோன்முளைத்தவாளெயிறும்வன்னிச்
செக்கரஞ்சடையின்சீருஞ்செயிர்கெழுநகையுமாக
வுக்கிரவடிவுகொண்டாங்குதித்திடுவகன்றன்னை
மைக்கிளர்கண்டத்தெந்தைநோக்கியேவகுத்துச்சொல்வான். ( )

வீரபத்திரர்.

அந்தவெல்லையெமையாளுடையவண்ணலகிலந்
தந்தமங்கைதனதன்பினைவியந்துதளருஞ்
சிந்தைகொண்டசெயன்முற்றியிடுமாறுசிறிதே
புந்தியுள்ளுறநினைந்தனனினைந்தபொழுதே. (௧௦௪)

பொன்னின்மேருவினிருந்திடுபொலங்குவடெலா
மின்னும்வெள்ளிமுளைமேற்கொடுவிளங்கியதென
மன்னுதண்சுடர்மதிக்குறைமிலைச்சுமவுலிச்
சென்னியாயிரமும்வான்முகடுசென்றொளிரவே. (௧௦௫)

அந்திவான்பெருமேனியன்கறைமிடறணிந்த
வெந்தைதன்வடிவாயவனுதல்விழியிடையே
வந்துதோன்றியேமுன்னுறநின்றனன்மாதோ
முந்துவீரபத்திரனெனுந்திறலுடைமுதல்வன். (௧௦௬)

சுப்பிரமணியர்.

நிற்புறுமமரர்யாருநெஞ்சுதுண்ணென்னநீடு
மற்புதநீரராகியருண்முறையுன்னிப்போற்றச்
சிற்பரன்றன்கொண்டுள்ளதிருமுகமாறுதன்னிற்
பொற்புறுநுதற்கண்டோறும்புலிங்கமொன்றென்றுதந்தான். ()

செந்தழன்மேனியன்றியின்வண்ணமாத்
தந்தனன்குமரனைத்தனுதுகண்ணினு
னுய்ந்திடயாமெலாமுலகின்முன்னரே
வந்திடுவீரனுமதலைமானவே. (௪௦௮)

சிவபெருமான் உயிர்களுடைய வினையை வீட்டுதற்கும், அவர்களுக்குப் போகத்தை ஊட்டுதற்கும் கோரமூர்த்தம் சிவமூர்த்தங்கொண்டருளுவர். வைரவ வீரபத்திரமூர்த்தங்கள் பிரமன், தக்ஷப்பிரமன் முதலாயினோருடைய சிவதூஷண சிவத்துரோகவினையை வீட்டுதற்கும், வைநாயக சுப்பிரமணியமூர்த்தங்கள் கயமுகன் சூரன் முதலாயினோரால் எய்திய இடையூறுகளினின்று நீக்கித் தேவர்களுக்குப் போகமூட்டுதற்கும் எழுந்தமூர்த்தங்களாமென்க. சிவபெருமானொருவரை அழித்து மற்றொருவரைக் காத்தல் குற்றமாகாமை "தந்தைதாய்பெற்றதத்தம் புதல்வர்கட்குஞ்சொலாற்றின், வந்திடாவிடினுறுக்கி வளாரினாலடித்துத்தீய, பந்தமுமிடுவரெல்லாம் பார்த்திடிற்பரிவேயாகு, மிந்தநீர்முறைமையன்றோ வீசனார்முனிவுமென்றும்." என்னும் திருச்செய்யுளான் அறிக. செய்கையினாலே கோபம்போலத் தோன்றினும் கருத்துவகையான் அவை அருளேயாம் என்பது இதனாற் பெறப்பட்டது. வாக்குமனாதீதகோசரமாகிய சிவபெருமான் திருமூர்த்தங்கள் கொள்வது சுத்ததத்துவங்களிலேயாம் என்னும் வாய்மை விநாயகர் முதலாயினோர்க்குச் செப்பிய தோற்றங்களினாலே உணரப்படும்.

"பரமனாணையால்" என்றமையானும், "தனியெழுத்தொன்றிரண்டதாய்" என்றமையானும், பிரணவமாகிய தனியெழுத்தே இருவடிவுற்றதென்பதும்; "முன்புநீகாண்டலின்" "காட்சியாலிதுசெயும்" என்னுஞ் செய்யுட்களினாலே

NAVALAR GRANTHAVALI

இவ்விருவடிவமும் சத்தியுஞ் சிவமுமாமென்பதும்; "தூய செய்தொழில்விடா" என்றமையால், இவ்விருவடிவங்களின் கலப்பு அசுத்தமாயாதத்துவங்களிலே உள்ளோர் அசுத்தக் கலப்புப்போலாகாது சுத்தமாம் என்பதும் பெறப்பட்டன. நட்சத்திரவடிவு, தண்டவடிவுகளாக முதலாம், இரண்டாம் உறுப்புக்கள் அமையப்பெற்றது பிரணவமென்று காமிகாகமம் செப்புகின்றமையால், அவ்விரண்டுறுப்பும் கலந்தவடிவம் ஊமையெழுத்து என்றும், பிள்ளையார்சுழி என்றும், மௌனக்கரமென்றும், மௌனக்குறி என்றும் சொல்லப்படும். இது "மோனமேகுறியதாமுதலெழுத்தருளிய" என்றமையான் அறிக. யானைத்தலையோடு சேர்ந்த துதிக்கையிலே பிரணவத்தை அமைத்துக்காட்டுவர் மேலோர்.

வைரவமூர்த்தம் சிவபெருமானுடைய இருதயத்தினின்று உதித்தமை "வேதநாயகனுள்ளத்துமகிழ்வொடு புரிந்தானென்ப வைரவக்கடவுடன்னை" என்றமையாலே போதரும்.

வீரபத்திரமூர்த்தம் "சிந்தையுள்ளுறநினைந்தனன்" என்றும், "சென்னியாயிரமும் வான்முகடுசென்றுளிர" என்றும், "எந்தைதன்வடிவாயவனுதல்விழியிடையே வந்துதோன்றியே முன்னுறநின்றனன் முந்துவீரபத்திரனெனுந் திறலுடைமுதல்வன்" என்றும் கூறப்பட்டமையினுல் அறிக.

சுப்பிரமணியமூர்த்தம், "சிற்பரன்றான் கொண்டுள்ள திருமுகமாறுதன்னிற் பொற்புறுநுதற்கண்டோறும் புலிங்கமொன்றொன்றுதந்தானென்றும், "தீயின்வண்ணமாத் தந்தனன் குமரனைத்தனதுகண்ணினுல்" என்றும் செப்பியவாற்றால் அறிக.

சுத்தசிவசோதி மத்தியசோதி நிஷ்கள நிருந்த சிவத்தினின்று முகிழ்த்த அதிக்கிருந்த விந்துக பரசிவத்தினின்று அதிக்கிருந்த விந்துக பராசத்தி தோற்றிற்று; இதில் நின்றும் அநதிக்கிருந்த விந்துக பரசிவம் தோற்றிற்று; இதில் நின்று அநதிக்கிருந்த விந்துக பராசத்தி தோற்றிற்று;இதில் நின்று ஆதிசத்திமுதலிய நான்குசத்திகள் தோற்றிய; பராச

த்திமுதலிய ஐந்து சத்திகளில் நின்று சிவசாதாக்கியம் முத லிய ஐந்துசாதாக்கியங்கள் தோற்றிய; பஞ்சசாதாக்கியங்க ளுள் ஒன்றாகிய கன்மசாதாக்கிய மெனப்படும் சதாசிவத்தி னின்று மநோன்மனியும், மநோன்மனியிலிருந்து மகேசுர னும், மகேசுரனிலிருந்து மகேசையும், மகேசையிலிருந்து ஸ்ரீகண்ட உருத்திரரும், ஸ்ரீகண்ட உருத்திரரினின்று உமை யும், உமையினின்று விஷ்ணுவும், விஷ்ணுவினின்று இலக் குமியும், இலக்குமியிலிருந்து பிரமாவும், பிரமாவினின்று வா ணியுமாகத் தோற்றுவர். (அதிக்கிராந்தவிந்துகபரசிவம் = பர சிவம் = சிவம்; அதிக்கிராந்தவிந்துகபராசத்தி = பராசத்தி = சத்தி; அநதிக்கிராந்தவிந்துகபரசிவம் = பரநாதம் = நாதம்; அநதிக்கிராந்தவிந்துகபராசத்தி = பரவிந்து = விந்து.)

முன்னர்க்கூறிய ஸ்ரீகண்ட உருத்திரரும் இவரினின்று தித்த சுப்பிரமணியர் முதலாயினோரும், இடபாரூடர்முத லிய இருபத்தைந்து சேவலவடிவங்களும் மகேசுரரில் அட ங்குவர்; அடங்கவே, விநாயகர்முதலிய நால்வரும் சிவபெரு மானினின்று வேறாகாதவர் என்பதனையும், அவர்கள் சிவ பெருமானுடைய சத்திகளாமென்பதனையும், மாணிக்கரத்தி னத்திலும் அதினின்றுபிறந்த ஒளியினும், அக்கினியின் சுடு தல் அடுதல் விளக்குதற்சத்திகளினும் அமைத்து வேறின் மையை உய்த்துணர்ந்துகொள்க.

நித்தமுத்த சுத்தசிவன், ஒன்றின் ஒன்றாகத்தோன்றி ஒவ்வொரு தத்துவங்களினின்றுகொண்டு தத்தம் தொழில்க ளைச்செய்யும் சிவம்முதற் பிரமனீறாகிய நவபேதங்களினும் வேற்றுமை உறாது நின்று, அவ்வத்தொழில்களைச் செய்வர். செய்யவே, சிவபேதங்கள் எல்லாம் குருமூர்த்தங்களாமென வும், நித்தமுத்த சுத்த சிவனொருவரே நித்தியராமெனவும் தெளிக.

உபபாதகம், மகாபாதகம், அதிபாதகமெனப் பாவங் கள் மூவகைப்படும் என வேதாகமங்கள் செப்பும். உபபா தகம் பிராமணர்பொருட்டு வைத்தபொருளை அபகரித்தல்,

பிராமணர் திரவியத்துக்குப் பிறராற் கேடுவிளைத்தல், தவத்தினரைக் கோபித்தல், செய்நன்றிகொல்லல் முதலியனவாம். மகாபாதகம் பிராமணரை வதைத்தல், பிராமணன் கள்ளுணல், ஒருவர்பொன்னைத் திருடல், குருமனைவியைப் புணர்தல், இந்நால்வரோடு கூடுதல், பிராமணரை வைதல், சபையிலே பெரியோரை இகழ்தல், குருவை எதிர்த்தல், வேதாத்தியயனம் சந்தியாவந்தனம் அக்கினிகாரியம் செய்யவொட்டாது தடுத்தல் முதலாயினவாம். சிவபெருமானை நிந்தித்தல், அவரை வழிபடும் முறைமையைப் போதிக்குங் குருவைநிந்தித்தல், அவருடைய அடியாரை நிந்தித்தல், அவர் அருளிச்செய்த வேதாகமங்களை நிந்தித்தல், இந்நிந்தைகளைக் கேட்டுக்கொண்டிருத்தல், சிவத்திரவியங்கவர்தல் முதலியன சிவத்துரோகமாகிய அதிபாதகம் எனப்படும். குடிகளுக்குச்செய்யுந் தீமையினும் மகாராஜாவுக்குச் செய்யுந்தீமை மிகக்கொடியது; அதுபோலவே, ஆன்மாக்களுக்குச் செய்யுந் துரோகத்தினும் சிவபெருமானுக்குச்செய்யுந் துரோகம் மிகக்கொடியது. குடிகளுக்குச்செய்த தீமை இராசாவினாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும்; இராசாவுக்குச் செய்த தீமையோ பொறுக்கப்படமாட்டாது; அதுபோலவே, ஆன்மாக்களுக்குச்செய்த துரோகம் சிவபெருமானாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும்; சிவபெருமானுக்குச்செய்த தீமையோ பொறுக்கப்படமாட்டாது. ஆதலால், மேற்கூறிய சிவத்துரோகங்களுள் ஒன்று செய்தவரும், அதற்குடன்பட்டவரும, அது செய்வாரைத் தண்டித்தாயினும் கண்டித்தாயினும் விலக்காது பொறுத்தவரும், அது செய்வாரோடு கூடினவரும் இருபத்தெட்டுக்கோடி நரகங்களினும் அளவில்லாத கற்பகாலம் கிடந்து வருந்துவர். தேவர்களாயினு மாகுக; அரசராயினு மாகுக; ஐம்பொறியடக்கல், சந்தியாவந்தனம், சிவதரிசனம், சிவஞானம் முதலிய பலவற்றுனும் மிகச் சிறந்தவராயினு மாகுக; சிவதூஷணங்களைத் தாம் நேரே செய்யாராயினும் பிறர்செய்வதை இசைந்து கேட்டுக்கொண்டிருப்பாராயின், அவர் தண்டிக்க

ப்படுதல் தப்பாது! தப்பாது!! சித்தாந்தசிகாமணி: “கண்டனனாயின் முக்கட் கடவுளை நிந்திப்போனைத், தண்டனைபுரிந்து கொல்க வரிதெனிற் சமிக்கநின்று, மண்டனில் வலியனன்றேல் வான்செவித் துளைகள் பொத்திக், கொண்டவனகன்றுசெல்க குலகுலந்தமலபத்தன்.”

சிவபெருமான் தம்மை இகழ்தலாகிய அதிபாதகம் செய்த பிரமாவுடைய உச்சிச்சிரசை வைரவர்வாயிலாக நகமொன்றினாலே கிள்ளிக்களைந்துவிட்டு விஷ்ணுமுதலிய தேவர்களுடைய குருதியைவாங்கி, அவர்கள் எல்லோருடைய அகந்தையையுமடக்கிச் சுத்தர்களாக்கினார்.

சிவபெருமானைத் தூஷித்த தக்கன் சிரம் அறுப்புண்டும், அச்சிவதூஷணத்தைக் கேட்டுக்கொண்டிருந்த தேவருள்ளே விஷ்ணு புடைப்புண்டும், பிரமதேவர் குட்டுண்டும், சந்திரன் உடல் தேய்ப்புண்டும், சூரியன் பல் உடைப்புண்டும், பகன் கண் பறிப்புண்டும், இயமனும் எச்சனும் குபேரனும் வாயுவும் வெட்டுண்டும், குயிலுருவங் கொண்டு பறந்த இந்திரன் வெட்டுண்டு வீழ்ந்துண்டும், அக்கினி கையும் நாக்கும் அறுப்புண்டும், அக்கினி தேவியாகிய சுவகாதேவி மூக்குக் கிள்ளுண்டும், சரசுவதியும் சாவித்திரியும் காயத்திரியும் குயமும் மூக்கும் கொய்வுண்டும், நிருதி புடைப்புண்டும், வருணன் எற்றுண்டும், பிறரும் இங்ஙனம் தண்டிப்புற்றனர் வீரபத்திரக்கடவுளாலென்க. சிவபெருமானையும், அவர் அடியார்களையும், சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்ஷங்களையும் நிந்திக்கும் பிராமணரும், நாயகனுக்குரிய திருமங்கலியத்தைத் தரித்துத் தமது நாயகனுக்குத் துரோகஞ்செய்து இல்லொழுக்கிறந்த மகளிர்போல, சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு அவைகளுக்குரிய சிவபெருமானை விடுத்துப் பரதெய்வங்களைப்புகழ்ந்து வழிபடுலேயும் பிராமணருமாகிய தக்கன்யாகத்துண்டார், எந்நாளும் மேலாகிய சிவகதி பெறாது வருந்தும்படி திருநந்திதேவராலும், பிரமாவாலும், துருவாசமுனிவராலும், பிருகுமுனிவராலும், கௌதம[illegible]ணுவமுனிவ

MAHAMAHOPADHYAYA

ராலும், ததீசிமுனிவராலும் சாபமேற்றவராமென்க. திருக்குற்றாலப்படலம்:—"சிட்டர்புகழ் கயிலைமலை காத்தருளுந் திருநந்தி தேவன்செங்கேழ், மட்டுறுபங் கயத்துறைபு நான்முகத்தோன் றுருவாசன் மறைநூல்யாவுந், தட்டறவே யுணர்பிருகு கௌதமன் கண்ணுவமுனிவன் றதீசியின்றோ, னிட்டபெருஞ் சாபமெலாம் பொய்த்திடுவோ வெனவுன்னி யேகலுற்றான்." அனந்தன் சாபநீங்குபடலம்:—"பேசரிய மறைகளெலாம் பராபரனீ யெனவணங்கிப் பெரிதுபோற்றீ, மீசனையு மன்பரையு நீற்றொடுகண் டிகையினையு மிகழ்ந்துநீவிர், காசினியின் மறையவரா யெந்நாளும் பிறந்திறந்து கதியுறாது, பாசமதனி டைப்பட்டு மறையுரையா நெறியதனிற் படுதிரென்றான்."

தக்கன் சிவதூஷணஞ்செய்தபோது அச்சமிகுதியினாலும், பொருளாசையினாலும், அதனைக் கேட்டுக்கொண்டு மௌனமாக இருந்த தேவர்கள் வீரபத்திரக்கடவுளாலே முன்னர்த் தண்டிக்கப்பட்டுப் பின்னர்ச் சூரபன்மனாலே சிறையில் இடப்பட்டுக் கிடந்து, நூற்றெட்டுகம் வரையுந் துன்பமனுபவித்தனரென்பதும், அவர்கள் சிறையினின்று சுப்பிரமணிய சுவாமியினாலே நீக்கப்பட்டனரென்பதும் கந்தபுராணத்திலே விசேஷமாக விரித்துச்சொல்லப்பட்டன.

வேண்டிய வேண்டிய போகங்களை எல்லாம் கொடுக்கின்ற சிந்தாமணி, காமதேனு, கற்பகதரு முதலியன அமைந்த சுவர்க்கலோகத்திலே இருந்து தனது ஆசாரியராகிய பிரகஸ்பதியினாலே வேதாகம புராணாதிகளை ஓதியுணர்ந்து நல்லொழுக்கத்தின் வழுவாதொழுகித் திரிகால சந்தியாவந்தனம், அக்கினிகாரியம், சிவபூசை முதலியனவற்றைத் தவறாது அநுட்டித்துவந்த இந்திரகுமாரனாகிய சயந்தனும் மற்றைய தேவர்களும், தக்கன் செய்த சிவநிந்தையை இந்திரன் அச்சமிகுதியோடும் வெறுப்பினோடும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த குற்றமொன்றுக்காக வைதிகநெறி பிறழ்ந்து, சிறையிலே கிடந்து, மீன்சுமந்து இத்துணைக்காலம் இத்

துணைத்துன்பம் அனுபவித்தார்களாயின், பரசமயிகளுடைய சகாயத்தையாயினும், பிரீதியையாயினும் பெறும்பொருட்டு அப்பரசமயிகளுடைய ஆலயங்களுக்குச் சென்று மகிழ்ந்து சிவதூஷணங்களைக் கேட்போரும், அப்பரசமயிகளைத் தங்கள் வீடுகளிலே வருவித்துச் சிவதூஷணப்பிரசங்கம் கேட்போரும், சிவதூஷணவிருத்தியின் பொருட்டு அமைக்கப்படும் வித்தியாசாலை ஆலயம் முதலியவைகளுக்கு இடம் கொடுப்போரும், அவைகளின்பொருட்டுப் பொருளுதவி செய்வோரும், தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் தங்கள் தாமக்கிழத்தியர்களுக்கும் அன்னம் வஸ்திரம் ஆபரணம் முதலியவற்றின்பொருட்டு எந்நாளும் சிவத்திரவியங்களை உபயோகிப்பவர்களும் படுந்துன்பம் எவ்வளவோ யாவர் சொல்லவல்லவர்! சிவத்துரோகம் பொல்லாது! பொல்லாது!! ஆதலால், கந்தபுராணத் துண்மையையறிந்து, எந்நாளும் சிவத்துரோகத்துக்குப் பயந்து நடுநடுங்கி விலகிச் சாவதானமாக ஒழுகி, கங்காஸ்நாநம் சிவாலயவாசம் செய்தவர் சிவபெருமானுடைய திருவடிநீழலை அடைந்து பேரானந்தப்பெருவாழ்வு எய்துதற்கு அருகராவர். தேவாரம்:—"தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்திர னெச்ச னருக்கனங்கி, மிக்கவிதா தாவினொடும் விதிவழியே தண்டித்த விமலர்கோயில், கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமுகுயர்தெங்கின் குலைகொள் சோலை, முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா நீள்வயல்சூழ் முதுகுன்றமே." திருவாசகம்:—"ஆட்டின்றலையை விதிக்குத் தலையாகக், கூட்டியவா பாடி யுந்தீபற, கொங்கைகுலுங்கநின் றுந்தீபற." திருவிசைப்பா:—"தக்கன்வெங்கதிரோன் சலந்தரன்பிரமன் சந்திரனிந்திரனெச்சன், மிக்கநெஞ்சரக்கன் புரங்கரிகருடன் மறலிவேளிவர்மிகை செகுத்தோன், திக்கெலாநிறைந்த புகழ்த்திருவீழிமிழலையான் றிருவடிநிழற்கீழ்ப், புக்கிருந்தவர்தம் பொன்னடிக்கமலப் பொடியணிந் தடிமைபூண்டேனே." பிறர்பாட்டு:—"அங்கியோட வம்புயன் மயங்கியோட வங்கஜன், மங்கியோட வாசவன் மலங்கியோட மாலவன், சங்கியோட

மாதருங் கலங்கியோடவே சவம், பொங்கீடவே மகம் பொடித்ததார் புகன்றிடே." தேவர்களை வேதநெறி பிறழ்வித்து வருத்துதலாகிய மகாபாதகம் செய்த சூரனை வதைத்து அத்தேவர்களைக்காத்தவர் சுப்பிரமணியரேயாம்.

சுப்பிரமணியக்கடவுளுக்குச் சிவபெருமானினின்றும் வேறுகாது முன்னர்க்கூறிய பதி இலக்கணங்கள் உண்மையாமுறையைக் கந்தபுராணத்தினின்றும் நிரூபிப்பாம்.

௨௩. அருவமும் உருவுமாய், அநாதியாய், ஒன்றாய், பலவாய், பரப்பிரமமாய்நின்ற பரஞ்சோதிப் பிழம்பாகிய **முருகக்கடவுள்** அறுமுகக்கடவுளாக உலகமுய்யும்வண்ணம் உதித்தருளினார்.

அருவமுமுருவுமாகியநாதியாய்ப்பலவாயொன்றாய்ப்
பிரமமாய்நின்றசோதிப்பிழம்பதோர்மேனியாகக்
கருணைகூர்முகங்களாறுங்கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
யொருதிருமுருகன்வந்தாங்குதித்தனனுலகமுய்ய. (௧0௯)

சாதலுந்தொலைவுமில்லாத்தானவர்க்கிறைவனேநே
ரேதிலர்தம்மால்வீடானென்றுதன்னுளத்திலெண்ணிச்
சோதிகொள்பரமமாகித்தோன்றிடுமுதல்வனீயே
யாதலின்விமலமூர்த்தியவனைமேலடுதியென்றான். (௧௧0)

ஏயதோரண்டமொன்றினிழைத்தனவிவ்வாறேனை
யாயிரத்தோரேழண்டத்தவன்செயலறிதறேற்றாந்
தூயதோர்பரத்தின்மேலாஞ்சோதியாயெம்மைக்காப்பான்
மேயினவொருநீயன்றிவேறியார்தெரிதற்பாலார். (௧௧௧)

விரிஞ்சன்மாறேவராலும்வெலற்கரும்விறலோனாகிப்
பெருஞ்சுரர்பதமும்வேதவொழுக்கமும்பிறவுமாற்றி
யருஞ்சிறையவர்க்குச்செய்தவவுணர்கோனாவிகொள்வான்
பரஞ்சுடருருவாய்வந்தகுமரனைப்பணிதல்செய்வாம். (௧௧௨)

ஈறிலாதமர்பரமனேகுழவியினியல்பா
யாறுமாமுகங்கொண்டுதித்தானென்பதல்லால்
வேறுசெப்புதற்கையையுமோமேலவன்றன்மை
தேறியுந்தெளிகின்றிலவுமதுசிந்தையுமே. (௧௧௩)

உச. பிரமாவாய் இறந்தகாலத்திலே சாத்துவிககுண முற்று உலகத்தை ஆதியிலே படைத்தும், விஷ்ணுவாய் நிகழ்காலத்திலே இராசதகுணமுற்று உலகத்தை மத்தியிலே காத்தும், உருத்திரராய் எதிர்காலத்திலே தாமசகுண முற்று உலகத்தை அந்தத்திலே அழித்தும், கோலம் காலம் குணம் ஞாலம் ஆதி கருமம் இறந்துநின்ற அநாதியாகிய பரஞ்சோதிப் பிழம்பே ஆறுதிருமுகமும்; அபயகரம், கொடி குலிசம் தோட்டி அஸ்திரம் வேல் என்னும் ஐந்தும் முறையே அமைந்தகரங்களென்னும் வலத்திருக்கரமாறும்; வரதகரம், தாமரை மணி மழு தண்டு வில் என்னும் ஐந்தும் முறையேயமைந்த கரங்கள் என்னும் இடத்திருக்கரமாறும்; பொருந்திய அருட்டிருவடிவங்கொண்டருளினார்.

காலமாய்க்காலமின்றிக்கருமமாய்க்கருமமின்றிக்
கோலமாய்க்கோலமின்றிக்குணங்களாய்க்குணங்களின்றி
ஞாலமாய்ஞாலமின்றியநாதியாய்நங்கட்கெல்லா
மூலமாயிருந்தவள்ளன்மூவிருமுகங்கொண்டுற்றான். (ககச)

வீறுகேதனம்வச்சிரமங்குசம்விசிக
மாறிலாதவேலபயமேவலமிடம்வரத
மேறுபங்கயமணிமழுத்தண்டுவில்லிசைந்த
வாறிரண்டுகையறுமுகங்கொண்டுவேளடைந்தான். (ககரு)

முழுமதியன்னவாறுமுகங்களுமுந்நான்காகும்
விழிகளினருளும்வேலும்வேறுளபடையின்சீரு
மழகியகரமீராறுமணிமணித்தண்டையார்க்குஞ்
செழுமலரடியுங்கண்டானவன்றவஞ்செப்பற்பாற்றே (ககசு)

முண்டகமலர்ந்ததன்னமூவிருமுகமுங்கண்ணுங்
குண்டலநிரையுஞ்செம்பொன்மவுலியுங்கோலமார்பு
மெண்டருகரமீராறுமிலங்கெழிற்படைகள்யாவுந்
தண்டையுஞ்சிலம்புமார்க்குஞ்சரணமுந்தெரியக்கண்டான். ( )

முந்நான்குதோளுமுகங்களோர்மூவிரண்டுங்
கொண்டோர்வைவேலுங்குலிசமுமேனைப்படையும்
பொன்றேர்மணிமயிலுமாகப்புனக்குறவர்
மின்றோள்கண்காணவெளிநின்றனன்விறலோன். (ககஅ)

மாறுமுகங்கொண்டுபொருவல்லவுணர்மாளாம
னூறுமுகமெட்டுநோதக்கனபுரியத்
தேறுமுகமின்றித்திரிந்தேமையாளவன்றே
வாறுமுகங்கொண்டேயவதரித்தாயெம்பெருமான். (௧௧௯)

௨௫. சருவவியாபகராயும் பிரம விஷ்ணு உருத்திராயும் நிற்பவர் ஆறுமுகக்கடவுளே.

எங்கணும்பணிவதனங்களெங்கணும்விழிக
ளெங்கணுந்திருக்கேள்விகளெங்கணுங்கரங்க
ளெங்கணுந்திருக்கழலடியெங்கணும்வடிவ
மெங்கணுஞ்செறிந்தருள்செயுமறுமுகத்திறைக்கே. (௧௨௦)

முக்கண்மூர்த்தியுமாங்கவன்முண்டகாசனனுஞ்
சக்கரப்படையண்ணலுமாங்கவன்றனே
திக்குப்பாலருங்கதிர்களுமுனிவருஞ்சிறப்பின்
மிக்கதேவருமாங்கவன்யாவர்க்குமேலோன். (௧௨௧)

பொன்னுருவமைந்தகஞ்சப்புங்கவனுகிநல்கு
மென்னுருவாகிக்காக்குமீசன்போலிறுதிசெய்யு
மின்னுருவென்னயார்க்கும்வெளிப்படைபோலுமன்னோன்
றன்னுருமறைகளாலுஞ்சாற்றுதற்கரியதன்றே. (௧௨௨)

௨௬. ஓங்காரமுகத்தினராயும், ஓங்கார மூலப்பொருளாயுமுள்ளவர் ஷண்முகக்கடவுளே.

முகத்திலொன்றதாவவ்வெழுத்துடையதோர்முருக
னகைத்துமுன்னெழுத்தினுக்குரைபொருளெனநவில
மிகைத்தகண்களைவிழித்தனன்வெள்கினன்விக்கித்
திகைத்திருந்தனன்கண்டிலனப்பொருட்டிறனே. (௧௨௩)

தாமரைக்கணன்முதலியபண்ணவர்தமக்கு
மேமுறப்படுமறைக்கெலாமாதிபெற்றியனு
மோமெனப்படுங்குடிலையேயொப்பிலாமுருகன்
மாமுகத்துளொன்றுமவன்றன்மையார்வகுப்பார். (௧௨௪)

ஆங்காகுமேல்லையருமறையுந்தேறரிய
வோங்காரமூலத்துணர்வாயுறைபகவ
னீங்காநெறியானிறைபேரருள்புரியப்
பாங்காகநின்றபரிசனர்கள்போற்றினரே. (௧௨௫)

உ௭. சமஷ்டிப்பிரணவ முகத்தினராகிய ஆறுமுக க்கடவுள் அகார உகார மகார நகார வியஷ்டிப்பிரண வமாவர்.

அகரமதாதியானவெழுத்தெலாமாகிப்பின்னர்
மகரமுமானமேலோன்வடிக்கணை துணித்துவீசுஞ்
சிகரமுந்துகரமுற்றுஞ்சேணிடைச்சென்றுமாயோன்
நகரமுந்தாவியண்டகோளகைநண்ணுகின்ற. (௧௨௬)

மேலைச்செய்யுளின் மூன்றாமடியிலே "சிகரமுந்து உகர" மென்றமையால், உகாரம் முதற்கண்ணே அமையும். அமையவே, முதலாமடிமுதலிலும், மூன்றாமடிமுதலிலும், இரண்டாமடிமுதலிலும், நான்காமடி முதலிலும் அகார உகார மகார நகாரங்கள் நின்றவாறு காண்க. யந்திரஸ்தாபனத்திலே அகாராதியக்ஷரங்கள் அமையுமுறையும் இச்செய்யுளினாலே தொனிக்கின்றது.

உ௮. விஸ்வரூபியும், விஸ்வகாரணரும், விஸ்வாதீதரும், விஸ்வசேவியரும், விஸ்வாந்தரியாமியும் *ஆறுமுகக்கடவுளே. (விஸ்வம்=உலகம்.)

திண்டிறலுடையேன்றாண்டுந்திறற்படையாவுநீக்கிக்
கொண்டவென்மாயமுற்றுங்கொடுஞ்சரமதனான்மாற்றி
யண்டமும்புவனம்யாவுமமரரும்பிறவுந்தன்பாற்
கண்டிடும்வடிவமொன்றுகாட்டியென்கண்முனின்றான். (௧௨௭)

கோலமாமஞ்ஞைதன்னிற்குலவியகுமரன்றன்னைப்
பாலனென்றிருந்தேனந்நாட்பரிசிவையுணர்ந்திலேன்யான்
மாலயன்றனக்குமேனைவானவர்தமக்கும்யார்க்கு
மூலகாரணமாய்நின்றமூர்த்தியிம்மூர்த்தியன்றே. (௧௨௮)

ஒற்றெனமுன்னம்வந்தோனொருதனிவேலோன்றன்னைப்
பற்றிகலின்றிநின்றபராபரமுதல்வனென்றே
சொற்றனன்சொற்றவெல்லாந்துணிபெனக்கொண்டிலேனு
மிற்றையிப்பொழுதிலீசனிவனெனுந்தன்மைகண்டேன். (௧௨௯)

சூழுதல்வேண்டுந்தாள்கடொழுதிடல்வேண்டுமங்கை
தாழுதல்வேண்டுஞ்சென்னிதுதித்திடல்வேண்டுந்தாலு

வாழுதல்வேண்டுந்தீமையகன்றுநாணிவற்காளாகி
வாழுதல்வேண்டுநெஞ்சந்தடுத்ததுமானமொன்றே. (௧௩௦)

ஒன்னலர்பொருட்டாலேகியுறுசமரிழைத்தசெம்ம
றன்னுருவதனைக்காண்கின்முனிவதேதகுதியாகும்
வன்னிகொள்வெண்ணெயேபோல்வலியழிந்துருகிற்றென்று
லென்னுடைவயத்தவன்றேவுணர்ச்சியுமியாக்கைமுற்றும். (௧௩௧)

"அண்டமும் புவனம்யாவு மமரரும் பிறவுந்தன்பாற் கண்டிடும் வடிவம்" என்றமையால் உலகமே வடிவாகவுடையரென்பதும், "மூலகாரணமாய் நின்ற மூர்த்தி யிம் மூர்த்தி" என்றமையால் உலககாரணரென்பதும், "பராபரமுதல்வனீசன்" என்றமையால் உலகிறந்து நிற்பவரென்பதும், "சூழுதல்வேண்டும், தாழுதல்வேண்டும்" என்றமையால் உலகினராற் சேவிக்கப்படுபவரென்பதும், "என்னுடைவயத்த வன்றே வுணர்ச்சியும் யாக்கைமுற்றும்" என்றமையால் உலகுக் குயிராயினரென்பதும் பெறப்பட்டன. "உலகினை யிறந்துநின்ற தரனுரு வென்பதோரா, ருலகவனுருவிற்றோன்றி யொடுங்கிடு மென்றுமோரா, ருலகினுக்குயிருமாகி யுலகுமாய் நின்றதோரா, ருலகினி லொருவனென்ப ருருவினையுணரா ரெல்லாம்."

௨௯. சிவபெருமானுடைய நெற்றிநாட்டத்துதித்த முருகக்கடவுள் உருவம் அனைத்திற்கும் உறைவிடமாயும், ஞானமாயும், உணர்ந்தார்க் குணர்வரியராயும், தியானப்பொருளாயும், அறிவுக்கறிவாயுமுறைவர்.

மண்ணளந்திடுமாயனும்வனசமேலவனு
மெண்ணரும்பகறேடியுங்காண்கிலாதிருந்த
பண்ணவன்னுதல்விழியிடைப்பரஞ்சுடருருவா
யுண்ணிறைந்தபேரருளினன்மதலையாயுதித்தான். (௧௩௨)

எவ்வுருவினுக்குமாங்கோரிடனதாயுற்றவுன்றன்
செவ்வுருவதனைக்கண்டுசிறந்தனமறம்பாவத்தி
னவ்வுருவத்தின்றப்புமகலுதுமின்னும்யாங்கள்
ளெவ்வுருவத்திற்செல்லேம்வீடுபேறடைதுமன்றே. (௧௩௩)

ஓதியாகியுமுணர்ந்தவர்க்குணரவுமொண்ணு
நீதியாகியுநிமலமதாகியேநிகழுஞ்
சோதியாகியுந்தொழுதிடுமெம்மனோர்க்கெல்லா
மாதியாகியுநின்றவனறுமுகனன்றோ. (கஙச)

ஆயபுல்லியபுகழ்ச்சிபோற்கொள்ளலையறிவோர்
தேயமாவதுயார்க்குமெட்டாததுதெளியிற்
றூயவீடுபேறருளுவதுபநிடத்துணிவாம்
வாய்மையாவதுபுகலுவன்கேளெனவகுப்பான். (கஙரு)

அறிவினுளறிவாய்வைகுமறுமுகவமலவெஞ்சூ
ரிறுசெயனினைக்கிலாகுமீண்டையோராடலுன்னிக்
குறுகினையதுபோலன்னோன்கொள்கையுந்தேர்ந்தாய்நிற்கோர்
சிறியனேனுரைத்தேனென்னுந்தீப்பிழைபொறுத்தியென்றான். ()

ருய. சராயுசம், அண்டசம் முதலிய யோனிவாய்ப்பட்டுப் பிறக்கும் மானுடர் விலங்கு பறவை முதலிய பசுக்கள் போலாகாது, பரஞ்சோதிப்பிழம்பாகிய சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றும் அபேதமாயுதித்த பதியாயுள்ளவர் **அறுமுகக்கடவுளே.**

மானுடத்தரின்விலங்கினிற்புட்களின்மற்று
மூனமுற்றுழல்யாக்கையிற்பிறந்துளாரொப்ப
நீரினைக்கலைபரஞ்சுடர்நெற்றியந்தலத்தே
தானுதித்தனன்மறைகளுங்கடந்ததோர்தலைவன். (கஙஎ)

ருக. ஞாதிரு ஞான ஞேயங்களாய் நின்றவர், **கந்தசுவாமிக்கடவுளே.**

ஈட்டுமென்னுயிரெவற்றிற்குமிருவினைப்பயனைக்
கூட்டுவானவனுங்கவைதலையெனக்கூடின்
வேட்டமேனிலைக்கதிபுரிவானவன்மேலாய்க்
காட்டுவான்முதற்றிறமெலாமாங்கவன்கண்டாய். (கஙஅ)

செய்யுமவனும்புலனுஞ்செய்வித்துநிற்போனு
மெய்தவரும்பொருளும்யாவையுநீயேயென்கை
யையவடியேங்களறிந்தனமாலன்னதனால்
வெய்யபவமகன்றுவீடுமினிக்கூடுதுமால். (கஙகூ)

௩௨. பாலருமாய், குரவருமாய், இளையிற் சிறியருமாய், நெடியருமாய், வேண்டியவடிவங் கொள்பவராயுள்ள ஆறுமுகக்கடவுளுடைய ஆஞ்ஞையின்றி ஓரணுவுஞ் சலியாது.

சிறுவன்போலுறுங்குரவனேபோலுறுந்திளையிற்
குறியன்போலுறுநெடியவனாகியுங்குறுகு
நெறியினின்னணம்வேறுபல்லுருக்கொடுநிலவு
மறிவர்நாடருங்கந்தவேளாடலாரறிவார். (௧௪௦)

சிவனதாடலின்வடிவமாயுற்றிடுஞ்செவ்வே
ளவனதாணையினன்றியேபெயர்கிலாதணுவு
மெவரவன்றனியாற்றலைக்கடந்தவரிவணீ
தவமயங்கிளையவன்றனிமாயையிற்சார்வாய். (௧௪௧)

௩௩. கந்தசுவாமிக்கடவுள் குடிலையாயும், பஞ்சாக்ஷரமாயும், வேதங்களாயும், ஆகமங்களாயும், கலைகளாயும், குடிலைமுதலியவைகளின் போதமாயும், முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம்பொருளாயும், ஈசராயும், அந்தரியாமியாயும், அருவுருவமாயும், பிதாமாதாவாயும் உள்ள பரமனேயாம்.

ஆதியாகியகுடிலையுமைவகைப்பொறியும்
வேதம்யாவையுந்தந்திரப்பன்மையும்வேறு
வோதநின்றிடுகலைகளுமவ்வவற்றுணர்வாம்
போதம்யாவையுங்குமரவேள்பொருவிலாவுருவம். (௧௪௨)

முன்னவர்க்குமுன்னாகுவோர்தமக்குமுற்பட்டுத்
தன்னைநேரிலாதீசனாந்தனிப்பெயர்தாங்கி
யின்னுயிர்க்குயிராயருவுருவமாயெவர்க்கு
மன்னைதாதையாயிருந்திடும்பரமனேயவன்காண். (௧௪௩)

௩௪. சுப்பிரமணியக்கடவுள் மேலோரென்பது, சிங்கன் இரணியன் என்னு மிருவர்க்கன்றி, மாயை சூரன் பானுகோபன் என்னும்மூவர்க்குங் கருத்தாகும்.

வரமளித்தயாமழிப்பதுமுறையன்றுவரத்தாற்
பெருமைபெற்றுளசூரனையவெதுபிறர்க்கு

மரிதெனப்பரனுன்னியேதன்னுருவாகு
மொருமகற்கொடுமுடித்துமென்றுன்னினனுளத்தில். (கசச)

தூதெனமுன்னர்வந்தோனொருவனுற்றொலையுமிந்த
மூதெயினகரமுற்றுமவுணருமுடிவரென்னி
ஆதியுமுடிவுமில்லாவறுமுகனடிபோருன்னிப்
போதுமேலிமைப்பினெல்லாப்புவனமும்பொன்றிடாவோ.(கசரு)

பன்னிருதடந்தோள்கொண்டபகவனைப்பாலனென்றே
யுன்னலையவன்கைவேலாலொல்லையிற்படுதிகண்டா
யின்னுயிர்துறக்கநின்றாயென்மொழிகேட்பாயன்றே
சென்னியில்விதியையாவராயினுந்தீர்ந்தாருண்டோ. (கசசு)

பன்னிருசெங்கைபடைத்துளசேயோன்
றன்னொடெதிர்ந்துசமர்த்தொழில்செய்வா
ரென்னலதில்லையிவன்சிறியோனென்
றுன்னலைவன்மையிலொப்பிலனேகாண். (கசஎ)

ஆரணன்றனையுலகொடுமுண்டுமுன்னளித்த
காரணன்றனியாழியைக்களத்திடையணிந்த
தாரகன்றனைநெடியமால்வரையொடுந்தடிந்த
வீரவீரனையாவரேவன்மையால்வெல்வார். (கசஅ)

நரு. உமாதேவியாரால் ஆறுதிருவுருவமும் ஒன்றாகிக் கந்தன் என்னுந் திருநாமம்பூண்ட **குமாரசுவாமிக்கடவுளை**, காங்கேயன் என்றும், கார்த்திகேயன் என்றும், மான்மருகன் என்றும், உரைப்பது ஏழைமையே; அவரோ பிரமவிஷ்ணுக்கள் அறியாத பரஞ்சோதிப்பிழம்பு.

எந்தைசத்திகளுயிரெலாமொடுங்குறுமெல்லை
முந்துபோலவொன்றாகியேகூடியமுறைபோ
லந்தமில்லதோர்மூவிருவடிவுமொன்றாகிக்
கந்தனென்றுபேர்பெற்றனன்கவுரிதன்குமரன். (கசகூ)

கங்கைதன்புதல்வனென்றுங்கார்த்திகைமைந்தனென்றுஞ்
செங்கண்மான்மருகனென்றுஞ்சேனையின்செல்வனென்றும்
பங்கயன்முதலோர்தேறாப்பரஞ்சுடர்முதல்வன்றன்னை
யிங்கிவைபலவுஞ்சொல்வதேழைமைப்பாலதன்றோ. (கருo)

சுப்பிரமணியக்கடவுளுக்கு அவர் அருட்டொழில்களினாலே, அப்பெயர்கள் எய்தியவன்றி வாஸ்தவமாய் அவருக்கு அப்பெயர்கள் இல்லையாமென்பது பெற்றாம்.

௩௪. உட்டிருவடியிலே பருவதசமூகமும்; புறவடியிலே சலசமூகமும்; பாதாங்குலியிலே இடியேறும், நக்ஷத்திரமும், கிரகமும்; கரட்டிலே வருணனும், சோமனும், நிருதியும், அரக்கரும்; கணைக்காலிலே இருஷிகளும், சிந்தாமணியும்; சானுவிலே விஞ்சையராதியோரும்; ஊருவிலே இந்திரனும், சயந்தனும்; ஊருமூலத்திலே இயமனும், காலனும்; கடிதடத்திலே அசுரரும்; கடிதடப்பக்கத்திலே தேவரும்; குகியத்திலே நாகரும்; சேபத்திலே அமிர்தமும்; நாபியிலே சீவராசியும்; மார்பிலே கலைஞானமும்; யஞ்ஞோபவீதத்திலே சிவஞானமும்; உரோமகூபத்திலே அண்டமும்; அகங்கையிலே அகிலபோகமும்; தோளிலே விஷ்ணுவும், பிரமாவும்; கைவிரலிலே தேவரம்பையரும்; கண்டத்திலே அக்கினியும், சப்தசாலமும்; வாயிலே வேதமும்; தந்தவரிசையிலே அக்ஷரசமூகமும்; நாவிலே சிவாகமமும்; உதட்டிலே சப்தகோடி மஹாமந்திரமும்; நாசியிலே வாயுவும்;நேத்திரத்திலே சந்திரனும், சூரியனும்; காதிலே திசையும்; நெற்றியிலே பிரணவமும்; சிரசிலே பரமான்மாவுமாக இங்ஙனம் கடல், உலகம், திக்கு, புவனம், அண்டம், தேவர் முதலியவெல்லாம் முறைப்படி அறுமுகக்கடவுளுடைய பாரமேசுரரூபம் எனப்படும் விஸ்வரூபத்திலே அமையும்.

உள்ளடிவரைகள்யாவுமொண்புறவடியினீத்தம்
வள்ளுகிர்விரல்கண்முற்றும்வானுருமேறுநாள்கோ
ளெள்ளரும்பரடுதன்னிலிரும்புனற்கிறைவன்சோம
னள்ளிருளனையமேனிநிருதியோடரக்கர்நண்ண (௧௫௧)

அடிதிரள்கணைக்காறன்னிலாரிடர்மணிகள்சானு
வடிவமைமுழந்தாள்விஞ்சைவானவராதியோர்
தொடைதனின்மகவான்மைந்தன்தொடைமுதனடுவன்காலன்
கடிதடத்தசுரர்பக்கங்கடவுளர்யாருநிற்ப. (௧௫௨)

இருப்பினிறுகர்கோசவெல்லையின்மருந்தேயுந்திக்
கருப்படுமுயிர்கண்மார்பிற்கலைகண்முந்நூலிற்போத
மருப்பயிலுரோமத்தண்டமங்கையிலகிலபோகந்
திருப்பெருந்தடந்தோள்வைப்பிற்செங்கண்மால்விரிஞ்சன்மேவ. ()

மெல்லிதழனையசெங்கைவிரன்மிசையணங்கினல்லா
ரொல்லொலியங்கிகண்டமொப்பிலாமணிவாய்வேதம்
பல்லிடையெழுத்துநாவிற்பரமவாகமத்தின்பேத
நல்லிதழ்மனுவின்விஞ்சைநாசியிற்பவனன்மன்ன. (௧௫௪)

கருணைகொள்விழியிற்சோமன்கதிரவன்செவியிற்றிக்குத்
திருநுதற்குடிலைவைப்புச்சென்னியிற்பரமவான்மா
ரபினின்மேவித்தோன்றமாறிலாதிருக்குந்தொல்லை
யொருதனதுருவங்காட்டிநிற்றலுமும்பர்கண்டார். (௧௫௫)

மண்ணளவுபாதலமெலாஞ்சரணமாதிரவரைப்புமிகுதோள்
விண்ணளவெலாமுடிகள்பேரொளியெலாநயனமெய்ந்நடுவெலாம்
பண்ணளவுவேதமணிவாயுணர்வெலாஞ்செவிகள்பக்கமயன்மா
லெண்ணளவுசிந்தையுமையைந்தொழிலுநல்கியருளீசனுயிரே. ()

கூறிமற்றினையதன்மைகுரைகடலுலகந்திக்கு
மாறிலாப்புவனமண்டம்வானவருயிர்கள்யாவு
மாறுமாமுகத்தவள்ளன்மேனியிலமைந்ததன்றி
வேறிலையென்னவாங்கோர்வியன்பெருவடிவங்கொண்டான். ()

௩௭. சிவனுக்கும் உமைக்கும் மத்தியிலே குமாரசுவாமி எழுந்தருளி இருக்கும் மூர்த்தம் சோமாஸ்கந்தமூர்த்த மெனப்படும்.

ஏலவார்குழலிறைவிக்குமெம்பிரான்றனக்கும்
பாலனாகியகுமரவேணடுவுறும்பான்மை
ஞாலமேலுறுமிரவொடுபகலுக்குநடுவாய்
மாலையானதொன்றழிவின்றிவைகுமாறொக்கும் (௧௫௮)

அம்மைதன்பொருட்டாலிடையூறிங்கடைந்ததென்றுமாலகந்தனிலுன்னி, யெம்மையாளுடையிறையவன்றனையுமிறைவிதன்னையுமிளங்குமரனையு, மெய்ம்மைசேர்வடிவாகவாங்கமைத்துவேதவாகமவிதிமுறைவழாமற், பொய்ம்மைதீர்ந்திமென்பிறாற்பூசைபுரிந்துபின்னரும்வருந்தியேநோற்றான். (௧௫௯)

பார்த்தியாலெனதெனும்பைம்பொன்மார்பத்திடை
மூர்த்தியர்யவையகியமுதல்வியைக்குமரனைத்
தீர்த்தனைப்பூசனைசெய்துநின்றீவினை
யார்த்திநீங்குதியெனவாதரத்தருளினான். (ககூ0)

ந௲. ஞானிகளாலே அறிதற்கரிய ஷண்முகநாத சுவாமியை முன்னாளையிற் செய்த தபோமிகுதியினாலே அடைந்து கண்களினாலே தரிசனம் செய்தோர் தீவினை நீங்கி வரம்பில்லாத அருளைப்பெற்றுய்வர்; அவர் பின் இருந்தாலுமென்! இறந்தாலுமென்!!

எஞ்சலிலவுணர்செம்மலிங்ஙனமமரதாற்றித்
துஞ்சிலென்றொலைவுற்றாலென்றாயவாலறிவின்மிக்கோர்
நெஞ்சினுமளத்தற்கொண்ணாதிருமலக்குமரமூர்த்தி
செஞ்சுடர்வடிவுங்கண்டுதீவினைநீங்கியுய்ந்தான். (ககூக)

தீயவைபுரிந்தாரேனுங்குமரவேடிருமுனுற்றாற்
றூயவராகிமேலைத்தொல்கதியடைவரென்கை
யாயவும்வேண்டுங்கொல்லோவடுசெமரிந்நாட்செய்த
மாயையின்மகனுமன்றோவரம்பிலாவருள்பெற்றுய்ந்தான். (ககூஉ)

சூரெனுமவுணர்கோமான்றொல்லைநாளுற்றவாறும்
பாரிடைமுடிவின்றாகிப்பல்லுகமிருந்தவாறு
மாரணமறிதறேற்றாவாறுமாமுகத்தெம்மையன்
பேரெழிலுருவநோக்கிப்பெரும்பயன்கோடற்கேயோ. (ககூங)

நகூ. சுப்பிரமணியக்கடவுள் சிவபெருமானுடைய சத்தியெனப்படுதலால், அவ்விருவரும் வேற்றுமையுறார்.

ஆதலினமதுசத்தியறுமுகனவனும்யாமும்
பேதகமன்றாலம்போற்பிரிவிலன்யாண்டுநின்றா
னேதமில்குழவிபோல்வான்யாவையுமுணர்ந்தான்சீரும்
போதமுமழிவில்வீடும்போற்றினர்க்கருளவல்லான். (ககூச)

தேவர்யாவருஞ்சென்றுதொழப்படு
மூவராகிமொழிந்திடுநுங்களைத்
தாவிலாதநஞ்சத்தியொன்றேயலா
லேவர்வெல்பவரென்றுவிளம்பிமேல். (ககூரு)

எத்திறத்தருநுங்களைவெல்கிலரெமது
சத்திவென்றிடுமென்றனன்கண்ணுதற்றலைவ

னத்திறத்தினுலல்லவோவறுமுகக்குமா
னுய்த்தசெய்யவேலுண்டதுதாரகனுயிரை. (கசுசு)

௪0. சிவபெருமானுக்குரிய சருவஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, சுவதந்திரத்துவம் என்னும் சுத்தசாட்குணங்களும் **கந்தசுவாமிக்கடவுளுக்கு** ஆறுமுகங்களென்பர். (சருவஞ்ஞதை=முற்றறிவு; திருப்தி=வரம்பிலின்பமுடைமை; அநாதிபோதம்=இயல்பாகவே பாசங்களினீங்குதல்; அலுப்தசத்தி=பேரருளுடைமை; அநந்தசத்தி=முடிவிலாற்றலுடைமை; சுவதந்திரத்துவம்=தம்வயமுடைமை.)

ஏவர்தம்பாலுமின்றியெல்லைதீரமலற்குள்ள
மூவிருகுணனுஞ்சேய்க்குமுகங்களாய்வந்ததென்னப்
பூவியல்சரவணத்தண்பொய்கையில்வைகுமைய
ஞவிகளருளுமாற்றலறுமுகங்கொண்டானன்றே. (கசுஎ)

௪க. சிவபெருமானே ஓராடலினுல், சிறுபாலராய் அருள்வடிவம் பூண்டெழுந்தருளினர் என்பது, **கந்தசுவாமியுடைய** அறுமுகத்துண்மையினுலே துணியப்படுமாதலின், அவ்விருவரும் மாணிக்கமும் அதனெளியும்போலப் பேதமுறூர்.

ஈசனேயவனுடலான்மதலையாயினன்கா
ணுசிலாவவனறுமுகத்துண்மையாலறிநீ
பேசிலாங்கவன்பரனெடுபேதகனல்லன்
றேசுலாவகன்மணியிடைக்கதிர்வருதிறம்போல். (கசுஅ)

௪உ. அறுமுகக்கடவுளுடைய திருக்கரங்களிலே அமைந்த தோமரம் கொடி வாள் குலிசம் அம்பு அங்குசம் மணி தாமரை தண்டம் வில் மழு என்னும் பதினொரு ஆயுதங்களும் பதினோர் உருத்திரரே. **வேலாயுதமோ** சத்தியாயும், அளவிலா ஒளியாயும், ஆறுதலையுடையதாயுமுள்ளது.

பொன்றிகழ்சுடிலத்தண்ணறன்பெயரும்பொருவிலாவுருவமுந்தொன்று,ணன்றுபெற்றுடையவுருத்திரகணத்தோர்கவிலருக்தோ

மரங்கொடிவாள், வன்றிறற்குலிசம்பகழியங்குசமுமணிமலர்ப்பங்கயந்தண்டம், வென்றிவின்மழுவுமாகவீற்றிருந்தார்விறன்மிகுமறுமுகன்கரத்தில். (கசுக)

ஆயதற்பின்னரேவின்முதண்டத்தைம்பெரும்பூதமுமடுவ, தேயபல்லுயிருமொருதலைமுடிப்பதேவர்மேல்விடுக்கினுமவர்தம், மாயுருந்திறலும்வரங்களுஞ்சிந்திமன்னுயிருண்பதெப்படைக்கு, நாயகமாவதொருதனிச்சுடர்வேனல்கியேமதலைகைக்கொடுத்தான். ()

அந்தமிலொளியின்சீராலறுமுகம்படைத்தபண்பா
லெந்தைகணின்றும்வந்தவியற்கையாற்சத்தியாம்பேர்
தந்திடும்பனுவல்பெற்றதன்மையாற்றனிவேற்பெம்மான்
கந்தனேயென்னநின்னைக்கண்டுளக்கவலைதீர்த்தேம். (களக)

சங. தெய்வயானையம்மை வள்ளியம்மை என்னும் இருவரும் முறையே சுப்பிரமணியசுவாமியுடைய ஞானசத்தியும் கிரியாசத்தியுமாவர்.

கல்லகங்குடைந்தசெவ்வேற்கந்தனோர்தருவதாகி
வல்லியர்கிரியைஞானவல்லியின்கிளையாய்ச்சூழப்
பல்லுயிர்க்கருளைப்பூத்துப்பவநெறிகாய்த்திட்டன்ப
ரெல்லவர்தமக்குமுத்தியிருங்கனியுதவுமென்றும். (களஉ)

சச. உற்றவிடத்துதவும் அறுமுகக்கடவுள் தமது திருவடியை அன்பினோடு தியானித்துத் துதித்த வீரவாகுதேவர், உக்கிரர், விசையர், இந்திரன்முதலாயினோர்க்கருளினார்.

ஆண்டகைதொழுதபாணியணிமுடிக்கொண்டிவ்வாற்று
லீண்டுசீர்க்குமரவேலையேத்தலுமன்பின்கண்ணீர்
வீண்டுதெண்கடலுளேகிவெள்ளமிக்குவரைமாற்றப்
பூண்டகண்டிகையையமானத்தோன்றினபொடிப்பின்பொம்மல். ()

மீதுகொள்பொடிப்புமூடமெய்ப்புலன்சிந்தையொன்ற
வோதுவதவறவென்புமுருகியசெருகநாட்டங்
கோதில்பேரருளின்மூழ்கிக்குதூகலித்திடுதலோடு
மூதுலகனைத்துமாவிமுழுவதுமகிழ்ந்தவன்றே. (களச)

ஆவதோர்காலையெந்தையாறிருதடந்தோள்வாழ்க
மூவிருவதனம்வாழ்கமுழுதருள்விழிகள்வாழ்க

தூவுடைநெடுவேல்வாழ்கதொல்படைபிறவும்வாழ்க
தேவர்கடேவன்சேயோன்றிருவடிவாழ்கவென்றான். (கஎரு)

இனையதுன்னியேயறுமுகப்பண்ணவனிருதா
ணினையுமெல்லையினுங்கவனருளினானிசியிற்
றினகரத்தொகையாயிரகோடிசேர்ந்தென்னக்
கனகமாமணித்தவிசொன்றுபோந்ததுகடிதின். (கஎசு)

ஆசைதோறுமழல்சிந்தமாற்றலன்
வீசுவெம்படைவீரத்தைநோக்கியே
யீசன்மைந்தனிணைமலர்த்தாள்களை
நேசமோடுநினைந்தனன்போற்றினான். (கஎஎ)

எவ்வெவர்க்குமிறையவனாகியோ
னவ்வழித்தன்னருள்செயவுக்கிரன்
செவ்விதிற்செலுந்தீச்சரம்பற்றியே
கவ்விநுங்கினன்கண்கனல்கான்றிட. (கஎஅ)

ஆறுமாமுகப்பிரானன்றியிவ்விடை
வேறொருதுணையிலைமெய்மையீதெனத்
தேறினனவனடிசிந்தைசெய்தனன்
மாறிழியருவிநீர்வழியுங்கண்ணினான். (கஎகூ)

நண்ணினர்க்கினியாயோலஞானநாயகனேயோலம்
பண்ணவர்க்கிறையேயோலம்பரஞ்சுடர்முதலேயோல
மெண்ணுதற்கரியாயோலம்யாவையும்படைத்தாயோலங்
கண்ணுதற்பெருமானல்குங்கடவுளேயோலமோலம். (கஅ0)

தேர்கடேவேயோலஞ்சிறந்தசிற்பரனேயோல
மேவலர்க்கிடியேயோலம்வேற்படைவிமலாவோலம்
பாவலர்க்கெளியாயோலம்பன்னிருபுயத்தாயோல
மூவருமாகிநின்றமூர்த்தியேயோலமோலம். (கஅக)

சரு. முருகக்கடவுளைத் "திருமுருகாற்றுப்படை" யினாலே நக்கீரரும், திருப்புகழினாலே அருணகிரிநாதரும், துதித்து அருள்பெற்றவரேயாம்.

பொய்யற்றகீரன்முதலாம்புலவோர்புகழ்ந்த
வையற்கெனதுசிறுசொல்லுமொப்பாகுமிப்பார்
செய்யுற்றவன்மாலுமைபூசைகொடேவதேவன்
வையத்தவர்செய்வழிபாடுமகிழுமன்றே. (கஅஉ)

சசு. யாவையும் யாவருக்கும் கொடுக்கவல்லுநரும், பின் அவற்றை மாற்றவல்லுநரும் **கந்தசுவாமிக்கடவுளே**; சிறிது தன்னருள்பெற்றோர்க்கு முப்பத்தாறு தத்துவங்களின் மேற்பட்ட திருவடியைச் சேர்தலாகிய உண்மை முத்தியையுங் கொடுப்பர்.

பூதமைந்தினுட்கீழ்நிலைத்தாகியபுவியு
ளோதுகின்றபல்லண்டத்திஞெராயிரத்தெட்டுங்
கோதிலாக்கரும்படைகளுமுனக்குமுன்கொடுத்த
வாதியீசனேயவனெனின்மாற்றுவதரிதோ. (கஅங)

ஏதமில்புவியண்டங்கள்பெற்றனமென்றே
பேதையுன்னினைசிறிதவன்றன்னருள்பெறுவோர்
பூதமைந்தினுமேனையதிறத்தினும்புறத்து
மீதுமாமண்டமெவற்றிற்கும்மேலத்தியல்புரிவார். (கஅச)

மருத்துவன்மாமறைமந்திரநீரா
லொருத்திபொருட்டினிலொண்புனலுய்ப்பக்
கரத்திடையேற்றனனுற்கழல்சேர்ந்தார்க்
கருத்திகொண்முத்தியுமாக்கமுமீவோன். (கஅரு)

புன்னெறியதனிற்செல்லும்போக்கினைவிலக்கிமேலா
நன்னெறியொழுகச்செய்துநவையறுகாட்சிநல்கி
யென்னையுமடியனுக்கியிருவினைநீக்கியாண்ட
பன்னிருதடந்தோள்வள்ளல்பாதபங்கயங்கள்போற்றி. (கஅசு)

"பூதமைந்தினு மேனையதிறத்தினும்" எனவே ஆன்மதத்துவம் இருபத்துநான்கும், "புறத்து" மெனவே வித்தியாதத்துவமேழும், "மீதுமாமண்ட மெவற்றிற்கும்" எனவே சிவதத்துவம் ஐந்துமாக முப்பத்தாறுதத்துவங்கள் பெறப்பட்டன. உண்மைமுத்தியானது முப்பத்தாறு தத்துவத்துக்கும் மேலாம் என்பது "ஆறுறையு நீத்ததன் மேனிலையைப், பேறுவடியேன் பெறுமாறுளதோ, சீறுவருசூர் சிதைவித்திமையோர், கூறுவலகங் குளிர்வித்தவனே." என்னுங் கந்தரனுபூதிச் செய்யுளானறிக. அகங்கார மமகாரங்களாகிய உட்பற்றுப் புறப்பற்றுக்கள் அறநின்ற இடமே திருவடியாகும். "யானெனதென்றற நின்றதடியாம்" என்றார்

மேலோர். திருவடிக்கீழிருத்தலே வீடுபேறுகும். "இறுமாந் திருப்பன் கொலோ வீசன் பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங், கிறுமாந் திருப்பன் கொலோ." என்னுந் தேவாரத்தான் அறிக.

சுப்பிரமணியக்கடவுளுக்குச் சரீரம் எனப்படுவது முற்றறிவு வரம்பிலின்பம் இயற்கையறிவு தன்வயமுடைமை குறைவிலாற்றல் வரம்பிலாற்றல் என்னும் ஆறுகுணங்களும் ஆறு திருமுகங்களாகவும்; மற்றை அருட்குணங்கள் மற்றை அவயவங்களாகவும் அமையப்பெற்ற அருட்டிருமேனியாமென்பது இப்பிரகரணத்தினுலே தோன்றும். அவர் கையிலுள்ள மூன்றுபத்திரமுடைய வேலாயுதமெனப்படுவது, அவர் ஆன்மாக்களுக்கு முத்தியின்பங் கொடுக்க விரும்பும் விருப்பமெனப்படும் இச்சாசத்தியும், அதற்கு வேண்டுமவைகளை அறியும் அறிவெனப்படும் ஞானசத்தியும், அறிந்தவைகளைச் செய்யும் செயலெனப்படுங் கிரியாசத்தியுமாகிய மூன்று சத்திகளின் அடுக்காமென்க. திருத்தணிகைப்புராணம்:—"இச்சாஞானக்கிரியையெனு மிவைமூன்றிலையாய்க் கிளைத்தெழுந்திட், டிச்சாஞெழி யறச்சுவற்று மயில்வேலொருகை வலத்தமைத்து, நச்சாதவரைத்தெறுமொருகை நளினங்குறங்கி னமைத்திமையோர், வீச்சாதரர்சூழ்ஞானசத்தி தரனதுருவம் விதிப்போரும்." இவற்றால் சுப்பிரமணியக்கடவுளுடைய திருமேனியைத் தோல் இரத்தம் முதலிய தாதுக்களாலாகிய நமது சரீரம் போலுமாமெனலும், அவர் கையில் வேலாயுதத்தைக் கொல்லனுலையிற் செய்யப்பட்டு உயிர்வதைசெய்து இரத்தந்தோயும் நமதுகையில் வேலாயுதம்போலுமாமெனலும், அவர் தேவிமாரை நமக்குச் சிற்றின்ப அனுபவத்தை விளைவிக்கு நமது மனைவிமார்போலுமாமெனலும் பொருந்தாவாயிற்று. வள்ளியம்மையார் என்னுங் கன்னிகையை, நம்மைப்போலக் காமமேலீட்டினுலே நாடி வருந்தினரல்லரென்ற கருத்துவகையினுலன்றே, கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் வள்ளியம்மை திருமணப்படலத்திலே "உலைப்படுமெழுகதென்ன வுருகியேயொருத்திகாதல்-வலைப்படுகின்றுன்போலவருந்தி" என்றும், "கலைப்படுமதியப்புத்தேள் கலங்கலம்புனலிற்றேன்றி - அலைப்படுதன்மைத்தன்றே வறுமுகனுடலெல்லாம்" என்றும், "தொல்லையினுருக்கொடு தோன்றிநின்றவே-ளெல்லையின்மையலுற் றிரங்குவானென" என்றும், "குமரற்கீது திருவிளையாடல்போலாம்" என்றும் "வாழ்த்தியும் மாயைகள்செய்தும்" என்றும் ஆங்காங்குப் பிரஸ்தாபித்தருளினர். முருகக்கடவுளும், அவர்சத்திமாரும் மானிடர்போலத் திரைநரை

மூப்பு ஓர்போதும் அடையாதவரென்பது தோன்றக் கந்தபுராணத்திலே, "மருந்துபோன்மொழிக்கு மரியுங்குமரனும்" என்றும், "செச்சைமௌலியான் செருத்தணிவரைமிசைப் - பச்சிளங்கொங்கைவனசரர் பாவையோடொன்றி" என்றும் பேசப்பட்டது; இங்ஙனம், இவர்கள் பிதாமாதாவாகக் கூறப்படுதலும், "புவனமன்னுயிர்த்தொகையுய்ந்திட முயங்கினைவினுல்" என்றும், "இச்சக்துயிர்யாவையு முய்யவீற்றிருந்தான்" என்றும், தெய்வயானை வள்ளியம்மை திருமணப்படலங்களிலே போந்த அதிரகசியவாக்கியத்துண்மையும்,"உவந்திருவரும்புணர்ந்தங் குலகுயிரெல்லாமீன்றும்- பவன்பிரமசாரியாகும் பான்மொழிகன்னியாகும் - தவந்தருஞானத்தோர்க்கித் தன்மைதான்றெரியும்" என்னும் சித்தாந்தவாக்கியத்துக்கு மாறுபடாது நன்குதுணியப்படும்.

தாரகன் சிங்கன் சூரன் என்னும் மூவரும் முறையே, கன்மம் மாயை ஆணவம் என்றும், அவர்களாலே பந்திக்கப்பட்ட தேவர்கள் பசுக்களென்றும், தாரகன் முதலிய அசுரர் மூவரையும் அழித்து முருகக்கடவுள் தேவர்களை ஆட்கொண்டமை, கன்மமுதலிய மும்மலங்களைவீட்டி உயிரைப் பரமாசரியர் ஆட்கொள்ளுமுறையாமென்றும்; வேடர்களிடத்திலே நெடுநாளாக இருந்து வளர்ந்த வள்ளியம்மையை முருகக்கடவுள் அடிமைக்கொண்டமை, வேடர்களிடத்திலே மன்னவகுமாரன் மன்னனையறியாது வந்து வளர்ந்தவிடத்து மன்னவன் அஃதறிந்து நாடிவந்து தன்குமாரனை அவ்வேடரினின்று நீக்கித் தன்னிடத்தாக்கினமைபோல, ஐம்புலவேடரிடத்தே தன்னையுந் தலைவனையுமறியாது வளர்ந்த உயிரைப் பரமாசாரியர் அவ்வைம்புலன்களின் சிக்கறுத்து அடிமைக்கொள்ளுமுறையாமென்றும்; முருகக்கடவுள் தமது தமையனராகிய யானைமுகக்கடவுள் வாயிலாக வள்ளியம்மையாருடைய முற்படுகையை ஒழித்தமை குடிலோபதேசம் வாயிலாக ஆன்மாவுடைய நானென்னும் முனைப்பை அறுக்குமுறையாமென்றும்; அவர் அம்மையாரை அருளொடு நோக்கினமை சாக்ஷுதீக்ஷை யாமென்றும்; "செங்கண்வெய்யசூர் செருத்தொழிலினுஞ் சிலைவேடர் தங்களிற்செயுஞ் செருத்தொழிலினுந் தணிந்து" அவர் எழுந்தருளிய செருத்தணிமலை மும்பாசங்களோடு ஐம்புலன்களும் ஒழிந்துநின்ற இலாடத்தானமாமென்றும்; அம்மலையிலே ஓர்போதும் வீடாத நீலோற்பலங்கள் மூன்றும் முத்திபஞ்சாக்ஷரமாமென்றும் குறிப்பர்த்தங் கொள்வாருமுளர்.

சிவபெருமான் தாம் பிக்ஷாடனமூர்த்தியாகி விஷ்ணுவை மோகினியாக்கித் தாருகாவனத்திற்குச் சென்றமை முதலாயின குற்றமாகாது குணமாமென்பது கோயிற்புராணத்திலே எடு-ம் பக்கத்தினும் சிவதூஷணகண்டன பத்திரிகையினும் விரிவாகக்காணப்படுகின்றமையால் ஆண்டுக் காண்க.

௯௧.

யாப்பியலிற்போந்த பெருங்காப்பிய இலக்கணத்திற்கு அமைதியாயிருத்தலின், இப்புராணகாவியமும் உண்டாட்டுக்களியாட்டு முதலியன அமையப்பெற்றது.

காஞ்சி செருத்தணியென்னுந் தலங்களிலே உள்ளனவாகச் சொல்லப்பட்ட அதிசயங்கள் பல கலியுகத்திலே சில துறவிகளுக்கே தோன்றும், முன்னையுகங்களில் எல்லோர்க்குந் தோன்றும். காஞ்சிபுராணம்:—இன்னனவாமதிசயங்கள் மற்றுமுள்ள வெல்லையிலையவைமுழுது மறிவார்யாரே, முன்னுகத்தி னெல்லார்க்குங் காட்சிபெய்து மூண்டகொடுங் கலியுகத்திற்படிமைவாழ்க்கை,மன்னினோர்சிலர்க்கன்றித் தோன்றுமுத்தி மருவினர்க்கு மேலுலகின் வைத்தவண்ண, மன்னமலிவயற்காஞ்சி வரைப்பின்வாழ்வாரகங்களிப்பக் கண்ணுதலாரமைத்தவாகும்."

பொருள் செம்பொருள் குறிப்புப்பொருளென இருவகைப்படுமென்று இலக்கணநூல்கள் விதிக்கின்றன; சிவபுராணங்கள் சிலவிடங்களிற் குறிப்பாகப் பொருள்கொள்ளக் கிடக்குமென்பது மாணிக்கவாசகசுவாமிகள் முதலிய சிவாநுபூதிமான்கள் இயற்றிய சாத்திரங்களினாலும் குருசம்பிரதாயத்தினாலும் துணியப்படுகின்றது. இங்ஙனமாகவும், தேவாலயங்களிலே வருஷந்தோறும் கந்தபுராணம் பிரசரிக்கப்படும்போது, செம்பொருளாகிய சிற்றின்பப்பொருளே மெய்ப்பொருளெனப் போதிக்கப்படுகின்றமையினாலே, சைவசமயிகளுக்குப் பெருங்கேடு விளைகின்றது; அதுகண்ட புறச்சமயிகள் நம்மையும் நமது சமயத்தையும் நமது கடவுளையும் தூஷிக்கின்றார்கள். அநேகர் காமாதிதோஷமுடையவர் கடவுளாவது எப்படியென்று சைவசமயத்தை வெறுத்துப் புறச்சமயங்களிற் பிரவேசிக்கின்றார்கள். ஆதலால், கோயில்களெங்கும் சைவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களும் நல்லொழுக்க முள்ளவர்களுமாகிய மேன்மக்களைக்கொண்டு கந்தபுராணத்துண்மைப்பொருளைப் பிரசரிப்பிக்கிற் கேட்போர்களுக்கு இவ்வாறு கேடுவிளைதலின்றிச் சிவபத்தி யேவளரும்.

உருத்திரகணிகையர் வியபிசாரம் மதுமாமிசபக்ஷணம் முதலிய பாதகங்களின்றிச் சிவவேடம்பூண்டு சிவபத்தியிற் சிறந்தவர்களென்று சைவாகமங்கள் செப்புகின்றன; இதற்கு மாறாக இக்காலத்தார் மதுமாமிச பக்ஷணமுடையவர்களாய் வரைவின்றி யாவரையும் சேரும் பெண்களை உருத்திரகணிகையரென்று தேவாலயங்களெங்கும் நியோகிக்கின்றார்கள். இது மகா சிவாபராதமாய் முடியும்.

தேவர்கள் முதலாயினோர் ஆகாயத்திலே நின்று, யுத்தம் செய்தமை எங்ஙனமென்றும், அவர்கள் அளவிறந்த மாயாரூபங்களைக் கொண்டமை எங்ஙனமென்றும், ஆதலால், அவையெல்லாம் கட்டுக்கதை என்றும் இகழ்ந்து நமது தேசத்து நமது பாஷைக்காரராகிய சைவசமயிகளுட்சில அறிவிலார் புலம்ப; எங்கள் முன்னோர்கள் ஆகாயத்திலே பிரயாணஞ் செய்தார்களென்றும், ஆகாயத்திலே நின்று சண்டைசெய்தார்களென்றும், அதனால் அவைகளுக்கு வேண்டற்பாலனவாகிய பல சாஸ்திரங்களையும், ஆகாயத்திலுள்ள சகல காற்றடுக்குக்களையும், ஓட்டங்களையும், அங்கங்கே உள்ள சீதோஷ்ண நிலைகளையும், வெவ்வேறு வாயுவின் விசிட்டகுருத்துவம் முதலியவைகளையும் அறிந்திருந்தார்கள் என்றும், சத்துருக்களுடைய சேனைகளை விஷவாயுக்களாலும், அச்சுறுத்தும் மாயாவடிவங்களாலும் பயங்கரசத்தங்களினாலும் ஆகாயத்திற் சூழ்ந்து மறைந்து நின்று அழித்துவிடுவார்கள் என்றும், இச்சாஸ்திரவித்தைகளின் உணர்ச்சி ஐரோப்பிய அமெரிக்க தேசத்து வித்துவான்களுக்கு இற்றைப்பொழுதும் சிறிதுமில்லையாமென்றும், பறதேசத்துப் புறபாஷைப் புறச்சமயிகளுள் அறிவின்முதிர்ந்த அங்கிலேயபண்டிதர்கள் நயந்து வியந்து நமக்கு இப்போது பிரசங்கிக்கின்றார்கள்.

௭௭. பசுக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என மூவகைப்படும்; பசுக்களைப் பந்தித்த பாசமும் ஆணவம் மாயை கன்மம் என மூவகைப்படும்.

மும்மையினுயிர்கள்பெற்றமுகிழ்முலைக்கன்னியாகு
மம்மையையமணந்ததன்மையாங்கவளிடமாவீங்கோர்
செம்மலையளித்தற்கன்றேதீவினைக்கடற்பட்டுள்ள
வெம்மையாளுவதற்கேதுக்காட்டியவியற்கையல்லால். (க அஎ)

தித்திமூவகையியனுயிர்த்தொகை
கதித்திடுதத்துவக்கணங்களங்குளா
ருதித்திடுமுறைமையினொடுங்கச்செய்துதான்
மதித்தொருதன்மையாய்மன்னிநிற்பதும். (௧௮௮)

ஈசனையேநினைந்திறைஞ்சியேத்தியே
பேசருமருந்தவம்பிடித்துமூவகைப்
பாசமதகனெறிபடரச்சிந்தியீ
ராசறுபடைப்பினுக்கார்வஞ்செய்திரோ. (௧௮௯)

விஞ்ஞானகலர் ஆணவமலமென்னும் ஓர்மலமுடையவர்; பிரளயாகலர் ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையர். சகலர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடையர். அது "உரைதருமிப் பசுவர்க்க முணரின் மூன்று முயரும்விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் நிரையின்மல மலங் கன்மமலங் கன்மமாயைநிற்கும்" என்பதனாலறிக. ஆணவம் முதலிய மும்மலங்களுள்ளே, ஆணவத்துக்கு விகற்பம் முதலிய எண்குணங்களும், மாயைக்கு அஞ்ஞானம் முதலிய ஏழுகுணங்களும், கன்மத்துக்கு இருத்தல்முதலிய அறுகுணங்களு முளவாம். இருபாவிருபஃது:—"கூறியமூன்று மலத்தின்குணக்குறி-வேறுகிளக்கின் விகற்பங்கற்பங்-குரோதமோகங் கொலையஞர்மதநகை - விராயெண்குணனு மாணவமெனவிளம்பினை - யஞ்ஞானம்பொய் மயர்வேமோகம்-பைசாசூந்நிய மாச்சரியம்பய-மாவேழ்குணனு மாயைக் கருளினை-யிருத்தலுங்கிடத்தலு மிருவினையியற்றலும் - விடுத்தலும்பரநிந்தை மேவலென்றெடுத்த-வறுவகைக்குணனுங் கருமத்தருளினை" சிவன் மூவகை ஆன்மாக்களுள் விஞ்ஞானகல ராயினோர்க்குத் தன்மையின் நின்றவாறே தத்துவஞானத்தை விளைவிப்பர்; பிரளயாகலருக்கு நாற்றோளும் முக்கண்ணும் கறைமிடறுமுதலிய உறுப்பிற்றாய் முத்தொழில் நடாத்திநின்ற தன்னியற்கைவடிவே குருவடிவாகக் காட்டி முன்னாக நின்று தத்துவஞானத்தை உபதேசித்துணர்த்துவர்; அவிச்சையை உடைய சகலராயினார்க்கு அவர்வடிவு போலும் வடிவுடைய குருவாகி அவ்வடிவின்பின்னாக மறைந்துநின்று தத்துவஞானத்தை உணர்த்துவர்.

சஅ. ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களினாலே பந்திக்கப்பட்டுள்ள உயிர்கள் எண்ணில்லாதன; அவை அநாதியே உள்ளன; அவை தாம் தாம் செய்த தீவினைகளினாலே இடையறாது பிறந்திறந்துழலும். பிருதிவியண்டத்தும், அப்புவண்டத்தும், தேயுவண்டத்தும், வாயுவண்டத்தும், ஆகாயவண்டத்தும் உதிக்கும். அவற்றிற்கு ஓரிடமே நிலையென்று சொல்லற்பான்மையதன்று. அவை தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றத்தையுடையனவாம். அவை பிறக்குமுன் கருப்பத்தினும் அழியும்; மூப்பினும் அழியும். அவற்றினிலையாமை இத்தன்மைத்தென்று சொல்லுதலும் அறியாமையே. இறந்தவுயிர்களும், பிறந்தவுயிர்களும் இவ்வளவையுடையனவென எண்ணற்பாலனவன்று.

மூவகையெனுந்தளைமூழ்கியுற்றிடு
மாவிகளுலப்பிலவநாதியுள்ளன
தீவினைநல்வினைத்திறத்தின்வன்மையா
லோவறமுறைமுறையுதித்துமாயுமே. (ககூ0)

பாரிடையுதித்திடும்பாரைச்சூழ்தரு
நீரிடையுதித்திடுநெருப்பில்வாயுவிற்
சீருடைவிசும்பிடைச்சேருமன்னவைக்
கோரிடைநிலையெனவுரைக்கற்பாலதோ. (ககூக)

மக்களாம்விலங்குமாமாசில்வானிடைப்
புக்குலாம்பறவையாம்புல்லுமாமதின்
மிக்கதாவரமுமாம்விலங்கருணுமாந்
திக்கெலாமிறைபுரிதேவும்யாவுமாம். (ககூஉ)

பிறந்திடுமுன்செலும்பிறந்தபின்னர்மெய்
துறந்திடுஞ்சிலபகலிருந்துதுஞ்சுமாற்
சிறந்திடுகோளையிற்றேயுமூப்பிணி
யிறந்திடுமதன்பரிசியம்பலாகுமோ. (ககூங)

சுற்றுறுகதிரெழுதுகளினும்பல
பெற்றுளவென்பதும்பேதைநீரதாற்
கொற்றமதுடையதோர்கூற்றங்கைக்கொள
விற்றவும்பிறந்தவுமெண்ணற்பாலவோ. (ககூச)

௪௧. ஆன்மாக்கள்பொருட்டுத் தருமம் என்னுமோர் பொருளுண்டு. அது இருமை இன்பத்தையும் எளிதிலே கொடுப்பது. அது அருமையின் எய்தும்பொருள். அது ஒருமையுடையோர்க்கன்றிப் பிறர்க்கு அறிவது அரிது. இத்துணைச் சிறப்பினதாகிய தருமத்தை ஒருயிர் செய்யுமாயின் அன்பும் அருளும் உண்டாகும்; அது உண்டாகத் தவமுண்டாகும்; அது உண்டாக அவ்வுயிர் சிவபெருமானை அடையும். அடையின், பிறவிக்குக் காரணமாகிய மும்மலங்களினின்று நீங்கிப் பேரின்பத்தை அனுபவிக்கும்.

தருமமென்றொருபொருளுளதுதாவிலா
விருமையினின்பமுமெளிதிறைக்குமா
லருமையில்வரும்பொருளாகுமன்னது
மொருமையினோர்க்கலாலுணர்தற்கொண்ணுமோ. (௧௯௫)

தருமமேபோற்றிடினன்புசார்ந்திடு
மருளெனுங்குழவியுமணையுமாங்கவை
வருவழித்தவமெனுமாட்சியெய்துமேற்
றெருளுறுமவ்வுயிர்சிவனைச்சேருமால். (௧௯௬)

சேர்ந்துழிப்பிறவியுந்தீருந்தொன்மையாய்ச்
சார்ந்திடுமூவகைத்தளையுநீங்கிடும்
பேர்ந்திடலரியதோர்பேரின்பந்தனை
யார்ந்திடுமதன்பரிசறைதற்கேயுமோ. (௧௯௭)

அன்பானவருக்கருளுதியாற்பத்திநெறி
யென்பாலிலையாலிறையுமெவனளித்தி
நன்பான்மதிமிலைச்சுநாயகனேநல்லருள்கூ
ருன்பான்மிகநொந்தேயோதியதென்பேதைமையே. (௧௯௮)

பாசங்கொண்டாவிபலவும்பிணிப்போனு
நேசங்கொண்டாங்கதனைநீக்கியருள்செய்வோனு
மீசன்சிவனென்றியம்புமறைநீயிழைத்த
வாசொன்றுமித்திமையார்தவிர்க்கவல்லாரே. (௧௯௯)

தருமம், அறம், புண்ணியம் என்பன ஒருபொருட்சொற்கள். புண்ணியம் மனம்வாக்குக் காயங்களினாலே செய்யப்படும். அருணினைவு, பொறை, பிறர்பொருள் விரும்

பாமை, செய்ந்நன்றிமறவாமை, அபிமானம்பேணல், அழுக்காறின்மை, அவாவெறுக்கை, பிறர் துன்பங்கண்டிரங்குதல், பிறருக்கு அறிவு செல்வம் அழகு முத்தி என்பன விருத்தியாகவேண்டுமென விரும்புதல் என்பன மானசிக தருமங்களாம்; தருமங்களைப் பிரசங்குஞ்செய்தல், புறங்கூறாமை, உண்மைபேசுதல், நூலுரைசெய்தல், இனியன சொல்லுதல், கடுஞ்சொல் தவிர்தல், வேதாகமங்களை ஓதுதல் என்பன வாசிக தருமங்களாம்; அரியதவங்களைச் செய்தல், பூசைசெய்தல், ஓமம் வளர்த்தல், பகுத்துண்ணல், பூமரங்கள் அமைத்தல், தோப்புக்கள் வைத்தல், பிறர்மனைவிழையாமை, குளம்வெட்டுதல், கிணறுதோண்டுதல், தருமசாலை பள்ளிக்கூடங் கட்டுதல், ஆலயங்கட்டுதல், மடங்கட்டுதல் என்பன காயிக தருமங்களாம்; புண்ணியம் வளரப் பாவந் தேயும், பாவந்தேய அறியாமைநீங்கும், அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன்மாலையவாய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவைதோன்ற வீட்டின்கண் ஆசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி, வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சியுண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனது என்பதும் அகப்பற்றாகிய யான் என்பதும் விடும். திருவுந்தியார்:—எட்டுக்கொண்டார்தமைத் தொட்டுக்கொண்டேநின்றார், விட்டாருலகமென்றுந்தீபற, வீடேவீடாகுமென் றுந்தீபற."

௫0. சரீரம், செல்வம், வலி, வீரம் முதலாயின அநித்தியம்; சுவர்க்கலோகம், சத்தியலோகம், வைகுண்டலோகம் என்பவைகளும், அவற்றின் போகங்களும் துன்பத்துக்கு உறைவிடமும், அநித்தியமுமாம்; முத்தியொன்றுமே நித்தியமும், பேரின்பமுமாம்.

கலைபடுமுணர்ச்சியுங்கற்பும்வீரமு
மலைபடுவெறுக்கையும்வலியுமற்றது

மலைபடுபுற்புதமாகுமன்னவை
நிலைபடுபொருளெனநினைக்கலாகுமோ. (௨௦௦)

மெய்யுயிரகன்றிடவிளிகிலேனெனி
னெய்யுறுமலக்கணீத்தினிதுமேவலன்
வையுறுநெடும்புரிவடிவம்வெந்தெனப்
பொய்யுடல்சுமந்தனன்புலம்புற்றேனெனும். (௨௦௧)

வந்திப்பவர்பவங்கண்மாற்றுவோயெத்தேவர்
சிந்தைக்குமெட்டாச்சிவனேசெழுஞ்சுடரே
யிந்தப்பிறவியிடருழப்பச்செய்தனையோ
வந்தித்தநின்புணர்ப்பையாரேகடந்தாரே. (௨௦௨)

வென்றியரக்கரான்மேதகையதானவரா
லன்றிமுனிவராலண்டராலேனையரா
லொன்றுசெயவொன்றாயுறுதுயரத்தாழ்ந்ததன்றி
யென்றுமகிழ்வாயிடரற்றிருந்தனமே. (௨௦௩)

கீற்றுமதியுங்கிளர்வெம்பொறியரவு
மாற்றிறெடுமிலைந்தவாதியேநின்னருளா
லேற்றமிகுமலக்கணேகினிழிந்தவளம்
போற்றுகிலேனேற்றல்புரிவேன்புரிவேனே. (௨௦௪)

அல்லற்பிறவியலமலம்விண்ணோடுறைந்து
தொல்லைத்திருநுகருந்துன்புமலமலமாற்
றில்லைத்திருநடஞ்செய்தேவேயினித்தமியேற்
கொல்லைத்துயர்தீர்த்துனதுபதந்தந்தருளே. (௨௦௫)

தண்டேன்றுளிக்குந்தருநிழற்கீழ்வாழ்க்கைவெஃகிக்
கொண்டேன்பெருந்துயரம்வான்பதமுங்கோதென்றே
கண்டேன்பிறர்தம்பதத்தொலைவுங்கண்டனனாற்
றொண்டேன்சிவனேநின்றாள்பதமேவேண்டுவனே. (௨௦௬)

மாடேசூழ்வார்தம்மொடுமைந்தன்சிறைபுக்கான்
காடேபோனானிந்திரனேனோர்கவலுற்றார்
பாடேவிண்ணோர்தம்பதமுக்கட்பரனல்கும்
வீடேயல்லாற்றுன்பறுமாக்கம்வேறுண்டோ. (௨௦௭)

காடுபோந்தனனிந்திரன்பொன்னகர்கரிந்து
பாடுசேர்ந்ததுசயந்தனுஞ்சிறையிடைப்பட்டா
னாடில்விண்பதச்செய்கையீதெம்பிரானல்கும்
வீடதேயலாற்றுன்பறுமாக்கம்வேறுண்டோ. (௨௦௮)

மனுட சரீரம் நமக்குக்கிடைத்த அருமையை ஆராயுங் காலத்துச் சமுத்திரத்தைக் கையினாலே நீந்திக் கரையேறுதல்போலாம். இங்ஙனம், மனுடசரீரம் எடுப்பினும் சாஸ்திரமணமும் மணவாத மலைகளினும் வனங்களினும் குறவர் மறவர் முதலியவர்களாய்ப் பிறவாது, சாஸ்திரங்கள் வழங்கும் தேசங்களிலே பிறப்பது மிகுந்தபுண்ணியம்; அதினும் வேதாகமங்கள் வழங்காத மிலேச்சதேசத்தை விடுத்து, அவை வழங்கும் ஆரிய தேசத்திலே பிறப்பது மிகுந்தபுண்ணியம்; அதினும், புறச்சமயிகள் வயிற்றிலே பிறவாமல், சைவசமயிகள் வயிற்றிலே பிறப்பது மிகுந்தபுண்ணியம்; இங்ஙனம் மனுடசரீரம் மிக அருமையாக வாய்த்தது, பெரியோர் எனப்படும் போலிப்பிரபுக்களுக்கும், இந்திரன் முதலிய தேவர்களுக்கும் பணிசெய்து பிழைக்கும்பொருட்டோ, சிவபெருமானுக்குத் திருவடித்தொண்டுசெய்து பிழைக்கும்பொருட்டோ எனின் யோசிப்பாம்:—பிரபுக்களுக்கும் மஞ்சள் பூசப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் மஞ்சள் பூசப்படுகின்றமையானும்; பிரபுக்களுக்கும் சுகந்தமாலை தரிக்கப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் சுகந்தமாலை தரிக்கப்படுகின்றமையானும்; பிரபுக்களுக்கும் கனகாபரணங்கள் அணியப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் கனகாபரணங்கள் அணியப்படுகின்றமையானும்; பிரபுக்களுக்கும் பீதாம்பரங்கள் உடுத்தப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் பீதாம்பரங்கள் உடுத்தப்படுகின்றமையானும்; பிரபுக்களுக்குப் பின்னும் பரிசனங்கள் தொடர்கின்றமையானும், பிணங்களுக்குப் பின்னும் பரிசனங்கள் தொடர்கின்றமையானும்; பிரபுக்களையும் காக்காரர் காவுகின்றமையானும், பிணங்களையும் காக்காரர் காவுகின்றமையானும்; பிரபுக்களுக்கும் வாத்தியங்கள் கொட்டப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் வாத்தியங்கள் கொட்டப்படுகின்றமையானும்; பிரபுக்களுக்கும் சின்னங்கள் ஊதப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் சின்னங்கள் ஊதப்படுகின்றமையானும்; பிரபுக்களுக்கும் மேற்கொங்கல் பிடிக்கப்படுகின்றமையானும், பிணங்களுக்கும் மேற்கொங்கல்

பிடிக்கப்படுகின்றமையானும்;கல்வி குலம் பணம் உத்தியோகம் முதலியவைகளான் மதிமயங்கி, சூரியன் சந்திரன்முதலியயாவும் தம்மாலேதான் நடைபெறுகின்றனவெனத் தம்மைமதித்து,தம்மை அடுத்தடுத்துப் பன்முறையும் பொருள்காரணமாகப் பிரார்த்தித்து வரும் ஏழைகளுக்குப் பொருளின்றி இனியவார்த்தையேனும் சொல்லாது, இறுமாந்து பிரபுக்களும் பேச்சின்றிக் கிடத்தலினாலும், உயிரில்லாமையாற் பிணங்களும் பேச்சின்றிக் கிடத்தலினாலும் (போலிப்) பிரபுக்களும்பிணங்களும் சமமாவார். சித்தியார்:—"அரிசனம்பூசிமாலை யணிந்துபொன்னுடைசாத்திப், பரிசனம்பின்புசெல்லப் பாரகர்பரிக்கக்கொட்ட, வருசின்னமூதத்தோங்கல் வந்திடவுணர்வுமாண்டு, பெரியவர்பேச்சுமின்றிக் கிடத்தலாற்பிணத்தோடொப்பர்." இப்பிணப்பிரபுக்களை நடைப்பிணங்களாகிய ஏழைகள் பன்முறையும் அடுத்தடுத்து இரந்தமையால் வாய்த்த பொருளின்பமுமோ எனின்; அதுவும், யானையொன்று ஒருவனைத்தொடர, அவன் அதனைக்கண்டு பயந்து ஓடிக் கிணற்றின்றினுள்ளே வீழ, அவ்வேளையில், அக்கிணற்றினுள்ளே கிடந்த ஐந்தலைநாகத்தைக் கண்டு, அவன் அவ்விடிகிணற்றருகின் வேரைப்பற்றுக் கோடாமெனப் பிடித்துத் தூங்க, அவ்வேரையும் எலியொன்றுவந்து கறிக்க, அவ்விடை நின்றோனுடைய நாக்கின் நுனியிலிட்ட தேன்றுளி அவனுக்குப் பயந்த இனிமைக்கு ஒப்பாகும். இது "அடுகரிதொடரவீழ வைந்தலைநாகங்காண, விடிகிணற்றறுகின்வேரைப் பற்றிநான்றிடவிவ்வேரைக்,கடுகவோரெலியும்வந்துகறித்திட வதினின்றோனுக்-கிடைதுளிதேனக்கின்பம் போலுமிப்பிறவியின்பம்." என்னுஞ் செய்யுளாலறிக. இதனால், பிரபுக்கள்பணி வேண்டப்படாமை பெறப்பட்டது. இந்திரன், பிரமா, விஷ்ணு முதலாயினோருடைய பதங்கள் நிலையுதல் இல்லாமையால், அவர்கள் பதங்களும் வேண்டப்படாமை "பொன்னகர்கரிந்து பாடுசேர்ந்தது" எனவும்; "பிறர்தம்பதத் தொலேவுங் கண்டனனால்" எனவும் முன்னர்ப்போந்த துணுக்கைவாக்கியங்கள் "அட்

டகுணமெட்டுச்சித்தி கோகனதன் முதல்வாழ்வு குலவுப
தமெல்லாம் வெறுத்து நெறியறுவகையு மேலொடுகீழுடங்
கவெறும்பொய்" எனவும், "பூதமுதலாகவே நாதபரியந்த
மும் பொய்" எனவும் போந்த திருவாக்குக்களுக்குக் கருத்
துவகையான் வேறுபடாமையினாலே துணியப்படும். கால்
கொடுத்து, இரண்டுகையேற்றி, என்புக் கழிகள் பரப்பி,
இறைச்சி மண் சுவர் வைத்து, தோலோலை வேய்ந்து, பொல்
லாமை முகடுகட்டி, ஏழுபலகணி அமைத்து, நவத்துவார
வாயில் வைத்து ஆக்கப்பட்ட இச்சரீரவீடு நமக்குவாய்
த்தது 'முத்துமாமணி மாணிக்க வைரத்த பவளத்தின் முழு
ச்சோதி' யாகிய சிவபெருமானுடைய பணியிலே நின்று
பேரின்பவாழ்வைப் பெறுதலாகிய சிவப்பேறு பெறும்
பொருட்டேயாம். தேவாரம்:—"கால்கொடுத்திருகையேற்
றிக் கழிநிரைத் திறைச்சிமேய்ந்து, தோல்படுத் துதிரநீராற்
சுவரெடுத் திரண்டுவாச, லேல்வுடைத்தாவமைத்தங் கே
ழுசாலேகம்பண்ணி, மால்கொடுத் தாவிவைத்தார் மாம
றைக்காடனாரே." "என்பினாற் கழிநிரைத் திறைச்சிமண்
சுவ ரெறிந்தித நம்மில்லம், புன்புலா னாறுதோல் போர்
த்துப் பொல்லாமையான் முகடுகொண்டு, முன்பெலாமொ
ன்பதுவாய்தலார் குரம்பையின் மூழ்கிடாதே, யன்பனாரு
ர்தொழு துய்யலாமையல் கொண்டஞ்சனெஞ்சே." குலம்,
இளமை, கல்வி, செல்வம், அதிகாரம் என்னும் இவ்வாழ்வு
கள், செருக்கைக்கொடுப்பனவாம் என்பது "வாழ்வெனு
மையல்விட்டு" என்றமையானும்; இம்மானிடதேகம் வாய்
த்தது சிவதொண்டின்பொருட்டாமென்பது "மானுடப்பி
றவிதானும் வகுத்தது மனவாக்காய - மானிடத்தைந்துமாடு
மரன்பணிக்காகவன்றோ" என்றமையானும் அறிக.

௫௧. வேதசிவாகமங்களிலே விதிக்கப்பட்ட பதி பசு
பாசமென்னும் முப்பொருள்களின் இலக்கணத்தைச் சிவன
ருள்காட்டத் தெளிந்து, புண்ணியதீர்த்தங்களிலே சென்றுப
டிந்து, சிவஸ்தலங்களையும் சிவனடியாரையும் சிவனெனமதி
த்து, பத்தியோடு வணங்கித் துதித்துவருவோர் சித்தசுத்தி

யுடையோராய், சிவனைத் தமது உள்ளக்கண்ணுக்குக் காணப் பெறுவோராய், பற்றற்றோராய், தம்மைத் துறந்தோராய், பசுகரணம் சிவகரணமாகப் பெற்றோராயுள்ள சீவன்முத்தராவர்.

விதிமுதலாகியுள்ளோர்வியனுயிர்த்தொகையாமீசன்
பதியவன்பணியதன்றேபரித்தனரினையரெல்லா
மிதுவுமச்சுருதிவாய்மையிவையெலாமயர்த்துவாளா
மதிமயங்கினையாற்பேராமாயையூடழுந்திநின்றாய். (௨௦௯)

ஆதலாலவனருள்பெறினவனியலறியு
மோதியாகுவரல்லரேற்பலகலையுணர்ந்தென்
வேதநாடியென்னிறையுமன்னவனிலைவிளங்கார்
பேதைநீரருமாங்கவரல்லதுபிறரார். (௨௧௦)

பற்றியதொடர்பையுமுயிரையும்பகுத்
திற்றெனவுணர்கிலமேதந்தீர்கிலஞ்
சிற்றுணர்வுடையதோர்சிறியம்யாமெலா
முற்றுணதாடலையுணரவல்லமோ. (௨௧௧)

அத்தனுலயமனைத்தும்வைகலும்
பத்தியோடுமுன்பரவியேயிருஞ்
சுத்தனாகியேதொலைவிலாருயிர்
முத்தியெய்தினுன்முழுதுணர்ந்துளான். (௨௧௨)

செம்மையாகியசிந்தையர்சீரியோர்
வெம்மையென்பதைவீட்டிவிளங்கினோர்
தம்மையுந்துறந்தேதலைநின்றவ
ரிம்மைதன்னினுமின்பத்தைமேவுவார். (௨௧௩)

இத்திறமுலகந்தன்னிலிம்பரோடும்பரஞ்சிச்
சித்தமெய்தளர்தலன்றிச்சிதைவுறுவகைமைதேர்ந்து
வித்தகவெண்ணிலாடல்வியப்பொடுபுரிந்தாருவி
முத்தர்தம்விழியினன்றிமுன்னுறுகிமலமூர்த்தி. (௨௧௪)

காதனீங்கலாதலமருமாருயிர்க்கரண
மாதியீசனதருளினாலவனதாகியபோ
லேதுநீரிலாதழல்படுவெய்யகானிலையோன்
போதலாற்குளிர்கொண்டதூஉறுமலர்ப்பொழிலாய். (௨௧௫)

ஏதந்தீர்சுடர்தன்னையுமெண்ணுமைம்
பூதந்தன்னையும்போதிகன்றன்னையும்
பேதஞ்செய்வர்பிறப்பொழித்தோரவர்
பாதஞ்சேர்தல்பரபதஞ்சேர்வதே. (உகசு)

சிவாலயங்கள் எங்கும் சென்று சிவபுண்ணியஞ் செய்துவருவோர் திருவருளைப் பெறுவாரென்பது "மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற்றொடங்கினர்க்கோர் - வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்பராபரமே." என்னுந் திருவாக்கானறியப்படும். "சிவபெருமானுடைய திருவடிகளை நினையவொட்டாமல், அயர்ப்பிக்கும் மும்மல அழுக்கை ஞான நீராற் கழுவி, அங்ஙனம் அயராத அன்பைச் செய்யும் மெய்யடியார்களோடு கலந்து கூடி, மலமயக்கநீக்குமாறு அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் சிவனெனவேகண்டு வழிபட்டுவாழும் இயல்பினோரே சீவன்முத்தராவர்." எனச் சிவஞானபோதம் செப்புகின்றது.

ருஉ. சிதம்பரமும், இருதயபுண்டரீகவீடும் சிவபெருமான் ஆனந்த தாண்டவஞ் செய்தருளுந் தானங்களாம். சபாநடேசபெருமானைப் புறத்தும் அகத்தும் வழிபட்டுவருவோர் பசுபோதமிறந்து, ஆனந்தக்கண்ணீர்வார நின்மல துரியாதீதமாகிய அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பிலே இரண்டறக்கலந்து நிற்பர்.

விரிகனல்வேள்விதன்னில்வியன்றலையரிந்துவீட்டிப்
பொருவறுதலத்தையாற்றும்பதஞ்சலிபுலிக்காலண்ண
லிருவருமுணர்வாற்காணவெல்லையிலருளாலீசன்
திருநடவியற்கைகாட்டுந்தில்லைமூதூரைக்கண்டான். (உகஎ)

தண்டளிர்ச்சோலைத்தில்லைத்தபனியமன்றிலென்றுந்
தொண்டையங்கனிவாய்மாதுதொழச்சுராட்புருடனுள்ளத்
தண்டருமூதிக்கலாற்றுவற்புதத்தனிக்கூத்தாடல்
கண்டனன்கசிவாலுள்ளங்களிப்புறவணங்கிப்போனான். (உகஅ)

பெருந்தரைநடுவணாகிப்பிறங்கியசரவணத்தி
லிருந்தனிக்கமலமொன்றிற்குமரவேளிருந்தபான்மை

திருந்துநல்லண்டபுத்தேள்சிந்தையாம்புண்டரீக
புரந்தனில்விரும்பித்தாதைதவைகியவியற்கைபோலும். (௨௧௯)

அங்கதற்பின்முறையாகவச்சுதன்பாற்கடலகன்று
நங்குழுவெலாஞ்சூழநாவலந்தீவகந்தனுகி
யெங்கள்பிரானருணடஞ்செய்யெல்லையிலாத்தில்லைதனிற்
றுங்கமணிமன்றுதனைத்தொழுதுபரவசமானான். (௨௨௦)

செல்லரியபரவசமாய்த்திருமுன்னேவீழ்ந்திறைஞ்சித்
தொல்லைதனிலறிவிழந்துதுணைவிழிகள்புனல்பெருகப்
பல்லுயிர்க்குமுயிராகும்பரமசிவபூரணத்தி
னெல்லைதனிற்புக்கழுந்தியெழுந்திலனீரிருதிங்கள். (௨௨௧)

இத்திறத்தாலவசமதாயீறுமுதனடுவுமிலா
வத்தனதுதிருவடிக்கீழடங்கியேயானையினான்
மெய்த்துரியங்கடந்தவுயிர்மீண்டுசாக்கிரத்தடையத்
தத்துவமெய்யுணர்ச்சியெலாந்தலைத்தலைவந்தீண்டினவால். (௨௨௨)

சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டுய்யும் பொருட்டு, எண்ணில்லாத முக்கியஸ்தலங்களைப் பூமியில் வைத்தருளினர்; அவைகளுள்ளே, அறுபத்தெட்டுத் தலங்கள் சிறந்தன; அவற்றுள்ளே, ஆறுதலங்கள் சிறந்தன; அவற்றுள்ளே, மூன்றுதலங்கள் சிறந்தன; அவற்றுள்ளே, சிதம்பரஞ் சிறந்தது. பரங்கருணைக்கடலாகிய நடேசபெருமானுடைய இலக்கணங்களை உண்மைநூல்வாயிலாக அறிந்து, நல்லொழுக்கத்தின் வழுவாதொழுகி, அவருடைய விளக்கத்துக் கிடமாகிய திருவுருவை விராட்புருடனாகிய பிரமாவினது பிரமாண்டசரீரத்தின் இருதயகமலமாகிய சிதம்பரத்திலே நாடோறும் விதிப்படி அன்போடு தரிசித்துக்கொண்டு வந்தவர், அந்நடேசபெருமானைத் தமது பிண்டசரீரத்தினது இருதயகமலமாகிய தகரத்திலே தியானித்துத் தரிசித்துப் பாசநீங்கி முத்தியடைவர்." நடேசபெருமானைத் தரிசித்தோர் ஆனந்தபாஷ்பஞ் சொரியப்பெறுவார். திருமந்திரம்:—"புளிக்கண்டவர்க்குப் புனலூறுமாபோற்-களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாந், துளிக்குங்கண்ணீருடன்சோருநெஞ்சத்திரு, ளொளிக்குமானந்த வமுதூறுமுள்ள

த்தே.'' அவத்தைகள் சுத்தாவத்தை, சகலாவத்தை, கேவலாவத்தை என மூவகைப்படும்; அவற்றுள்ளே, சுத்தாவத்தை நின்மலசாக்கிரம், நின்மலசொப்பனம், நின்மலசுழுத்தி, நின்மலதுரியம், நின்மலதுரியாதீதமென ஐவகைப்படும். நின்மலசாக்கிரம் புறக்கரணம் உட்கரணங்களோடு கூடித் தன்னைக்காணு மியல்பேயாம்; புறக்கரணம் நீங்கி உட்கரணவிருத்தியோடு மாத்திரம் தன்னைக்காண்பது சொப்பனம்; உட்கரணம் நீங்கி மனமொழிகளுக்கரிய தன்னைக்காண்பது துரியம்; ஞானக்கண்ணினாலே உள்ளபடி துரியநிலைகடந்த பரசிவத்தைப்பார்த்து இரண்டறப் புணர்ந்துநிற்றல் துரியாதீதமாகும். இது ஞானநிஷ்டையாம்.

சாந்தோக்கியோபநிடதத்திலே "பிரமபுரமாகிய இச்சரீரத்தில் உள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாசம்" என்பது முதலாகத் தகரவித்தை கூறப்பட்டது. இங்கே ஆகாசம் என்றது பிரமமாகிய சிவத்தை என்க. புறத்தும், இவ்வாறே இப்பிரமாண்டம் பிரமபுரம் எனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே இருக்கும் தில்லைவனம் புண்டரீகவீடு எனவும், இத்தில்லைவனத்தில் நிருத்தஞ்செய்யும் சிவம் ஆகாசம் எனவும், கூறப்படும். இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம் ஆதலால், சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்கும் தானமாதலால், இத்தில்லையும் சிதம்பரம் எனப் பெயர் பெறும். தாவரமாகிய அண்டமும் சங்கமமாகிய பிண்டமும் சமமாமாதலால், பிண்டமாகிய சரீரத்தில் இடைக்கும் பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுழுமுனைநாடியும், பிரமாண்டத்திலுள்ள இப்பரதகண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில்லையும், சிவபெருமான் ஆனந்தநிருத்தஞ் செய்யும் ஸ்தானமாம். கோயிற்புராணம்:—"வலங்கைமான் மழுவோன் போற்றும் வாளர வரசை நோக்கி, யலைந்திடும் பிண்ட மண்ட மவைசம மாத லாலே, யிலங்கைநே ரிடைபோ மற்றை யிலங்குபிங் கலையாநாடி, நலங்கிள ரிமைய நேர்போ நடுவுபோஞ் சுழுனை நாடி." திருவாதவூரடிகள் புராணம்:—"எண்டரு பூத மைந்து மெய்திய நாடி மூன்று, மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே, பிண்டமு மண்ட மாகும் பிரமனே டைவ ராகக், கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாகும்."

திருவாரூர் பிறக்கமுத்தி தருந்தலமென்பதும், காசி இறக்க முத்திதருந்தல மென்பதும், சிதம்பரந் தரிசிக்க முத்திதருந்தல மெ

ன்பதும் பிண்டமாகிய சரீரத்திலே அறியப்படும். சிவஞானதீபம்:—
"கருவிகளொன்பதும்வேறதாகக் கண்டகன்ற வதீதநிலைகாசி யாகு, மருவுமுயிர்தனையறிவென்றறிந்துயாமேமன்னனெனநின்ற நிலையாரூராகுங், கருவிசடமென்றுயிர்கடம்மைக்காணுக் கண்ணிர வியெனவுயிர்க்குக்காட்டாநின்ற, வருளையுணர்ந் தியாவுமரன்செய லாமுண்மை யத்துவிதநடந்தொழலம்பலமதாமே."

மூலாதாரத்து முக்கோணத்திலே மகாமேருவும், கீழ்க்கோணத்திலே மந்தரமும், தக்ஷிணகோணத்திலே கைலாசமும், வாமகோணத்திலே இமாசலமும், ஊர்த்துவபாகத்திலே நிஷதமும், தக்ஷிணபாகத்திலே கந்தமாதனமும், வாமரேகையிலே இரவணமுமாகச் சப்தபருவதங்களும்; மாமிசத்திலே குசத்தீவும், சிரசிலே கிரவுஞ்சதீவும், என்பிலே சம்புத்தீவும், மச்சையிலே சாகத்தீவும், தோலிலே சான்மலிதீவும், கேசத்திலே பிலக்ஷதீவும், நகத்திலே புட்கரதீவும், ரோமத்திலே கோமேததீவுமாகச் சப்ததீவும்; சிலேஷ்மத்திலே சுரோதமும், மூத்திரத்திலே கிரோதமும், மச்சையிலே கிருதோதமும், இரசத்திலே ரசோதமும், சோணிதத்திலே ததியோதமும், இலம்பிகையிலே சுவாதோதமும், சுக்கிலத்திலே கர்ப்போதமுமாகச் சப்தசாகரமும்; நாதசக்கிரத்திலே சூரியனும், விந்துசக்கிரத்திலே சந்திரனும், லோசனத்திலே செவ்வாயும், இருதயத்திலே புதனும், கண்டத்திலே வியாழனும், சுக்கிரத்திலே வெள்ளியும், நாபியிலே சனியும், முகத்திலே இராகுவும், வாயுவிலே கேதுவுமாக நவக்கிரகமும் அமையுமாமெனக் காருடபுராணம் கூறுகின்றது.

ஞானயோகங்களின் முதிர்ச்சி உடையார்க்குக் காமம் முதலியவைகளின் பெயருங்கூடக்கெடும் என்பதுபற்றித் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் "காமம்வெகுளி மயக்கமிவைமூன்றி னாமங்கெடக் கெடுநோய்." என்றுகூறிய உண்மை சிவபெருமான் சனகராதியர்க்கு ஞானயோகமுணர்த்திக் காமனைச்சுட்ட கதையினாலே பெறப்படும்.

சிவபெருமான் அசுரருடைய செம்பொற்கோட்டை வெள்ளிக்கோட்டை இரும்புக்கோட்டை என்னும் முப்புரங்களை எரித்தமையைத் திருமூலநாயனார் "முப்புரமாவது மும்மலகாரிய - மப்புரமெய்தமை யாரறிவாரே" என்றார்.

சௌந்தரியலகரியிலே சிவசத்தி பாம்புவடிவாகிய குண்டலினி என்பது போதர "வாளரவென்னவாகம் வளைத்துயிர் பணை

த்தினேடு, நாளுமைக் கயற்கண்டுஞ்ச ஞானவானந்த மின்னே"
எனச் சொல்லப்படுதற்கும், சகல அண்டங்களுக்கும் மத்தியிலே பூகோளம் ஆகாயத்திலே சிவசத்தியினாலே தாங்கப்படுகின்றதென்று சூரியசித்தாந்தத்துப் பன்னிரண்டாமத்தியாயத்து முப்பத்திரண்டாம் சுலோகத்திலே சொல்லப்படுதற்கும், மாறுபடாது சிவசத்தி என்பது விளங்கப் பூமியைப் பாம்புதாங்குமென்று புராணஞ் சொல்லுமென்க.

சந்திரன் ஆதிபௌதிகசந்திரன், ஆதிதைவிகசந்திரன், ஆத்தியான்மிகசந்திரன் என மூவகைப்படும். சிவபெருமான் தரித்த சந்திரன் புறத்தேகாணப்படும் ஆதிபௌதிகசந்திரனல்லாத மந்திரரூபமாகிய ஆதிதைவிக சந்திரனேயாம். இங்ஙனம் சூரியன், அக்கினி, கங்கை முதலியவைகளிலும் ஒட்டிக்காண்க. வாச்சியமந்திரமாகிய சிவசத்தியே சிவபெருமானுக்கு உண்மைவடிவம். சிவசத்தியினால் வாசகமந்திரத்தோடு சம்பந்தமுண்டு; அச்சம்பந்தம்பற்றி வாசகமந்திரஞ் சிவபெருமானுக்கு உபசாரவடிவமாகும்.

நான்காவது

சரியாபாதப்பிரகரணம்.

புறத்தொழின் மாத்திரையானே சிவபெருமானுடைய உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை எனப்படும். இது சரியையிற்சரியை, சரியையிற்கிரியை, சரியையில்யோகம், சரியையில்ஞானம் என நால்வகைப்படும்.

க. பீஜமந்திரங்கூட்டாத மந்திராசமனம், விபூதிதாரணம், கரநியாசம், மார்ச்சனம், அகமருடணம், தர்ப்பணம் முதலியவைகளை உணர்த்துவது சரியையிற்சரியை.

உ. திருவலகிடுதல், திருமெழுக்குச்சாத்துதல், வில்வம் பாதிரி கோங்கு பன்னி கொன்றை புலிநகக்கொன்றை பொன்னுவிரை மந்தாரை சண்பகம் செருந்தி நெல்லி செவ்வந்தி நந்தியாவர்த்தம் மல்லிகை குடமல்லிகை தும்பை சிவகரந்தை மாசிப்பச்சை திருநீற்றுப்பச்சை செந்தாமரை வெண்டாமரை என்னும் மரஞ் செடி கொடி முதலியவைகளில் உள்ள பத்திரபுஷ்பங்களை எடுத்தல், அவைகளினாலே மாலை தொடுத்தல், சுகந்ததூபமிடுதல், திருவிளக்கேற்றல், தோத்திரம்பாடல், ஆனந்தக்கூத்தாடல், பூசைத்திரவியங் கொடுத்தல் முதலியவைகளை உணர்த்துவது சரியையிற்கிரியை.

சாதியேகோங்குநாகஞ்சண்பகமிதழிஞாழல்
பாதிரிவழையேகுந்தம்பாரிசாதஞ்செருந்தி
போதுறுநரந்தம்வில்வம்பொலிகரவீரஞ்செச்சை
கோதறுமயிலைமௌவல்கொழுந்துசெவ்வந்திமுல்லை. (க)

எண்ணுமித்தருக்களுங்கொடியுமேன்வுங்
கண்ணுறமலர்வதுமரும்புங்காட்சியும்
வண்ணமதெற்றெனின்மாலைச்செக்கரும்
விண்ணுறுமுடுக்களும்விரவிற்றெக்குமால். (உ)

ந. திருக்கோயிற் றிருத்தொண்டு செய்யுமிடத்துச் சதாசிவமூர்த்தியுடைய திருமேனியை ஆதாரசத்தி முதல் சுத்தமாயை ஈறுயுள்ள அங்கித் தம்பவடிவமாகத் தியானித்து, அவரை ஓர்காற் பாதாளத்தினும், ஓர்காற் பூமியினும்,

ஓர்கால் ஆகாயத்தினும், பிரதக்ஷிணம் வருவதாகத் தியானித்தல் முதலியவைகளை உணர்த்துவது சரியையில் யோகம்.

௪. மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளை வாயிலாகவுடைய ஐந்தாசைகளை அடக்குதல், மெய்யன்பு, தியானம், தவம், உண்மை, சிவாலயத்தையும் சிவனடியாரையும் சிவனெனக்காண்டல் முதலியவைகளை உணர்த்துவது சரியையில் ஞானம்.

ஐந்தாவது

கிரியாபாதப்பிரகரணம்.

புறத்தொழில் அகத்தொழில் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியை எனப்படும். அது கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என நால்வகைப்படும்.

௧. பீஜமந்திரத்தோடு கூடிய மந்திராசமனம், விபூதிதாரணம், அக்கினிகாரியம், அங்கநியாச கரநியாசம், மார்ச்சனம், அகமருடணம், சிவகாயத்திரி பஞ்சாக்ஷரசெபம், உருத்திராக்ஷதாரணம் என்பவைகளை உணர்த்துவது சரியையிற் கிரியை.

ஆயுண்மற்றுமக்கெத்துணையத்துணையளவு
நீயிரிச்செயல்புரிமின்கள்பரமெனநினைந்திர்
தூயவித்தைதயானீறளதாக்கியேதொழுது
காயமேற்புனைந்தஞ்செழுத்துன்னுதிர்கருத்தின். (௧)

போற்றிடுதருமனைப்புராரிநோக்கியே
சாற்றிடுகின்றனன்றயங்குகண்டிகை

நீற்றெருடுபுனைந்தெமைநினையுநீரர்பாற்
கூற்றுவன்யானெனக்குறுகுவாயலை. (௨)

மொய்கெழுகூற்றைவென்றமுதல்வன்மந்திரத்தைநல்கி
வைகலுமிதனையுன்னிமனத்தொடுபுலனென்றுக்கிப்
பொய்கொலைகளவுகாமம்புன்மைகளுறுமேயோற்றிச்
செய்குதிதவத்தையென்னச்செவியறிவுறுத்தல்செய்தான். (௩)

ஈசன்மாப்படைவருதலுமுக்கிரனென்னு
மாசில்வீரன்றன்னங்கையிற்கதையினையகற்றிப்
பாசநீக்குமஞ்செழுத்தினைவிதிமுறைபன்னி
நேசமோடிகைதொழுதரன்பொன்னடிநினைந்தான். (௪)

ஆன்மா எனப்படும் பசுவைப்பந்தித்த பாசமாகியமல த்தை, சிவஞானக்கினியினாலே தகித்தபோது சிவத்துவம் விளங்கும் என்பதற்கறிகுறியாகவே, சிவலோகத்துளதாய், தருமவடிவாயுள்ள பசுவினது மலத்தை, சிவமந்திரங்கொண்டு, பஞ்சகவ்வியம் விட்டுப் பிசைந்து, சிவாக்கினியிலே தகித்துப் பூசுவது. வெண்ணிறமுடைய விபூதி வெண்ணிறமுடையதும், சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமாயுள்ள சாத்துவிககுணத்தின்பாலதாம்; உருத்திராக்ஷம் சிவபெருமானுடைய திருவருட்பேற்றிற்கு அறிகுறி. விபூதியின்மகிமை காலாக்கினிருத்திரம், அதர்வசிரசு, பஸ்மஜாபாலம், பிருகத்ஜாபாலம் என்னும் உபநிஷத்துக்களினும், உருத்திராக்ஷமகிமை உருத்திராக்ஷஜாபாலம், என்னும் உபநிஷத்தினும் பேசப்படும். திருமந்திரம்:—"கங்காளன்பூசுங் கவசத்திருநீற்றை, மங்காமற்பூசி மகிழ்வீரேயாமாகிற், றங்காவினைகளுஞ் சாருஞ்சிவனெறி, சிங்காரமான சிவனடிசேர்விரே." பஞ்சாக்ஷரம் தாரபஞ்சாக்ஷரம், பிராசாதபஞ்சாக்ஷரம், தூலபஞ்சாக்ஷரம், சூக்குமபஞ்சாக்ஷரம், மிச்சிரபஞ்சாக்ஷரம், சுத்தபஞ்சாக்ஷரம் என அறுவகைப்படும். பஞ்சாக்ஷரமே வேதங்கள்; பஞ்சாக்ஷரமே ஆகமங்கள்; பஞ்சாக்ஷரமே புராணங்கள்; பஞ்சாக்ஷரமே ஆனந்தநடனம்; பஞ்சாக்ஷரமே மௌனமூர்த்தியாமாதலின், வேதாகமபுராணாதிகளுள் ஒன்றேனும் அறியாராயினும் ஒருவர், நோயாளி மருந்துண்ணற்குப் அவ

பத்தியங்களை ஒழிக்குமாறுபோல, பொய் கொலை களவு காமம் முதலியபாவங்களை ஒழித்து, கண்களினின்றும் ஆன ந்தபாஷ்பம்பொழிய, சிவபெருமானுடைய திருவடியை மன சிலிருத்தி, "சிவபெருமான் ஆண்டவர் தாம் அடிமை" என் னும் சிந்தையோடு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்தல் வேண் டும்: செபிப்பாராயின், அவருள்ளத்திலே சிவபெருமான் திரு வருளோடு வெளிப்பட்டருளுவர். தேவாரம்: "காதலாகிக்க சிந்து கண்ணீர்மல்கி, யோதுவார்தமை நன்னெறிக்குய்ப் பது, வேதநான்கினு மெய்ப்பொருளாவது, நாதநாம நமச் சிவாயவே." "ஏதுமொன்று மறிந்திலராயினு, மோதியஞ் செழுத் துமுணர்வார்கட்குப், பேதமின்றி யவரவருள்ள த்தே, மாதுந்தாமு மகிழ்வர்மாற்பேறரே." பஞ்சாக்ஷரமந்தி ரசெபம் ஆன்மாவைப்பந்தித்த பாசமாகிய விஷத்தை ஒரு தலையாக நீக்குமென்னுஞ் சத்தியத்தை, ஆதிபௌதிக கரு டனை உணர்த்தும் மந்திரரூபமாகிய ஆதிதைவிக கருடனை மாந்திரிகன் நாடோறும் பாவித்துப்பயின்றுவந்த பயிற்சிவி சேடத்தால் அம்மந்திரரூபமே தானாக அநன்னியபாவனைசெ ய்து தன்னறிவு அதன்வயத்ததாம்படி உறைந்து நின்று அம் மந்திரக்கண்கொண்டு பார்த்து விஷவேகத்தை ஒருதலையாக மாற்றுதலிலே வைத்து உய்த்துணர்க.

வேதம் நான்கும், வேதாங்கம் ஆறும், உபாங்கம் நான் குமாகிய பதினான்கு வித்தைகளுள்ளும், வேதம் மேலாது; அதனுள்ளும் சதருத்திரீயம் எனப்படும் உருத்திரைகாதசனி மேலானது; அதனுள்ளும் ஐந்தெழுத்து மேலானது; அத னுள்ளும் "சிவ" என்னும் இரண்டெழுந்து மேலாகும்; ஆகவே, வேதபுருஷனுக்கு உருத்திரம் கண்ணும், பஞ்சாக்ஷ ரம் கண்மணியும், "சிவ" கட்பார்வையுமாம்.

சிவனெனுந்நுணைச்சீரெழுத்தினை
நுவலுவோர்கதிநொய்திலெய்துவா
ரவனையெள்ளிநுயாரிதாற்றுவா
ரெவனையுய்குதியிழுதைநீரைநீ. (௫)

அநாதியேயுள்ள முற்றறிவு முற்றுத்தொழிலாகிய சிவத்துவம் இயைதலினாலும், சிவத்துவமென்னும அதிசுத்தம் இயைதலினாலும் "சிவ" என்னும் நாமஞ் சிவனுக்குப்போந்தது; சிவநாமத்தை உச்சரித்தலினாலும் கேட்டலினாலும் சமஸ்த பாவமும் அரிக்கப்படுமென்று சிவார்க்கமணிதீபிகை செப்புகின்றது. தேவாரம்: "சாத்திரம்பல பேசுஞ்சழக்கர்காள், கோத்திரமுங்குலமுங் கொண்டென்செய்வீர், பாத்திரஞ்சிவ மென்றுபணிதிரேல், மாத்திரைக்கு ளருளுமாற்பேறரே." திருமந்திரம்: "சிவசிவவென்கிலர் தீவினையாளர், சிவசிவவென்றிடத் தீவினைமாளுஞ், சிவசிவவென்றிடத் தேவருமாவர், சிவசிவவென்னச் சிவகதிதானே."

உ. புஷ்பம் திருமஞ்சனம் முதலிய உபகரணங்கள் கொண்டு ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் பஞ்சசுத்திகளுஞ் செய்து, சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்திபரியந்த பதுமமாகிய சிவாசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியாதேகமாகிய மூர்த்தியை நியாசஞ் செய்து, அவ்வித்தியாதேகத்துக்குச் சிவனுயுள்ள நிஷ்களரூபரும் சருவகருத்தாவும் சருவவியாபகருமாகும் பரசிவனாகிய மூர்த்திமானைத்துவாதசாந்தத்தின்மேலே தியானித்து, முன்னே நியாசஞ் செய்த வித்தியாதேகத்திலே ஆவாகித்து, "சுவாமீ சருவஜகத்துக்கும் நாதரே, பூசையின்முடிவு எதுவரையுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலே சாந்நித்தியராயிரும்" என்று விண்ணப்பஞ் செய்து பூசித்து ஸ்தோத்திரம் பிரதக்ஷணம் நமஸ்காரம் பண்ணி முடித்தலையுணர்த்தும் சிவபூசை கிரியையிற்கிரியை.(வித்தியாதேகமாவது பஞ்சகிருத்திய உபயோகிகளாகிய ஈசானம் முதலிய பஞ்சமந்திரங்களினாலே சிரம்முதலாகக் கற்பிக்கப்படும் சத்திசரீரமேயாம்.)

உ மை.

ஈசனருளாற்கயிலையைநீங்கியிமையமாமயிலறம்புரிவான்
காசியிலிருந்துமுடிவுறுதேசிக்கனகமாநீழலிற்பரனைப்
பூசனைபுரிந்துகம்பைகண்டஞ்சிப்பூண்முலைவளைக்குறிப்படுத்தி
யாசிலாவருள்பெற்றின்னுநோற்றிடலாலனையகாஞ்சிக்குநேரதுவே

விநாயகர்.

மீண்டுசெங்காட்டிலோர்சார்மேவிமெய்ஞ்ஞானத்தும்பர்
தாண்டவம்புரியுந்தாதைதன்னுருத்தாபித்தேத்திப்
பூண்டபேரன்பிற்பூசைபுரிந்தனன்புவியுளோர்க்குக்
காண்டருமனையதானங்கணபதீச்சரமதென்பார். (எ)

சுப்பிரமணியர்.

இருவருமுணர்கிலாதிருந்ததாள்களைச்
சரவணமிசைவருதனயன்பூசனை
புரிதலுமுமையொருபுடையிற்சேர்தர
வருள்விடைமீமிசையண்ணறோன்றினான். (அ)

முழுதொருங்குணர்ந்திடுமுருகன்யாவருந்
தொழுதருமிறைவனூற்றொடர்புநாடியே
விழுமியகண்ணுதல்விமலன்றாண்மலர்
வழிபடல்புரிந்தனன்மனங்கொள்காதலால். (௯)

இவ்வரையொருசார்தன்னிலிராறுதோளுடையவெந்தை
மைவிழியணங்குந்தானுமாலயனுணராவள்ள
லைவகையுருவிலொன்றையாகமவிதியாலுய்த்து
மெய்வழிபாடுசெய்துவேண்டியாங்கருளும்பெற்றான். (௧0)

விஷ்ணு, பிரமா.

கலந்தகாலையில்யாங்கண்முன்றொழுதெழுங்காலைச்
சலங்கொள்பான்மையின்முன்னுறத்தேடுவான்றழலாய்
மலர்ந்தபேரொளிமீமிசைசுருங்கியேவந்தோர்
விலங்கலாகியதுலகெலாம்பரவியேவியப்ப. (௧௧)

அன்னதாஞ்சிவலிங்கருபந்தனையணுகி
முன்னமாகியேமும்முறைவலஞ்செய்துமுறையாற்
சென்னியாற்றொழுதேத்தியெம்பதங்களிற்சென்றேம்
பின்னரெந்தையைமறந்திலம்போற்றுதும்பெரிதும். (௧௨)

இருவருமச்சிவனுருவையியன்முறையாற்றாபித்து
விரைமலர்மஞ்சனஞ்சாந்தம்விளக்கழலாதியவமைத்துப்
பொருவருபூசனைபுரிந்துபோற்றிசெய்துவணங்குதலு
மெரிகெழுசோதிக்கணித்தாவெந்தையவண்வந்தனனே. (கங)

தக்கன்.

அருனுருவாகியேயகிலமாவிக
டருவதுங்கொள்வதுமாகித்தானுவா
யுருவருவாகியவொப்பில்பேரொளித்
திருவுருவொன்றினைச்சிவனுக்காக்கினன். (கச)

நாயகன்மொழிதருநவையிலாகம
மேயினமுறைதெரிவிரதனாகியே
பாய்புனல்புனைசடைப்பரமன்றாண்மல
ராயிரம்யாண்டுகொறருச்சித்தேத்தினன். (கரு)

அருச்சனைபுரிதலுமயன்றன்காதலன்
கருத்துறுமன்பினைக்கண்டுகண்ணுதல்
பொருக்கெனவெளிப்படப்புகழ்ந்துபொன்னுலாந்
திருக்கழல்வணங்கினன்றெளிவுபெற்றுளான். (கசு)

ஆயவைதொலைத்தளித்தவன்றன்பூசையி
னேயமதாகியேநிமலன்றன்கண
நாயகவியற்கையைநல்கிவல்லையிற்
போயினன்றக்கனும்புனிதனாயினன். (கஎ)

இந்திரன்.

விடியல்வைகறைதனின்மேவிவண்டுதேன்
புடையுறாமுன்னரேபுரையிலாததோர்
கூடிமலர்கொய்தனன்கொணர்ந்துகண்ணுத
லடிகளில்விதிமுறையருச்சித்தானரோ. (கஅ)

அகஸ்தியர்.

பேர்கிலாதவிப்பிரமகத்திநோய்
தீருமாற்றினாற்சிவனதாள்களை
யார்வமோடிவணருச்சிப்பாமென
நேரின்மாமுனிநினைந்துநின்றரோ. (ககூ)

ஆசில்கொங்கினுக்கணித்தினேரிடை
வாசமீதெனமகிழ்ந்துவீற்றிரீஇ

யீசனார்தமையிலிங்கமேனியி
னேசநெஞ்சினனினைந்துதாபித்தான். (உo)

மங்கைபாகனைமற்றும்பற்பகல்
சிங்கலின்றியேசிறந்தபூசைசெய்
தங்கண்மேவினனவன்கணாகிய
துங்கவெம்பவந்தொலைந்துபோயதே. (உக)

மார்க்கண்டர்.

என்புநெக்குருகக்கண்ணீரிழிதரவலஞ்செய்தீசன்
முன்புறவணக்கஞ்செய்துமுடிமிசையடிகள்சூடித்
தென்புலத்தொருசாரெய்திச்சிவனுருச்செய்துபண்ணா
என்புடனருச்சித்தேத்தியருந்தவமியற்றியிட்டான். (உஉ)

யானை, கரிக்குருவி, நாரை, பாம்பு, சிலந்தி.

வாலியவொளிகெழுவனத்திலேகியே
மூலமதாகியமுக்கண்மூர்த்தியை
மேலுளதாணுவின்மேவச்செய்துபின்
சீலமொடருச்சனைசெய்துவைகிற்றே. (உங)

அறிவுளமால்கரியமலன்றந்திர
முறையதுநாடியேமுதிருமன்பினன்
மறையுறவழிபடஇவைகுமெல்லையிற்
குறைபடுநாற்பெருங்கோடும்வந்தவே. (உச)

கைந்நாகத்துக்குங்கயவாய்க்குநாரைக்கும்
பைந்நாகத்துக்கும்படருஞ்சிலந்திக்கும்
பின்னாகியவுயிர்க்கும்பேருண்முன்செய்தனையா
லென்னாயகனேயெமக்கேனருளாயே. (உரு)

சகலதருமங்களும் இடையூறின்றி முற்றுப்பெறுமெ
ன்பதும், சிவபெருமான் தம்மை அன்பினோடு பூசிப்பவர்களு
க்குக் குழைந்து நிற்பாரென்பதும், உலகமாதாவாகிய உமா
தேவியார் செய்த சிவபூசையினாலே பெறப்படும்; பிரமகத்தி
முதலிய சகலபாவங்களுக்கும் பிராயச்சித்தமாய் முடிவது
சிவபூசையாம் என்பது,கயமுகன் சூரன் முதலாயினோரைச்
சங்கரித்தமையினாலே பாவமொன்றும் ஏறப்பெறாத விநாய
கர் சுப்பிரமணியர் செய்த சிவபூசையினாலே பெறப்படும்;

நாம்பிரமம் நாம்பிரமமெனப் பிதற்றும் மாயாவாதிகளு டைய அகங்கரிப்புக்குப் பரிகாரமாய்முடிவது சிவபூசை யாம் என்பது பிரமவிஷ்ணுக்கள் செய்த சிவபூசையினாலே பெறப்படும்; அதிபாதகத்துக்குப் பரிகாரமாயுள்ளது சிவபூ சையாம் என்பது தக்கன் செய்த சிவபூசையினாலே பெறப் படும்; பிரமகத்திநோய்க்கு மருந்தாய் உள்ளது சிவபூசை யாம் என்பது அகஸ்தியர் செய்த சிவபூசையினாலே பெறப் படும்; காலத்தைக் கடக்கச்செய்வது சிவபூசையாமென்பது மார்க்கண்டேயர் செய்த சிவபூசையினாலே பெறப்படும்; உய ர்திணையவேயன்றி, அஃறிணையவும் சிவபூசையினாலே வேண் டியவரங்களைப் பெறும் என்பது யானைமுதலாயின செய்த சிவபூசையினாலே பெறப்படும்.

௩. மேதாகலைமுதல் உன்மனாகலை ஈறுயுள்ள சோடசக லைகளுள்ளே, மேதாகலை, அர்க்கீசகலை, விடகலை, விந்துகலை, அர்த்தசந்திரகலை, நிரோதிகலை, நாதகலை, நாதாந்தகலை, சத் திகலை, வியாபினிகலை, வியோமரூபினிகலை, அநந்தைகலை, அநா தைகலை, அநாசிருதைகலை, சமனாகலை என்னும் கலைகளிலே தனித்தனி அமைந்து கிடந்த தத்துவம் முதலியவைகளை எல்லாம் இருதயம் முதல் சமனாந்தம் வரையும் சோபானமு றையாய் அவ்வக்காலமாத்திரையினுள்ளே கடந்துகடந்து சென்று, பஞ்சாக்கரத்தின் நாமாக்களிலே வைத்து, சமனா ந்தே பாசசாலம் என்றறிந்து அவற்றைக்கழித்துவிட்டு, உன்மனாந்தே பரசிவமெனக்கொண்டு சிவத்தைத் தியானி த்து, பின்பு தியானிப்போனாகிய தானும் தியானமுந் தோன் றாது, தியானப்பொருளாகிய சிவமொன்றே விளங்கப்பெ றுவது **கிரியையில்யோகம்.**

ஆறிரு நாலுடனஞ்செழுத்தையுங்
கூறினரெண்ணினர்கோதில்கண்டிகை
நீறுருபுனைந்திறைநிலைமையுட்கொளா
வேறுளமுறையெலாம்விதியிற்செய்துபின். (உ௬)

௪. நாபியினடியைச்சார்ந்த கிழங்கே பிருதிவி தத்துவ மாகவும், கிழங்குக்குமேலுள்ள எண்விரல் அங்குல அளவா

யுள்ள நாளமே அப்புமுதலிய இருபத்துமூன்று தத்துவங்களாகவும், நாளத்துமுட்களே அமரேசன் முதல் சிகேதன் ஈறுயுள்ள எழுபத்திரண்டு புவனங்களாகவும், நாளத்து நுனியிலும் பூவினடியிலும் பொருந்திய முடிச்சு மாயை யாகவும், பன்னிரண்டங்குல விரிவினை யுடையனவாயுள்ள எட்டு இதழ்கள் வித்தியாதத்துவங்கள் ஏழும் சுத்தவித்தை என்னும் ஒன்றுங்கூடிய எட்டுத்தத்துவமாகவும், அறுபத்து நான்கு எனப்படும் கேசரவடிவம் ஈசுரம் சதாசிவம் என்னும் இரண்டுதத்துவமாகவும், அக்கேசரங்களுக்குள் உள்ளதும் ஓரங்குல உயரத்தினது மாகிய பொகுட்டு வடிவம் சத்திதத்துவமாகவும்,அப்பொகுட்டிற்காணப்படும் ஐம்பத்தொரு பீசவடிவஞ் சிவதத்துவமாகவுங் கற்பிக்கப்பட்ட இருதயபங்கயத்தை ஆசனமாக்கி அதிலே சசிநியாதி அட்டத்திரிம்சத்கலாரூபமாகக் கற்பிக்கப்பட்ட சிவலிங்கப்பெருமானைக் கொல்லாமை, ஐம்பொறியடக்கல்,பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுஷ்பங்கொண்டு திருவைந்தெழுத்தால் அர்ச்சனைசெய்வதை உணர்த்துவது கிரியையில்ஞானம்.

பீடலிங்கரூபமாயுள்ள சதாசிவம் சிவசாதாக்கியம்,அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கன்மசாதாக்கியம் என்னும் ஐவகைச்சாதாக்கியங்களுள்ளே ஒன்றாகிய கன்மசாதாக்கியமேயாம். சுத்தமாயையினின்று தோன்றியதாய், அதிசூக்குமமாய், அளவிலாவொளியாய், தியானிப்பவர்களுக்கு ஆகாயத்திலே மின்னல்போல விளங்குவதாயுள்ளது சிவசாதாக்கியம்; கலைகளுக்கு அப்பாற்பட்டதாய், ஸ்தம்பாகாரமாகிய லிங்கமாய், கோடிசூரியப்பிரகாசமாய், சோதியினூடே அந்தர்க்கதமூர்த்தியாயுள்ளது அமூர்த்திசாதாக்கியம்; காலாக்கினிக்கொத்த ஒளியையுடையதாய், காணத்தகும் வடிவுடையதாய், இச்சாஞானக்கிரியையை விளக்கும் முக்கண்களோடு கூடிய திருமுகமொன்றுடையதாயுள்ளது மூர்த்திசாதாக்கியம்; தூய்தாய், படிகப்பிரகாசமாகிய திவ்வியலிங்கமூர்த்தியாய், நான்குதிரு

முகமும் பன்னிரண்டுகண்ணும் எண்புயமும் உடையதாயுள்ளது கர்த்திருசாதாக்கியம்; நாதமயமாகிய லிங்கமும் விந்துமயமாகிய பீடமுங்கூடியதாயுள்ளது கன்மசாதாக்கியம். லிங்க என்னுந்தாது சித்திரித்தல் என்னும் பொருட்டாதலால், படைத்தல் காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய பரமேசுரப் பிரபாவமே லிங்கமெனப்படும். சிவத்துக்குப் பெயராகிய லிங்கம் என்னும் பதம், உபசாரத்தால் அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைல முதலியவற்றிற்கும் வழங்கும். இச்சிவலிங்கத்திலே நியசிக்கப்படும் ஈசானம் முதலிய ஐந்துமுகங்களினும் சிவசாதாக்கியம் முதலிய ஐந்து சாதாக்கியங்களும் அமையும். சிவலிங்கமகிமை உருத்திரகிருதயோபநிடதம் முதலிய உபநிடதங்களிலே பேசப்படும். பீடவடிவமாயுள்ள சிவசத்தியினதும், லிங்கவடிவமாயுள்ள சிவத்தினதும் பிரபாவம் பூதமுதல் நாதபரியந்தமாயுள்ள நிலையியற்பொருள் இயங்கியற்பொருள்களெங்கும் தோணிப்பதை உய்த்துணர்க. அரசனுக்குத் தொண்டுசெய்து பிழைக்கும் வேலைக்காரனை அரசனேயென்று அழைத்தல் உபசாரம்பற்றிக் குற்றமாகாது; அரசனை வேலைக்காரனென்று அழைத்தல் இராசதூஷணமாய்முடியும். அதுபோலத் தேவர் மனிதர் முதலாயினோர் தோற்றத்தைச் சிவலிங்கப் பிரபாவத்துக்கு ஏற்றலாம். அதிசுத்தமாகிய சிவலிங்கக்குறியை அசுத்தக்குறிகளாமென நினைப்பினும் சிவதூஷணமாய் முடியும். இவ்வுண்மைகளை வேதாகமங்கள் வாயிலாக அறியும் பெருவாழ்வைப்பெறாத கீழ்மக்கள் சிவனைத் தூஷிக்கும்படி இயற்றிய சுலோகங்களும் பிறவும் புன்மொழிகளாமென்பது துணியப்படும்.

ஆறாவது

யோகபாதப்பிரகரணம்.

அகத்தொழின் மாத்திரையானே சிவபெருமானுடைய அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு, யோக

மெனப்படும். அது யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என நால்வகைப்படும்.

க. விபூதி உத்தூளனம்; பிரணவத்தினுல் ரேசக பூரக கும்பகஞ் செய்தல்; கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர்மனைவியரையும் பொதுமகளிரையும் விரும்பாமையாகிய ஆண்டகைமை, இரக்கம், வஞ்சனை இல்லாமை, பொறையுடைமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், சுசியுடைமை என்னும் இயமம்; தவம் மனமுவந்திருத்தல், கடவுளுண்டென்னும் விசுவாசம், பாவத்துக்குப்பயந்து தேடியபொருளைச் சற்பாத்திரமாயுள்ளவருக்குக் கொடுத்தல், தன்னின் மூத்தோரைவழிபடுதல், உயிர்க்குறுதிபயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலம் செல்வம் அதிகாரம் முதலியவைகளினலே கெர்வமின்றி யடங்கி யொழுகுதல், தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல், செபம் விரதம் என்னும் நியமம்; முதலியவைகளை உணர்த்துவது யோகத்திற் சரியை.

உ. பதினாறுமாத்திரையளவுக்கு வாயுவைப்பூரித்து, அறுபத்திநாலுமாத்திரையளவுக்குக் கும்பித்து, முப்பத்திரண்டுமாத்திரை யளவுக்கு ரேசித்தல்; பிரணவத்தை உச்சரித்துவாயுவை உள்வாங்குதல், இருபத்தோராயிரத்தறுநூறு வாயுக்களைத் தினவழியிலே குறைத்தல், இரண்டு நாசியினுலும்வாயுவைப் பல்காலுள்வாங்குதல், புருவமத்தியிலே தியானித்தல், வாயுவைக் கபாலத்தினின்றுந் தோன்றி ஒடுங்கினதாகத் தியானித்தல், வாயுவையடக்கிக் கன்னமூலத்தால் விடுதல், உடம்பை பூரிப்பித்தல், வாயுவை எப்போதும் மேனோக்கிச் செலுத்துதல், சித்திரநாடி வச்சிரநாடி சுழுமுனநாடிகளிலே வாயுவைச் செலுத்துதல், உபத்தத்தால் வாயுவை ஏற்றல், பிரமரந்திரந் திறப்பித்தல், பிரசாதவழியிலே வாயுவைச் செலுத்துதல், நீர் உதிரம் முதலிய தாதுக்களை

அடக்குதல் முதலியவைகளை யுணர்த்துவது **யோகத்திற்கிரியை.**

௬. "உச்சுவாசம் நிச்சுவாசம் இரண்டையும் அடக்கி, சுழுமுனைமார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி, விஷயங்களின்வழி மனசைச் செல்லவொட்டாமல் திருப்பி, ஒருகுறிப்பிலே நிறுத்தி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினை என்னு மாறாதாரங்களின் அந்தர்மாதிருகாக்கிரமத்தை அறிந்து, அவ்வவ்வாதாரங்களின் அதிதேவதைகளைத் தியானித்து, அவ்வாறாதாரங்களினும் அசபாசத்தி சிவான்மிகையாய் நிற்கும் முறைமையைப்பார்த்து, மூலாதாரந்தொடங்கி விநாயகர் முதலாகிய தேவதைகளைப் பொருந்தி, அபிமுகம்பண்ணிக்கொண்டு ஆறாதாரத்துக்கும் மேலாகிய பிரமரந்திரமளவும் அசபையுடன்சென்றணைந்து, அந்தப் பிரமரந்திரத்திலே அதோமுகமாய்ச் சகஸ்ரதளமாயிருக்கிற தாமரைமுகையைச் சோதி சோதிபதோச்சாரணத்தாலே உதிக்குஞ் சிவார்க்கனாலே அலரச்செய்து, அந்தத் தாமரைப்பூவின் கேசராக்கிரத்திலே உள்ள சந்திரமண்டலத்தை ஆகுஞ்சனஞ் செய்தலினாலே மூலாக்கினியை அக்கினிபீசாக்கர உச்சாரணத்தினாலே எழுப்பி, நாடிசக்கரத்தைப் பேதித்து, அவ்வக்கினியினாலே சந்திரமண்டலத்தை இளகப்பண்ணி, அந்த அமிர்தத்தை சர்வ நாடிவழியாக நிரப்பி அவ்விடத்திலுண்டாகிய சுகோதயத்தில் அந்தமயமான ஞானாமிர்தாவத்தையை அடைந்துநின்று, சோமசூரியாக்கினிப் பிரகாசாதிகளாகிய பிரத்தியேகப் பிரகாசங்களெல்லாஞ் சூரியோதயத்திலே நட்சத்திராதிப்பிரகாசங்கள் அடங்கினாற்போலத் தன்னிடத்தடங்கச் சர்வதோமுகமாய் சுவயபரப்பிரகாசமாய் இருக்கின்ற பூரணப்பிரகாசத்தைப் பாவிப்பதை" யுணர்த்துவது **யோகத்தில் யோகம்.**

காலைநேர்பெறவோட்டியேகனலினைமூட்டிப்
பாலமார்பயன்வீட்டியேதன்னுருபடிவத்
தேனுமன்பினின்மஞ்சனமாட்டியேயிறைக்குச்
சீலமாமலர்சூட்டியுட்பூசனைசெய்தான். (க)

கீலமூவாயிரங்கழிந்தபின்முறை
மாலுறுமருத்தெனுமாவைத்தூண்டியே
மூலவெங்கனலினைமுடுக்கிமூட்டுரு
மேலுறுமமிர்தினைமிசைதன்மேயினான். (உ)

ச. பிருதிவியைத்தியானித்து வச்சிரகாயம்பெறுதல்; சலத்தைத்தியானித்து வாயுபவனங்களை ஒடுக்கி நீரிலே நீட்டித்தல் நிற்றல் கிடத்தல் செய்தல்;தீயைத்தியானித்துக் கபாலத்தை வெடிக்கச்செய்தல், சரீரத்தை வெந்த புரிபோலாக்கல், தீயிலே நிற்றல் இருத்தல் கிடத்தல் செய்தல்; வாயுவைத் தியானித்து, காயத்தோடு ஆகாயத்திலே பறத்தல் பரகாயப்பிரவேசஞ் செய்தல்; ஆகாயத்தைத் தியானித்துச் சரீரம் உயிர் அறிவு முதலியவைகளைச் சூனியமாக்கி அணிமா மகிமா முதலிய சித்திகளைப் பெறுதல்; புருவமத்திலே கண்ணொளி மின்னொளி விந்து வொளி உள்ளொளிமுதலியவைகளைத் தியானித்தல்;விந்துநாதங்களைத் தியானித்து ஒடுங்கியவிடத்துக் கடல் மணி முதலியவைகளின் தொனியைக்கேட்குதல்; என்பவைகளை உணர்த்துவது யோகத்தில் ஞானம்.

ஏழாவது

ஞானபாதப்பிரகரணம்.

புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத்தொழின்மாத்திரையானே உருவம் அருவுருவம் அருவம் என்னும் முத்திறத்திருமேனிகடந்த அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப்பிழம்பாய் நிறைந்துநின்ற சிவபெருமானிடத்துச் செய்யும் வழிபாடு ஞானமெனப்படும். ஞானம் ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தின் ஞானம் என நால்வகைப்படும்.

க. எவர்களாலும் அறிதற்கரிய சிவபெருமான் நம்பொருட்டன்றோ திருமேனிகொண்டெழுந்தருளினா ரென்றறி

ந்து, வேடத்தானும், சிவோகம்பாவனையானும், பிராசாத யோகஞ் செய்தலானும், சிவத்தோடு இரண்டறக்கலந்து நிற்கும் தன்மையானும், திருவேடமுடைய மெய்யடியாரையுஞ் சிவலிங்கப்பெருமானையும், கண்களிலேநின்று ஆனந்த பாஷ்பம் பொழிய, மொழிகுழற, உண்மையுணர்ந்து, வழிபடுதலை உணர்த்துவது **ஞானத்திற்சரியை.**

உ. பிருதிவியாதி தத்துவங்களைச் சடமெனக்காண்டலாகிய பூதசுத்தியும், திருவருளானன்றி அங்ஙனம் ஆன்மா அறியாதெனக் காண்டலாகிய ஆன்மசுத்தியும், கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றன வெல்லாந் திருவருளெனக் காண்டலாகிய திரவியசுத்தியும், திருவைந்தெழுத்தைச் சிவமுன்னாகக் கணித்தலாகிய மந்திரசுத்தியும், யாண்டும் நீக்கமறவியாபித்து நிற்குஞ் சிவபெருமான் இவ்விலிக்கத்தினும் உளர் எனக் காண்டலாகிய லிங்கசுத்தியுமாக ஐந்து சுத்தியுஞ் செய்து வழிபடுதலை உணர்த்துவது **ஞானத்திற்கிரியை.**

ங. யான் எனதென்னுஞ் செருக்கற்றுச் சிவனுடனாய் ஆன்மாநிற்றலையும், அதுபற்றி வினைநுகர்ச்சிப்பும் ஆர்ச்சிப்பும் ஆன்மாவுக்கில்லையாதலையும், அதுபற்றிக் குற்றமகலுதலையும் உணர்த்துவது **ஞானத்தில்யோகம்.**

அனையதோர்காலைவெள்ளியடுக்கலிற்சனகனாதி
முனிவரர்தமக்குத்தொல்லைமூவகைப்பதமுங்கூறி
யினியதோர்ஞானபோதமித்திறமென்றுமோனத்
தனிநிலையுநனைக்காட்டித்தற்பரனிருந்தானன்றே. (க)

நந்திமுற்கடையைப்போற்றஞானநாயகனுமண்ணன்
முந்துறைசனகனாதிமுனிவரர்தொழுதுகேட்ப
வந்தமிலாகமத்தினரும்பதமூன்றுங்கூறப்
புந்தியதொடுங்குஞானபோதகம்போதியென்றார். (உ)

நன்னலமைந்தர்காண்ஞானபோதகஞ்
சொன்னடையன்றததுயரநீங்கியே
யின்னிலைமோனமோடிருந்தநந்தமை
யுன்னுதலேயெனவுணரவோதினான். (ங)

கட்பமிமைத்துணைக்காட்சியோகினை
நட்பமதாகாவே நுதலிக்காட்டினே
னெட்பமோடிவ்வகையுரைப்பவாற்றவுந்
தெட்பமதடைந்தனர்விதியின்சேயினேர். (ச)

நால்வருணர்ந்திடநாயகன்ஞான
மூலவியோகமுதற்பொருள்காட்டி
யேலவிருந்தனன்யாவருமேகக்
காலமிதன்றெனவேகழறுற்ருன். (ரு)

இருவருமுணராவண்ணலேனவெள்ளெயிறியாமை
சிரநிரையனந்தகோடிநிரைத்திமூரந்திற்சீர்கொள்
கரதலமொன்றுசேர்த்திமோனமுத்திரையைக்காட்டி
யொருகணஞ்செயலொன்றின்றியோகுசெய்வாரினுற்ருன். (சு)

கைத்தலமொன்றிலே கநிட்டிகை அநாமிகை மத்திமை என்னும் மூவிரல்களோடு இயல்பாகவே சேர்ந்துநிற்குந் தர்ச்சனியை, அவற்றினின்று வேறுபிரித்து, அங்குட்டத்தோடு ஏகமாய் அடங்கிநிற்க அமைத்து மோனமுத்திரை காட்டல், ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களோடு இயல்பாகவே சேர்ந்துநின்ற ஆன்மாவை அவற்றினின்று வேறு பிரித்து, சிவனுடைய ஞானானந்த வடிவமாகிய திருவடி நிழலிலே அடக்கிநிற்கும் ஞானயோகத்தின் மௌனநிலையை உணர்த்தும். இது, "மும்மலம்வேறுபட்டொழியமொய்த்துயிர், அம்மலர்த்தாணிழலடங்குமுண்மையைக், கைம்மலர்க் காட்சியிற் கதுவநல்கிய, செம்மலையலதுளஞ் சிந்தியாதரோ." என்னுஞ் செய்யுளான் அறிக.

ச. அஞ்ஞானிகளாயினேர் மருண்மேலீட்டினலே சிவம் முற்றுந் தோன்றப்பெருது பிரபஞ்சவாசனையோடு நிற்குநிலைபோல, சிவஞானிகளாயினேர் அருண்மேலீட்டினலே பிரபஞ்சவாசனை முற்றுந் தோன்றப்பெருது சிவத்தோடு (அத்துவிதமாய்) நிற்குநிலையை உணர்த்துவது ஞானத்தின் ஞானமாம்.

எட்டாவது

பக்திப்பிரகரணம்.

சிவசுப்பிரமணியருடைய திருவடிக்கண்ணே வைக்கப்படுகின்ற தலையன்பானது அவருடைய அகண்டாகார பரிபூரணத்திலே இரண்டறக் கலத்தலாகிய அத்துவித நிலையைக் கொடுக்கும்.

ஒன்றினியளிப்பதுளதுன்னடியம்யாக்கை
நின்றிடுபெகற்றுணையுநின்னிருகழற்கண்
மன்றதலையன்புறவரந்தருதியெந்தா
யென்றிடலுநன்றெனவிரங்கியருள்செய்தான். (௧)

கோலநீடியநிதிபதிவாழ்க்கையுங்குறியேன்
மேலையிந்திரனரசினைக்கனவினும்வெஃகேன்
மாலயன்பெறுபதத்தையும்பொருளெனமதியேன்
சாலநின்பதத்தன்பையேவேண்டுவன்றமியேன். (௨)

அந்தநல்வரமுத்தியினரியதொன்றதனைச்
சிந்தைசெய்திடுதேவத்தரும்பெறுகிலர்சிறியே
னுய்ந்திடும்வகையருள்செயவேண்டுமென்றுரைப்ப
வெந்தைகந்தவேளுனக்கதுபுரிந்தனமென்றான். (௩)

பத்தியானது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென நால்வகைப்படும். அரக்கானது வெய்யிலின்முன் இருந்து வெதும்புதல் போல்வது மந்ததரபத்தி. மெழுகானது வெய்யிலுக்கு எதிர்ப்படின் உருகுதல் போல்வது மந்தபத்தி. நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது தீவிரபத்தி. தைலதாரையானது சிறிதும் இடையறாது ஒழுகுதல் போல்வது தீவிரதரபத்தி. பத்தி அன்பு என்பன ஒருபொருட்சொற்கள். அன்பாவது தொடர்புடையார் மாட்டுச் செல்வதாகிய கருணை. அவ்வன்பானது தலையன்பு இடையன்பு கடையன்பு என மூவகைப்படும். நாயகன் இறந்தான் என்று கேட்டமாத்திரத்தே நாயகி இறத்தல் தலை அன்பாகும். இது, "சூரபன்மன் இறந்தான் என அவன்மனைவி பதுமகோமளை கேட்டபோதே உயிர்துறந்தாள் என்றமையினாலே தெளியப்படும். நாயகனோடு இறந்தார் சுவர்க்கஞ்சே

ர்வர் எனவும், நாயகனோடு இறந்தார் புகழ்பெறுவரெனவும், நாயகனிறந்தபின்னர்ச் சோறுதின்று வாழ்கின்றகொடியாள் என உலகத்தார் தன்னை வைவர் எனவும், நினைந்து பல ஏதுக்கள் வாயிலாக நாயகியானவள் நாயகன் தேகவியோகஞ்செய்தபோது சககமனஞ்செய்தல் இடையன்பாகும். தலையன்பு இடையன்பு என்னும் இரண்டுமல்லாதது கடையன்பாகும். இங்ஙனம், நாயகி நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவனைக்கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். அவ்வாறே, பக்குவான்மா ஆன்மநாயகருடைய பெயர்கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவரைக்கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். நாயகனது பெயர்கேட்டவுடன் வசமழியுந் தலையன்புடைய நாயகிக்கு அது கேட்டபோடு காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி, முறுகிவளரும் அன்பின்பெருக்கம் இத்துணைத்தென்று கூறுதல் கூடாதன்றோ! அதுபோலவே, ஆன்மநாயகருடைய திருநாமத்தைக்கேட்டபோது வசமழியும் ஒருவற்கு அவரைக் காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி முறுகிவளர்ந்த தீவிரதரமாகிய அன்பின்பெருக்கத்தை இத்துணைத்தென்று கூறுதல் கூடாது. தீவிரதரமாகிய தலையன்பானது அத்துவிதநிலையை விளக்குமென்பது, "கோலநீடிய நிதிபதிவாழ்க்கையுங் குறியேன்" எனவும், "அந்தநல்வரம் முத்தியிலரியதொன்று" எனவும் மேலைச்செய்யுள்களிலே போந்த வீரவாகுதேவருடைய கருத்தை அடக்கிய, "ஆரணத்தனு நகரமேலடுத்தவாரணனும், வாரணந்தனு மற்றுளகணங்களும்பணியு, மோரணத்தரு முதன்மையிலிருத்தினையினிநின்,பூரணத்திரண்டறக்கலப்பதுதரப்புகறி." என்னுந் தணிகைப்புராணச் செய்யுளாற்றுணியப்படும்.

உலோகாயதன் பொருட்சார்பிலும், பௌத்தன் முதலாயினோர் மற்றைத்தேவர்கள் சார்பினும் வைக்கின்ற தலையன்பு இடையன்பு கடையன்புகளும், அவர்களாலே பற்றப்

பட்ட பொருள்களுக்கும், தேவர்களுக்கும் தானமாகிய நிலை
யில்லாத தத்துவ சமூகம்போலவே, நிலையில்லாதனவாம்.
ஆதலினால், "ஆறாறையுநீத் ததன்மேனிலையைத்" தந்தரு
ளும் சிவசுப்பிரமணியருடைய திருவடிக்கண்ணே வைக்கப்
படுகின்ற மெய்யன்பொன்றே நித்தியமும் மெய்ம்மையுமாம்
என்பது உண்மைநூற்றுணிபு. இந்த உறுதியாகிய அன்பு,
அநேக இலக்கண இலக்கியங்களைச் சந்தேகவிபரீதமின்றித்
தெளிந்தமையினாலே, வேதசிவாகமங்களிலேபோந்த பதி பசு
பாச இலக்கணங்களை வாசித்துக் கற்றறிந்துகொண்டோம்
என்னும் அகங்காரத்துக்கும், அளவு கடந்த வித்துவசாமர்
த்தியத்துக்கும், குசாக்கிரமதிநுட்பத்துக்கும், அணுத்து
ணையேனும் எட்டாது; அது, அனந்தகோடி முற்சென்மங்
களிலே செய்து ஈட்டிய தவத்தினாலும் திருவருளினாலும்
கிட்டும்! கிட்டும்!! சிவதத்துவவிவேகம்:—"உன்றிருவடிக்கீ
ழுறுதியாமன்பு முன்றிருவருளினாற்கிடைப்ப, தன்றிநூல்ப
லவுமாய்ந்ததாலுரை செயளப்பருந் திறமையான்மதியான்,
மன்றவேகிடைப்பதன்று மற்றதனைமாதவஞ் செய்திலாக்க
யமை, துன்றியபுலையோர்யாங்ஙனம்பெறுவார்சோதியேகரு
ணைவாரிதியே." "உலகர்சேருறுதிப்பய னைவற்றினுக்குமு
றைவிடமாய்த்துயர்முழுதும், விலகுறத்துமிக்குங்கணிச்சி
யாமுன்றாள் விரைமலர்க்கியற்றுமெய்ப்பத்தி, யலகிலாப்பி
றவிதொறும்புரிதவத்தாலல்ல தெவ்வாற்றினுமரிதே, நலம
தொன்றடைதற்குறுமிடையூறுநாதனே பலவுளவன்றே."

கருமயாகஞ் செய்வோருக்கும், தவயாகஞ் செய்வோ
ருக்கும், செபயாகஞ்செய்வோருக்கும், தியானயாகஞ்செய்
வோருக்கும், ஞானயாகஞ்செய்வோருக்கும் நமதான்மநாய
கர் வசப்படார்; பக்தியாகஞ் செய்வோருக்கே வசப்படுவர்.
வாயுசங்கிதை:—"கருமமாதவஞ்செபஞ்சொல் காசறுசமாதி
ஞானம, புரிபவர்வசமதாகிப் பொருந்திடேம்புரையொன்றி
ன்றிக், கிரிவறுமன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்துநிற்
போ, முறைசெய்வோமவர்முனெய்தி யவருளத்துறைவோ
மென்றும்."

அநந்தகோடிரூபாவாக மதிக்கப்படும் ஓர்பெரிய மாணிக்கரத்தினந் தனக்கு வாய்க்குமாயின் ஒருவன், அதனை நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் உண்டாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் ஓர்போதும் மறவாதிருத்தல்போல; லௌகிக கருமஞ்செய்யும் யாமெல்லாம் பெண்கள்மாட்டு வைக்கும் ஆசையின் நூறாயிரத்தொருபங்கொடேனும், மாணிக்கசோதியினை ஒத்த ஒளியினையுடைய சிவசுப்பிரமணியக்கடவுளுடைய ஞானானந்த வடிவமாகிய திருவடியை நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், உண்டாலும், துயின்றாலும், விழித்தாலும், இமைத்தாலும் ஓர்போதும் மறவாதிருத்தல் வேண்டும். திருவிசைப்பா:—"தத்தையங்கனையார் தங்கண் மேல்வைத்த தயாவைநூறாயிரங்கூறிட், டத்திலங்கொருகூறுன்கண்வைத்தவருக் கமருலகளிக்குநின்பெருமை, பித்தனென்றொருகாற்பேசுவரேனும் பிழைத்தவைபொறுத்தருள்செய்யுங், கைத்தலமடியேன்சென்னிமேல்வைத்த கங்கைகொண்டசோளேச்சரத்தானே." இடையறாது முறுகிவளரும் அன்பின் முதிர்ச்சியிலே ஆன்மநாயகர் விளங்குவர்: ஆதலால், அன்பும் சிவமும் இரண்டற அபேதமாய் நிற்கும். திருமந்திரம்:—"அன்புசிவமிரண் டென்பரறிவிலா, ரன்பே சிவமாவ தாருமறிகில, ரன்பேசிவமாவ தாருமறிந்தபி, னன்பேசிவமா யமர்ந்திருப்பாரே."

சுப்பிரமணியர்.

இருப்பரங்குறைத்திடுமெஃகவேலுடைப்
பொருப்பரங்குணர்வுறப்புதல்விதன்மிசை
விருப்பரங்கமரிடைவிளங்கக்காட்டிய
திருப்பரங்குன்றமர்சேயைப்போற்றுவாம். (க)

சூரலைவாயிடைத்தொலைத்துமார்புகீண்
டீரலைவாயிடுமெஃகமேந்தியே
வேரலைவாய்தருவெள்ளிவெற்பொரீஇச்
சீரலைவாய்வருசேயைப்போற்றுவாம். (௨)

காவினன்குடி னுறுசாமர்பொன்னகர்
மேவினன்குடிவரவிளியச்சூர்முதல்
பூவினன்குடிலேயம்பொருட்குமாலுற
வாவினன்குடிவருமமலற்போற்றுவாம். (ரு)

நீரகத்தேதனைநினையுமன்பினோர்
பேரகத்தலமரும்பிறவிநீத்திடுந்
தாரகத்துருவமாந்தலைமையெய்திய
வேரகத்தறுமுகனடிகளேத்துவாம். (௬)

ஒன்றுதொருடலையொருவியாவிமெய்
துன்றுதொருடலைத்தொடங்கியைவகை
மன்றுதொருடியவள்ளல்காமுறக்
குன்றுதொருடியகுமரற்போற்றுவாம். (௭)

எழுமுதிரைப்புனத்திறைவிமுன்பூதன்
கிழமுதிரிளநலங்கிடைப்பமுன்னவன்
மழமுதிர்களிறெனவருதல்வேண்டிய
பழமுதிர்சோலையம்பகவற்போற்றுவாம். (௮)

ஈறுசேர்பொழுதினுமிறுதியின்றியே
மாறிலாதிருந்திடும்வளங்கொள்காஞ்சியிற்
கூறுசீர்புனைதருகுமரகோட்டம்வா
ழாறுமாமுகப்பிரானடிகள்போற்றுவாம். (௯)

சிவபெருமான்.

பாராகியேனைப்பொருளாயுயிர்ப்பன்மையாகிப்
பேராவுயிர்கட்குயிராய்ப்பிறவற்றுமாகி
நேராகித்தோன்றலிலதாகிநின்றான்கழற்கே
யாராதகாதலொடுபோற்றியடைதுமன்றே.

கந்தபுராணநவநீதமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

வேலுமயிலுந்துணை.

கச்சியப்பசிவாசாரியர் திருவடிவாழ்க.

☞ க00-வது பக்கம் கூ-வரி துரியம்;="சுழுத்தி; சின்மாத்திரமாய்த் தன்னைக்காண்பது துரியம்;" மற்றையபிழைகளைத் திருத்தி வாசித்துக்கொள்க.

தேவாரம்.

ஈழதேசத்தில் உள்ளஸ்தலங்கள்

௧. திருக்கோணமலை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிரைகழலரவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி, வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியணிவிடையர், கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக், குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (௧)

கடிதெனவந்தகரிதனையுரித்தவ்வுரிமேனிமேற்போர்ப்பர், பிடியனநடையாள்பெய்வளைமடந்தைபிறைநுதலவளொடுமுடனாய்க், கொடிதெனக்கதறுங்குரைகடல்சூழ்ந்துகொள்ளமுனித்திலஞ்சுமந்து, குடிதனைநெருங்கிப்பெருக்கமாய்த்தோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. (௨)

பனித்திளந்திங்கட்பைந்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார், கனித்திளந்துவர்வாய்க்காரிகைபாகமாகமுன்கலந்தவர்மதின்மேற், றனித்தபேருருவவிழித்தழனாகந்தாங்கியமேருவெஞ்சிலையாக், குனித்ததோர்வில்லார் குரைகடல்சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே. (௩)

பழித்திளங்கங்கைசடைமுடிவைத்துப்பாங்குடைமதனனைப் பொடியா, விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனார்கமலமார்பாதர், தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரளஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து, கொழித்துவன்றிரைகள்கரையிடைச்சேர்குங்கோணமாமலையமர்ந்தாரே. (௪)

தாயினுநல்லதலைவரென்றடியார்தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயினுமனத்துமருவிநின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்பிணியுந்தொழிலர்பானீக்கிநுழைதருநூலினர்ஞாலங்
கோயிலுஞ்சுனையுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. ()

' பரிந்துநன்மனத்தால்வழிபடுமாணிதன்னுயிர்மேல்வருங்கூற்றைத், திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்நம்மையாளுடையார், விரிந்துயர்மௌவன்மாதவிபுன்னைவேங்கைவண்

செருந்திசம்பகத்தின், குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ் கோணமாமலையமர்ந்தாரே. (சு,எ)

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பே று, தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பறியாதவர்வேள் வி, தடுத்தவர்வனப்பால்வைத்ததோர்கருணைதன்னருட்பெருமையு ம்வாழ்வுங், கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலைய மர்ந்தாரே. (அ)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன் புக்க, பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும் பிரம, னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பெயர்ந்த நன்மாற்கும், குருவராய்நின்றார்குரைகழல்வணங்கக்கோணமாமலை யமர்ந்தாரே. (கூ)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலாதனபுறங்கூற, வென்றநஞ்சுண்ணும்பரிசினரொருபான் மெல்லியலொடுமுடனாகி த், துன்றுமொண்பவ்வமவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிரைபலமோ திக், குன்றுமொண்கானல்வாசம்வந்துலவுங்கோணமாமலையமர்ந் தாரே. (க0)

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக், கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த, னு ற்றசெந்தமிழார்மாலையீரைந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர், சு ற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப் பொலி ந்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம் - கோணேசுரர்.

தேவிதிருநாமம் - மாதுமையாள்.

உ. திருக்கேதீச்சரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருதுகுன்றமாமேருவினாணரவாவனலெரியம்பாற்
பொருதுமூவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதியெந்நாளுங்

கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டங்
கருதநின்றகேதீச்சரங்கைதொழக்கடுவினையடையாவே. (௧)

பாடல்வீணையர்பலபலசரிதையரெருதுகைத்தருநட்ட
மாடல்பேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்த
ரீடமாவதுவிருங்கடற்கரையினிலெழிறிகழ்மாதோட்டங்
கேடிலாதகேதீச்சரந்தொழுதெழக்கெடுமிடர்வினைதானே. (௨)

பெண்ணோர்பாகத்தர்பிறைதவழ்சடையினரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர்பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையினுழல்பவருயர்தருமாதோட்டத்
தண்ணனண்ணுகேதீச்சரமடைபவர்க்கருவினையடையாவே. (௩)

பொடிகொண்மேனியர்புலியதளரையினர்விரிதருகரத்தேந்தும்
வடிகொண்மூவிலைவேலினர்நூலினர்மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம்பரிந்தசிந்தையராகி [போமே.
முடிகள்சாய்த்தடிபேணவல்லார்தம்மேன்மொய்த்தெழும்வினை

நல்லராற்றவுஞானநன்குடையர்தம்மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புகழெந்தைகேதீச்சரமிராப்பகனினைந்தேத்தி
யல்லலாசறுத்தரனடியிணைதொழுமன்பராமடியாரே. (௫)

பேழைவார்சடைப்பெருந்திருமகடனைப்பொருந்தவைத்தொருபாக
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழின்மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தநீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே. (௬)

பண்டுநால்வருக்கறமுரைத்தருளிப்பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனார்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழின்மஞ்ஞைநடமிடுமாதோட்டந்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே. (௭)

தென்னிலங்கையர்குலபதிமலைநலிந்தெடுத்தவன்முடிதிண்டோ
டன்னலங்கெடவடர்த்தவற்கருள்செய்ததலைவனார்கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளும்பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடுமடியவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே. (௮)

பூவுளானுமப்பொருகடல்வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநின்னடியிணைகாண்கிலாவித்தகமென்னாகு
மாவும்பூகமுங்கதலியுநெருங்குமாதோட்டநன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந்திருந்துகேதீச்சரத்திருந்தவெம்பெருமானே. (௯)

புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர்புறனுரைச்சமணாத
ரெத்தராகிநின்றுண்பவரியம்பியவேழைமைகேளேன்மின்
மத்தயானையைமறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதீச்சரமடைமின்னே. (க0)

மாடெலாமணமுரசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளையணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலை
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

நத்தார்படைஞானன்பசுவேறிந்நனைகவிழ்வாய்
மத்தம்மதயானையுரிபோர்த்தமணவாளன்
பத்தாகியதொண்டர்தொழுபாலாவியின்கரைமேற்
செத்தாரெலும்பணிவான்றிருக்கேதீச்சரத்தானே. (க)

சுடுவார்பொடிநீறுந்நலதுண்டப்பிறைக்கீளுங்
கடமார்களியானையுரியணிந்தகறைக்கண்டன்
படவேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றிடமாவுறைகின்றான்றிருக்கேதீச்சரத்தானே. (உ)

அங்கம்மொழியன்னாரவரமரர்தொழுதேத்த
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தபிறைசூடினன்பாலாவியின்கரைமேற்
செங்கண்ணரவசைத்தான்றிருக்கேதீச்சரத்தானே. (ங)

கரியகறைக்கண்டன்னலகண்மேலொருகண்ணான்
வரியசிறைவண்டியாழ்செயுமாதோட்டநன்னகருட்
பரியதிரையெறியாவருபாலாவியின்கரைமேற்
றெரியுமறைவல்லான்றிருக்கேதீச்சரத்தானே. (ச)

அங்கத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வங்கம்மலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பங்கஞ்செய்தமடவாளொடுபாலாவியின்கரைமேற்
றெங்கம்பொழில்சூழ்ந்ததிருக்கேதீச்சரத்தானே. (ரு)

வெய்யவினையாயவ்வடியார்மேலொழித்தருளி
வையமலிகின்றகடன்மாதோட்டநன்னகரிற்
பையேரிடைமடவாளொடுபாலாவியின்கரைமேற்
செய்யசடைமுடியான்றிருக்கேதீச்சரத்தானே. (௬)

ஊனத்துறுநோய்களடியார்மேலொழித்தருளி
வானத்துறுமலியுங்கடன்மாதோட்டநன்னகரிற்
பானத்துறுமொழியாளொடுபாலாவியின்கரைமே
லேனத்தெயிறணிந்தான்றிருக்கேதீச்சரத்தானே. (௭)

அட்டன்னழகாகவரைதன்மேலரவார்த்து
மட்டுண்டுவண்டாலும்பொழின்மாதோட்டநன்னகரிற்
பட்டவரிநுதலாளொடுபாலாவியின்கரைமேற்
சிட்டன்னமையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. (௮)

மூவரெனவிருவரெனமுக்கண்ணுடைமூர்த்தி
மாவின்கனிதூங்கும்பொழின்மாதோட்டநன்னகரிற்
பாவம்வினையறுப்பார்பயில்பாலாவியின்கரைமேற்
றேவன்னெனையாள்வான்றிருக்கேதீச்சரத்தானே. (௯)

கறையார்கடல்சூழ்ந்தகழிமாதோட்டநன்னகருட்
சிறையார்பொழில்வண்டியாழ்செயுங்கேதீச்சரத்தானை
மறையார்புகழூரன்னடித்தொண்டனுரைசெய்த
குறையாத்தமிழ்பத்துஞ்சொலக்கூடாகொடுவினையே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம் - கேதீச்சுவரர்.
தேவிதிருநாமம் - கௌரியம்பிகை.